Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 158

ஞாயிற்றுக்கிழமை
03 மே 2026

சித்திரை 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –16+08
விலை – ரூபா 60

## அரபிக் கடலில் தாழமுக்கம்?

யாழ்ப்பாணம், மே 3
இந்த மாதத்தின் மத்திய பகுதியில் அரபிக் கடற்பரப்பில் தாழமுக்கம் உருவாகும் சாத்தியம் உள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடப் பீடாதிபதியும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார். »14

திஸ்ஸ விகாரைப் பிடியிலுள்ள

# பொதுவீதியை விடுவித்தால் நல்லிணக்கம் சிதையுமாம்!

## வலி.வடக்குத் தவிசாளரை அழைத்து பலாலிப் பொலிஸார் மிரட்டல்

யாழ்ப்பாணம், மே 3
தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பவானி வீதியை விடுவித்தால், இன நல்லிணக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படும் என்றும், ஆதலால் இந்த நடவடிக்கையைக் கைவிடுமாறும் வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனிடம் பலாலி பொலிஸார் மிரட்டும் தொனியில் கூறியுள்ளனர். »14

## வடக்கு மாகாணத்தில் மழை செறிவடையும்!

பேராசிரியர் பிரதீபராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 3
வடக்கு மாகாணத்தில் கடந்த சில நாள்களாக நிலவிவரும் மழையுடனான காலநிலை, நாளை திங்கட்கிழமையில் இருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக் »14

செம்மணிப் புதைகுழிக்குள்

## மரத்தாலான பெட்டிபோன்ற உருவமொன்று அடையாளம்

யாழ்ப்பாணம், மே 3
செம்மணிப் புதைகுழிக்குள் மரத்தாலான பெட்டியைப்போன்ற உருவமொன்று அடையாளம் காணப்பட்டுள்ளது என்று காணாமல் ஆக்கப்பட்ட »14



## செம்மணி மனிதப்புதைகுழியில் மேலும் இரு என்புத்தொகுதிகள்

யாழ்ப்பாணம், மே 3
அரியாலை செம்மணி மனிதப்புதைகுழியில் இருந்து மேலும் இரண்டு என்புத் தொகுதிகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன. »14

## சிறுமி மீது துர்நடத்தை; சந்தேகநபர் மறியலில்!

யாழ்ப்பாணம், மே 3
8 வயதுச் சிறுமியை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் நபரொருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். »14

## அம்புலன்ஸ் பணியாளர்கள் மீது கிளிநொச்சியில் கோரத்தாக்குதல்

மாங்குளம் பொலிஸார் விசாரணை

முல்லைத்தீவு, ஏப். 3
அம்புலன்ஸ் சேவையில் ஈடுபடும் பணியாளர்கள் மீது கோரத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை »14

தேவாலயத்தில் வைத்து

## வயோதிபப் பெண்ணிடம் தங்கச்சங்கிலி அபகரிப்பு

அச்சுவேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 3
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேவாலயம் ஒன்றில் வைத்து, வயோதிபப் பெண்ணிடம் 3 பவுண் தங்கச்சங்கிலி அபகரிக்கப்பட்ட நிலையில் அது »15

## எரிபொருள்களின் விலைகள் நேற்றுச் சடுதியாக அதிகரிப்பு

விரிவு பக்கம்:- 16

சட்டவிரோத மீன்பிடிப்போர் கைவரிசை

## முல்லை. மீனவர்கள் மீது நந்திக்கடலில் தாக்குதல்!

இருவர் மருத்துவமனையில்



முல்லைத்தீவு, மே 3
முல்லைத்தீவு நந்திக்கடல் களப்புப் பகுதியில் சட்டவிரோத மீன் மற்றும் இறால்பிடியில் ஈடுபட்ட நபர்கள், அதைத் தட்டிக்கேட்ட முல்லைத்தீவு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியதில் இருவர் மருத்துவ »14

## சஞ்சீவி

"பிக்குவை பின்னால நிண்டு இயக்கிறது ஆரெண்டது இப்ப தெரிஞ்சிட்டு கண்டியளோ"




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 02.05.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4419
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 07 39 47 59
விசேட எழுத்து T

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 02.05.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1486
வெற்றி இலக்கினம் தனுஷம்
வெற்றி இலக்கங்கள் 05 32 56 61

**NLB ஜய**
திகதி 02.05.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0445
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 4 3 6 1

**மெகா பவர்**
திகதி 02.05.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2525
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 08
வெற்றி இலக்கங்கள் 21 61 68 76

**மஹஜன சம்பத**
திகதி 02.05.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6177
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 1 1 2 3 1 6

**தன நிதானய**
திகதி 02.05.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2207
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 07 30 31 68
விசேட எழுத்து B

**சுப தவசக்**
திகதி 02.05.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0293
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 01 34 59

# மின் கட்டணம் குறைப்பு; அரசாங்கம் நிறைவேற்றும்

## ஜனாதிபதி வாக்குறுதி

கொழும்பு,மே.3

**மின்கட்டணத்தை மூன்றில் ஒரு பங்காகக் குறைப்பதாக வழங்கிய வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றுவேன். புதுப்பிக்கத்தக்க சக்தி வளப்பயன்பாட்டை மேம்படுத்துவதற்கு உரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

மஹரகம பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் வலுசக்தித் துறையில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் எரிபொருள் மற்றும் நிலக்கரி விலைகள் அதிகரித்துள்ளமை மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைந்துவருகின்றமை ஆகிய இதற்கு காரணங்களாகும். பொதுமக்களின் சுமையைக் குறைப்பதற்காக அரசாங்கம் தற்போது ஒரு லீற்றர் டீசலுக்கு 100 ரூபா மானியம் வழங்கியுள்ளது.

தற்போது ஒரு லீற்றர் டீசலின் உண்மையான விலை 482 ரூபாவாகும். ஆனால், அரசாங்கம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் ஊடாக ஒரு லீற்றருக்கு 100 ரூபா மானியம் வழங்குவதால் நுகர்வோர் அதனை 382 ரூபாவுக்குக் கொள்வனவு செய்ய முடிகிறது. உலக சந்தையில் எரிபொருள் விலைகள் தொடர்ந்து அதிகரித்துவரும்போதிலும், எரிபொருள் மானியத்தை பராமரிப்பதற்காக அரசாங்கம் 60 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

மின்சாரத்துறையில் சவால்கள் காணப்படுகின்றன. நிலக்கரி விலையேற்றம் மற்றும் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைவடைந்துள்ளமை மின் உற்பத்திச்செலவில் அழுத்தத்தை அதிகரித்துள்ளது.

எந்தவொரு கட்டண அதிகரிப்பையும் மேற்கொள்ளாமல் 96 சதவீத மின் நுகர்வோருக்கு மின்சார மானியம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்காக 15 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளோம் - என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 02.05.2026 | தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0885
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கம் 6 9 2 3 3 8

**Super Ball DLB**
திகதி 02.05.2026 | தினம் சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3151
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கம் 13 24 50 61

**சனிதா DLB**
திகதி 02.05.2026 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கம் 11 31 69 70
வெற்றி வாரம் 5312

**SASIRI DLB**
திகதி 02.05.2026 | தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0981
வெற்றி இலக்கம் 16 30 47

**லக்ன ராசி**
திகதி 02.05.2026 | தினம் சனிக்கிழமை
மேஷம்
வெற்றி இலக்கம் 03 17 20 47
சீட்டிழுப்பு வாரம் 4863

**KAPRUKA DLB**
திகதி 02.05.2026 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து W
சுப்பர் இலக்கம் 05
வெற்றி இலக்கம் 29 31 41 71
வெற்றி வாரம் 2327

**அத கோடிபதி DLB**
திகதி 02.05.2026 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கம் 02 24 32 39
வெற்றி வாரம் 2977

## லொறிக்குள் சிக்குண்டு உதவியாளர் பலி

கொழும்பு,மே.3

அங்காடி கிளை ஒன்றுக்கு பொருள்கள் ஏற்றி வந்த லொறியின் பின்பகுதியில் சிக்குண்டு, அதன் உதவியாளர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல் நாவலப்பிட்டியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

கனரக லொறி பொருள்களை இறக்குவதற்காக பிரதான சாலையிலிருந்து பின்னோக்கி நகர்த்தப்பட்டுள்ளது. அப்போது, லொறியின் பின்புறத்துக்கும் அங்கிருந்த களஞ்சியசாலைச்சுவருக்கும் இடையிலான குறுகிய இடைவெளியில் லொறியின் உதவியாளர் எதிர்பாராத விதமாக சிக்குண்ட நிலையில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் 24 வயதுடைவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதியை நாவலப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர். (ச-இ)

## கரையோரப் பிரதேசங்களில் புதிய சுற்றுலா வலயங்கள்

கொழும்பு,மே.3

இலங்கையின் எழில்கொஞ்சும் கடற்கரைப் பிரதேசங்களில் புதிய சுற்றுலா வலயங்களை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அதன் முதற்கட்டமாக கொழும்பின் கொள்ளுப்பிட்டி கடற்கரைப் பிரதேசத்தில் புதிய சுற்றுலா வலயமொன்று உருவாக்கப்படவுள்ளது. குறித்த சுற்றுலாப் பிரதேசங்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை மட்டுமன்றி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலான அம்சங்களையும் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



முதல் காலாண்டில்

## வாகன இறக்குமதி அதிகரிப்பு 613 மில்லியன் டொலர் செலவு!

கொழும்பு,மே.3

இலங்கையில் வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, இந்த ஆண்டின் முதல் காலாண்டில் வாகன இறக்குமதி செலவினம் அதிகளவில் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கை 613 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான வாகனங்களை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

தனியார் மற்றும் வர்த்தக வாகனங்கள் உட்பட மார்ச் மாதத்தில் இலங்கை 195 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான வாகனங்களை இறக்குமதிசெய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டின் முதல் காலாண்டில் வாகன இறக்குமதி செலவினம் 900 சதவீதம் அதிகரித்திருந்தாலும், இந்த ஆண்டின் இறுதிக்குள் வாகன இறக்குமதி இயல்பு நிலைக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும், கடந்த ஆண்டின் முதல் காலாண்டில், நாட்டின் வாகன இறக்குமதி செலவினம் 61 மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஹஜ் யாத்திரை ஆரம்பம் யாத்திரிகர்கள் பயணம்!

கொழும்பு,மே.3

2026 ஆம் ஆண்டுக்கான புனித ஹஜ் யாத்திரை பருவம் தொடங்கியுள்ள நிலையில், இலங்கையிலிருந்து யாத்திகர்களின் முதல் குழு நேற்றுமுன்தினம் சவூதி அரேபியாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது.

முதல் கட்டமாக 325 பேரைக் கொண்ட குழுவினர் ஜித்தா நகருக்குப் புறப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு இலங்கையிலிருந்து புனித ஹஜ் யாத்திரைக்காக மொத்தம் 3,500 யாத்திரிகர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயண ஏற்பாடுகள் பல்வேறு கட்டங்களாக முன்னெடுக்கப்பட வுள்ளன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 02 . 1941



மறைவு
30 . 04 . 2026

(CR/47478) J-1

## இராசபூபதி துரைசிங்கம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**

மீசாலை கிழக்கை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசபூபதி துரைசிங்கம் அவர்கள் கடந்த (30.04.2026) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - வேதநாயகம் தம்பதியரின் அன்பு மகளும், துரைசிங்கம் அவர்களின் துணைவியாரும், வர்ணராஜ் (பப்புவா - நியூக்கினி) அவர்களின் பாசமிகு தாயாரும், கஜனாவின் அன்பு மாமியாரும், லக்சரா, கபிஸ்ரா, பிரஜீன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற இராஜலட்சுமி (மல்லிகா), தெய்வேந்திரம்பிள்ளை (மீசாலை), மகேந்திரன் (மீசாலை), சிவேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சேதுப்பிள்ளை, சிறிசாரதாமணி (ரஞ்சி), கமலாம்பிகை (கலா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2026) திங்கட்கிழமை பிற்பகல் 01.30 மணியளவில் மகிந்த மலர்ச்சாலையில் (No: 591, Galle Road, Mount Lavinia) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தகவல்: மகன் - து.வர்ணராஜ்**
**107A - 5/2 Northpole, King Residencies**
**W.A.Silva Mawatha, Wellawatte, Colombo - 6**
**077 704 1281**

# மரண அறிவித்தல்

மலர்வு
18 . 03 . 1952



உதிர்வு
30 . 04 . 2026

## வேல்முருகு இராமச்சந்திரன்

(ஓய்வுபெற்ற பிரதம அஞ்சல் அதிபர்)

பருத்தித்துறை தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வவுனியா இறம்பைக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேல்முருகு இராமச்சந்திரன் அவர்கள் கடந்த 30.04.2026 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை வேல்முருகு மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ராஜமாணிக்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், பாமதியின் அன்புக் கணவரும், பத்மநாபன் (லண்டன்), சங்கீதா (பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷாந்தினி (லண்டன்), சிவதர்சன் (கணக்காளர் சமுர்த்தி திணைக்களம் - வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவபாக்கியம் (லண்டன்), பத்மாவதி (ஓய்வுபெற்ற ஆசிரியர், இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), சிவபாலன் (பிரான்ஸ்), சிவகணேசன் (பிரான்ஸ்), சிவானந்தன் (ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர் - வவுனியா), யசோதா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தக்ஷித், சிவன்யா, பபிஷன், விதுர்சிக்கா, யஸ்விகா ஆகியோரின் அன்புப் பேரனும், அருளானந்தராஜா, கணாதீஸ்வரன், சசி, ஜெயந்தி, மல்லிகாதேவி, சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை உமாமகேஸ்வரன் வீதி, இறம்பைக்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 08.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 22/9, உமாமகேஸ்வரன் வீதி,**
**இறம்பைக்குளம், வவுனியா.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 618 4320**

( ) N-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 10 . 1931



மறைவு
01 . 05 . 2026

## திருமதி முத்துக்குமாரு தெய்வானைப்பிள்ளை

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு தெய்வானைப்பிள்ளை அவர்கள் கடந்த 01.05.2026 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான பூரணம், ஐயாத்துரை, சின்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற முத்துக்குமாருவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மகாலக்குமி, மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மதியாபரணத்தின் மாமியாரும், பத்மநாதன் துஷ்ஷியா, பிரகாஷ் ரிஷ்ஷியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பிரண்ணவன், பிரண்ணவியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் உசன், மிருசுவிலிலுள்ள அன்னாரின் வதிவிடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசன் ஈச்சங்காட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தவசிகுளம்,**
**மிருசுவில்.**

**தகவல்**
**வே.மதியாபரணம் (தனம்)**

(CS 31730)A

# மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 04 . 1934



மறைவு
02 . 05 . 2026

## சின்னத்தம்பி இராசம்மா

**(இளைப்பாறிய ஆசிரியர்-சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)**

சாவகச்சேரி வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசம்மா நேற்று (02.05.2026) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வாரித்தம்பி சின்னத்தம்பி (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (இளைப்பாறிய அதிபர்), செல்லம்மா, சரவணமுத்து மற்றும் நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், குகரஞ்சினி, ஜெயரஞ்சினி (ஆசிரியர் - யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி) மற்றும் காலஞ்சென்ற கிரவுஞ்சநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுமாரன், சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், துர்க்கா, ஹோகுலதர்சன் (Kunam Designer Digital Printing), சங்கவி (சங்கத்தானை - ஸ்ரீ முருகன் முன்பள்ளி ஆசிரியர்), வைசாலி (திருகோணமலை பல்கலைக்கழகம்) ஆகியோரின் பேர்த்தியும், ஆருத்திராவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முருகமூர்த்தி கோவில் வீதி,**
**சாவகச்சேரி வடக்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(CS 47484)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவாலையில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம்,மே.3 இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் விதையனைத்தும் விருட்சமே இளைஞரணியினருடன் இணைந்து நடத்தும் மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை3.30 மணி வரை இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் குருதிக்கொடை முகாம் நிகழ்வில் குருதிக்கொடையாளர்கள் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(ச-66)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை : பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்

விண்ணப்பதாரரின் பெயர் : பிரான்சிஸ் சேவியர் மரியதாஸ் பெண் கோதநாயகி

சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர்: தம்பையா பொன்னுச்சாமி

முகவரி: ஆதன இல: 43 / 10. வீதி: முல்லையடி வீதி. பிரான்பற்று. வட்டாரம் 07

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 07 முல்லையடி வீதியில் அமைந்துள்ளது. இவ் ஆதனம் தம்பையா பொன்னுச்சாமியும் பெண் பூபதியுமாகியோரால் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 3934/ 01.01.2002ஆம் இலக்க உறுதிப்பிரகாரம் வெளிப்படுத்தி வெளியரங்கப்படுத்தி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 4997/2003.07.01 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் தம்பையா பொன்னுச்சாமியும் பெண் பூபதி ஆகியோரால் பிரான்சிஸ் சேவியர் மரியதாஸ் பெண் கோதநாயகி என்பவர்களுக்கு சொந்தமாகியது.

மேலும் குறித்த ஆதனத்தை உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.பகீரதன் அவர்களால் அளந்து வரைந்த 138 ம் இலக்க 2024.12.30 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தில் நிலப்பரப்பு இரண்டு குளி ஏழுதசம் நான்கு ஆறு (2 குளி 7.46) ஆக காணப்படுகின்றது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்கு பகுதி சங்கானை கோவிற்பற்று சங்கானை கிழக்கு இறை "சங்கட வாசல்" நிலப்பரப்பு இரண்டும் குளி ஐந்து (நில.பர2 குளி5) ஆகும்.

வடக்கு - ஆறு முழ அகல தண்ணிலத்துக் கையொழுங்கை
கிழக்கு - கந்தையா மார்க்கண்டு கைம்பெண் பரமேஸ்வரியின் ஆதனம
மேற்கு - கையொழுங்கை
தெற்கு - கந்தையா கைம்பெண் சரஸ்வதி ஆதனமும் இராசையா பெண் தவமணியின் ஆதனமும்

இவ்வாதனத்தை **பிரான்சிஸ் சேவியர் மரியதாஸ் பெண் கோதநாயகி** என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவல்கத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தவிசாளர்.**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை.**
**மானிப்பாய்.**

(cs.61352) (N-1)

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு வழிபடுநர் பேரவைப்பொதுக்கூட்டம் 2026



### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவைப் பொதுக்கூட்டம்.

இடம் :- புவனேஸ்வரி திருமணமண்டபம் (ஆலய வளாகம்)
காலம் :- 10.05.2026 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- மு.ப.10.00 மணி

**தலைவர் திரு.கு.சரவணபவானந்தன் JP அவர்கள்**
**(தலைவர் - அறங்காவலர்சபை)**

2026ஆம் ஆண்டு வழிபடுநர் பேரவை உறுப்புரிமை பெற்றவர்கள் அனைவரையும் சமுகம் தருமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

**நிகழ்ச்சி நிரல்**

- தேவாரம்
- தலைமையுரை
- வழிபடுநர் பேரவை உறுப்புரிமை ஐயப்பாட்டு விண்ணப்பங்கள் பரிசீலனை
- செயலாளர் சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்.
- செயலாளர் 2025ஆம் ஆண்டு அறிக்கை வாசித்தலும் அங்கீகரித்தல்.
- பொருளாளர் கணக்கறிக்கை சமர்பித்தலும், அங்கீகரித்தலும். (2023,2024,2025)
- புதிய அறங்காவலர்கள் தெரிவு.
- பிறவிடயங்கள்
- நன்றியுரை
- தேவாரம்

- பொதுக்கூட்டத்திற்கு வரும் போது எம்மால் தங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- முகாமைத் திட்டத்திற்கு அமைவாக வழிபடுநர் பேரவைக் கூட்டம் நடைபெறும்.
- வழிபடுநர் பேரவை உறுப்பினர்கள் அலுவலக நேரத்தில் ஆலய அலுவலகத்தில் உறுப்பினர்கள் பெயர்ப் பட்டியலை பார்வையிட முடியும். பிரதி தேவைப்படின் உரிய செலவைச் செலுத்தி கௌரவ செயலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.


**குறிப்பு :-**
**இது சம்பந்தமாக முன்னர் 30.04.2026 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் ஏற்பட்ட தவறுக்காக வருந்துகிறோம்.**

நன்றியுடன்

**மதியாபரணம் அம்பிகைபாகன்**
**கௌரவ செயலாளர்,**
**அறங்காவலர்சபை**  **தொலைபேசி இல:- 0214323440**

(CR/474811) J-1

## வாழ்த்துச் செய்தி




அகில இலங்கை கம்பன் கழகத்தினரால் கொழும்பில் 03.05.2026 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள கம்பன் புகழ் விருது வழங்கும் விழாவில் கம்பவாணர் அருணகிரி விருது பெறவுள்ள எமது பாடசாலையின் பழைய மாணவர் சிரேஷ்ட பொறியியலாளர்


### திரு சி. உருத்திரலிங்கம்

அவர்களை எமது பாடசாலைச் சமூகம் வாழ்த்தி மகிழ்கின்றது.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய தங்களுக்கு எமது பாடசாலையில் கோயில் கொண்டிருக்கும் சிவகாமி அம்பாள் உடனுறை ஆனந்த நடராசப் பெருமானின் திருவருள் நிறைவாகக் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்த்துவோர்:-** **அதிபர்**
**யா/மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பளை**

## வாழ்த்து மடல்




அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா 2026 நிகழ்வில் "அரிய பெரும் திறனாளன்" என்னும் சிறப்புப் பட்டத்தைப் பெறும்

### எந்திரி சி. உருத்திரலிங்கம்

**அவர்களுக்கு எங்கள் இதயம் கனிந்த பாராட்டுகளும் வாழ்த்துகளும்!**

மூத்த பொறியியலாளராக தாங்கள் கட்டுமானத் துறையில் நீண்டகாலமாக ஆற்றிவரும் அர்ப்பணிப்பும், தொழில்நுட்ப திறனும், கட்டுமானத் துறையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தாங்கள் செய்த பங்களிப்புகள் இன்றைய இவ்விருதிற்கான தகுதியை மேலும் வலுப்படுத்துகின்றன.


இவ்விருது தங்களின் சாதனைகளுக்கு ஒரு உயரிய அங்கீகாரமாக மட்டுமன்றி, இளம் பொறியியலாளர்களுக்கும் தொழில்நுட்ப நிபுணர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது. தங்களின் அனுபவமும் வழிகாட்டுதலும் எதிர்கால தலைமுறைக்கு பெரும் ஊக்கமாக அமையும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு.

தாங்கள் மேலும் பல உயரங்களை அடைந்து, சமூகத்திற்கும் நாட்டிற்கும் தொடர்ந்து அரிய சேவைகளை வழங்கிட எங்கள் மனமார்ந்த நல்வாழ்த்துகள்!

**வாழ்த்துபவர்கள்:-**

**இலங்கை தேசிய நிர்மாண சங்கம்**
**வட மாகாண கிளை**

## வாழ்த்தி மகிழ்கின்றோம்




எமது நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும், சிரேஸ்ட பொறியியலாளருமான

### திரு சி. உருத்திரலிங்கம்


அவர்கள் அகில இலங்கை கம்பன் கழகத்தினரால் "கம்பவாணர் அருணகிரி" விருது வழங்கி கௌரவிப்பதை எண்ணி பெருமகிழ்வு அடைகிறோம்.

பொறியியல் துறையின் பொற்கிரீடம்
பொறியியல் சட்ட வல்லுநர்
தான் கற்ற கல்வி தன்னினத்தின் சொத்தென்று
செழுமை மிகு வாழ்வதனை புறந்தள்ளி
எளிமையாய் வாழ்ந்திடும்
எமதினிய பணிப்பாளர் நீடூழி வாழ்ந்திடவே...

**நிறுவன பணியாளர்கள்**
**ரூலின்ஸ் பிறைவேட் லிமிட்டெட்**
**நல்லூர், யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இணைய ஊடுருவல் விவகாரத்தில் ஆளுங்கட்சிக்குள் இருந்து அழுத்தம்!



**கொழும்பு, மே 3**
**அவுஸ்திரேலியாவுக்குச் செலுத்தத் திட்டமிடப்பட்டிருந்த சுமார் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி, இணைய ஊடுருவல்மூலம் திருடப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை அடுத்து, நிதி அமைச்சின் செயலாளரைப் பதவி நீக்கவேண்டும் என்ற நிலைப்பாடு ஆளுங்கட்சிக்குள் எழுந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

அரசாங்கத்தின் முக்கியமான நிதி அமைப்பாக விளங்கும் திறைசேரி தொடர்பான இந்தச் சம்பவம், பாதுகாப்புக் குறைபாடுகள் மற்றும் கண்காணிப்புச் செயல்முறைகள் குறித்து தீவிர சந்தேகங்களை எழுப்பியுள்ளன. இந்தப் பின்னணியில், நிதி அமைச்சின் செயலாளர் தனது பதவியிலிருந்து விலகவேண்டும் என்ற கோரிக்கை ஆளுங்கட்சிக்குள் அதிகரித்துவருகின்றது. ஆளுங்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதியிடம் இந்த விடயத்தை முன்வைத்து, சுயாதீனமான மற்றும் நியாயமான விசாரணைகள் நடைபெற வழிவகுக்கும் வகையில், செயலாளரைப் பதவி விலகுவது நல்லது என்று வலியுறுத்தியுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொறுப்புக்கூறல் உறுதிசெய்யப்பட வேண்டுமானால், சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் விசாரணைக்கு இடமளிக்கவேண்டும்.

செயலாளர் பதவி விலகலானது அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை பாதுகாப்பதுடன், பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும் கைகொடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த விவகாரம் தொடர்பில் இதுவரை உத்தியோகபூர்வ முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

விசாரணைகள் நடைபெற்றுவரும் நிலையில், சம்பவத்தின் முழுமையான உண்மை வெளிவந்த பின்னரே, அடுத்தடுத்த நடவடிக்கைகள் தொடர்பாகத் தீர்மானிக்கப்படும் என்று அரசாங்க வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (க-இ)

## அதிகவிலையில் அரிசி, குடிநீர் வர்த்தகர்களுக்குத் தண்டம்

கொழும்பு, மே 3
அதிக விலைக்கு அரிசி மற்றும் குடிதண்ணீர்ப் போத்தல்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு பல இலட்சம் ரூபா தண்டம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபையினரால் கண்டி, திருகோணமலை, காலி, தங்காலை, கிராந்துருகோட்டை மற்றும் ஹப்புத்தளை ஆகிய பகுதிகளில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட திடீர் முற்றுகை நடவடிக்கைகளின் போது, அரசாங்கம் நிர்ணயித்த கட்டுப்பாட்டு விலையைவிட அதிக விலைக்கு இவை விற்பனை செய்தமை கண்டறியப்பட்டன.

திருகோணமலையைச் சேர்ந்த வர்த்தகருக்கும், காலி மற்றும் தங்காலையைச் சேர்ந்த தலா இரு வர்த்தகர்களுக்கும், கிராந்துருகோட்டையைச் சேர்ந்த ஒரு வர்த்தகருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா வீதமும், ஹப்புத்தளை வர்த்தகருக்கு 5 இலட்சம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. அதேவேளை, நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையைவிட கூடுதல் விலைக்குக் குடி தண்ணீர்ப் போத்தல்களை விற்பனை செய்த ஹப்புத்தளைப் பிரதேச வர்த்தகர் ஒருவருக்கு 10 இலட்சம் ரூபாவும், அநுராதபுரம் பிரதேச வர்த்தகர் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

நாடு தழுவிய ரீதியில் அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களைக் கண்டறிய இவ்வாறான சோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (க-இ)

## திறைசேரியில் திருடப்பட்ட நிதியை மீட்க ஆலோசனை

கொழும்பு,மே 3
திறைசேரியிலிருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை, மீளப்பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் தொடர்பில், இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் டபிள்யூ.ஏ.விஜேவர்தன ஆலோசனை தெரிவித்துள்ளார்.


பிஷிங் எனப்படும் இணையமோசடி முறை மூலம் இந்த நிதி திருடப்பட்டுள்ளது. இலக்கு வைக்கப்படும் நபருக்கு தவறான தகவல்களைக் கொண்ட மின்னஞ்சல் அனுப்பப்பட்டு, அவர்கள் மூலமாகவே இரகசியத்தகவல்கள் பெறப்படும். பின்னர் அந்த அதிகாரிக்குத் தெரியாமலோ அல்லது அவர் மூலமாகவோ இந்த மோசடி முன்னெடுக்கப்படும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முறையாகச் செயற்பட்டிருந்தால், 2.5 மில்லியன் டொலர் பணப்பரிமாற்றத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம். இந்த நிதி தற்போது எந்த நாட்டில் உள்ளது என்பதைப் பொறுத்தே, அதனை மீட்க முடியுமா என்று தீர்மானிக்க முடியும். அந்த நாட்டின் சட்டதிட்டங்கள் மற்றும் ஒத்துழைப்பைப் பொறுத்து மீட்பு நடவடிக்கைகளை எடுக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## 302 கிலோ போதைப்பொருள்கள் புத்தளத்தில் தீயிட்டு அழிப்பு


கொழும்பு, மே 3
பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட சுமார் 302 கிலோகிராம் நிறையுள்ள பல்வேறு போதைப்பொருள்கள் நீதிமன்றங்களின் உத்தரவுடன் புத்தளத்தில் தீயிட்டு அழிக்கப்பட்டன.

பலப்பிட்டிய மற்றும் சிலாபம் நீதிமன்றங்களில் நடைபெற்ற வழக்கு விசாரணைகள் முடிவுக்கு வந்ததையடுத்து, போதைப்பொருள்களை அழிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 22.88 கிலோகிராம் ஹெரோய்ன், 33.17 கிலோகிராம் கேரளாக் கஞ்சா , 247.94 கிலோகிராம் உள்ளூர் கஞ்சா ஆகியவையே அழிக்கப்பட்டன.

வெவ்வேறு சுற்றிவளைப்புகளின்போது, சான்றுப்பொருள்களாகக் கைப்பற்றப்பட்ட இந்தப் போதைப்பொருள்கள், புத்தளம் வனாத்தவில்லு பகுதியில் அமைந்துள்ள 'லக்டோவத்த' எரியூட்டியில் தீயிட்டு அழிக்கப்பட்டன. (க-இ)



அட்சயதிருதியை நாளை முன்னிட்டு, யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளிகோவிலில், கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன் இயற்றிய ஸ்ரீ காளி அம்பாள் கவசம் நூல் வெளியிடப்பட்டது. (க)



தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சங்காபிஷேக உற்சவம், கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (க-66)

## திறைசேரி நிதித் திருட்டு 7 பேரிடம் வாக்குமூலம்

கொழும்பு, மே 3
திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி திருடப்பட்டுள்ளமை தொடர்பில், இதுவரை ஏழு அதிகாரிகளிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிதித் திருட்டுக்கு தொழில்நுட்பக் கோளாறு காரணமா அல்லது நிர்வாக ரீதியான வீழ்ச்சி காரணமா என்பது குறித்து விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திறைசேரியின் பொதுக்கடன் முகாமைத்துவ அலுவலகம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகிய வற்றைச் சேர்ந்த ஏழு அதிகாரிகளிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளுக்காக, குறித்த அதிகாரிகள் பயன்படுத்திய கணினிகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் பொறுப்பேற்கப்பட்டு, தடயவியல் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த விசாரணைக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் கணினி அவசர தயார்நிலைக்குழு வழங்கியுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



20 வயதுப்பிரிவு கைப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியன் பெற்றுள்ளது. பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில், பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியை 5:3 என்ற அடிப்படையில் வெற்றி கொண்டு வலய மட்டச் சம்பியனானது. (க-63)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,மே 3

திருச்செல்வம் தவரத்தினத்தின், நலம் தரும் நவரத்தினங்கள் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு, பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலையில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை ஆசிரியர் கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன், வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்(தமிழ்) சோ.கலாவண்ணன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மோ.கோகுலன் ஆகியோர் கலந்துகொள்வர்.


நூல் வெளியீட்டுரையை யாழ்.மாவட்ட சித்த வைத்தியசாலை வைத்தியர் க.செல்வநாதனும், நூல் பற்றிய கருத்தை ஆசிரியர் ஜீவா ஷஜீவன் ஆகியோரும் ஆற்றுவர். (கு)

# கிளிநொச்சி பிரதான வீதியில் வாகனங்கள் திடீர்ச் சோதனை

கிளிநொச்சி,மே 3

கிளிநொச்சியில் ஏ-9 வீதியால் பயணித்த அனைத்து வாகனங்களும் நேற்று திடீரென பரிசோதனை செய்யப்பட்டன. கிளிநொச்சி மாவட்ட மோட்டார் போக்குவரத்து அலுவலகத்தின் தலைமைப் பரிசோதகர் தலைமையில், போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் அதிகாரிகளின் உதவியுடன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது பேருந்துகளில் பயணிகளின் போக்குவரத்துச் சேவை, வீதியால் பயணிப்பதற்குப் பொருத்தமான வாகனங்கள், குறுந்தூரச் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் உள்ளிட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது குறித்த வாகனங்களில் உள்ள குறைபாடுகளை 14 நாள்களுக்குள் சரிசெய்து, மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆய்வுக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று பொலிஸாரால் அறிவித்தல் வழங்கப்பட்டது. அத்துடன் வாகனங்களில் விபத்துகள் ஏற்படக்கூடியவகையில் பொருத்தப்பட்டுள்ள அபாயகரமான மேலதிக உதிரிப்பாகங்களை அகற்றவும் சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. (க-214)



# மணி விழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம்,மே 3

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆய்வுகள், அபிவிருத்தித்துறையின் ஓய்வுபெற்ற பணிப்பாளர் கலாநிதி எஸ்.கே.பிரபாகரனின் மணி விழாவும், மலர் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு வல்லை யாழ்.பீச் ஹோட்டலில்நடைபெறவுள்ளது. (கு)



நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின், தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (க-17)

# இ.போ.ச. பஸ் மோதி முதியவருக்குக் காயம்

யாழ்ப்பாணம்,மே 3

மோட்டார் சைக்கிளும் இ.போ.ச. பேருந்தும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவர் காயமடைந்தநிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் பளை இந்திராபுரம் சந்தியில் கடந்த வியாழக்கிழமை நடந்துள்ளது. வீதியில் பயணிகளை இறக்கிக் கொண்டிருந்த பேருந்தொன்றை முந்திச்செல்ல முற்பட்ட மற்றொரு இ.போ.ச. பேருந்து எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. (ச-9)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான நாள். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். தேவையான பணம்கிடைக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் யோசனை கேட்டு வருவார்கள். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருப்பதுடன், ஆதாயம் தருவதாகவும் அமையும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் அவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் கூடிவரும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். உற்சாகமாகச் செயற்படுவீர்கள். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். அரசாங்கக் காரியம் அனுகூலமாக முடியும்.

**விருச்சிகம்:** காலையில் வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மகரம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஒருவர் தேவையை மற்றவர் நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகும். வழக்கமான பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். தந்தைவழி உறவுகளால் அலைச்சலும் செலவும் ஏற்படும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும்.

**மீனம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாகச் செல்லவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை





## பொய்யாமொழி

**பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலின் பெரிது**

**பொருள்:** இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவன் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிடப் பெரிதாகும்.

# அரசியல் எனும் அழகியமொழி..!


அரசியற்களத்தில் பெண்களின் நியாயமான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யவேண்டும் என்று வலியுறுத்தி, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரியிடம் மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண குடிசார் அமைப்புகளின் பிரதிநிதிகள், மகளிர் நலத்திட்ட அமைப்புகள் என்பன இணைந்தே இந்த மனுவை துறைசார் அமைச்சரிடம் கையளித்துள்ளன. அரசியலில் ஈடுபடும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும், அவர்களுக்கு வலுவான பொருளாதாரப் பாதுகாப்பை வழங்கவேண்டும் என்பனவும் அந்த மனுவிலுள்ள எஞ்சிய இரு அம்சங்களாக உள்ளன.

இலங்கையின் அரசியற்களத்தைப் பொறுத்தவரை பெண்களின் பங்குபற்றல் என்பது மிகக் குறைந்த மட்டத்திலேயே இருந்து வருகிறது. ஆனால், மேற்கு நாடுகளின் நாடாளுமன்றங்களில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் அங்கம் வகித்து வருகின்றனர். இன்னும் சில நாடுகளில் ஆட்சியைக் கொண்டுநடத்துபவர்களாகப் பெண்களே காணப்படுகின்றனர். கியூபாவுக்கு எதிரான அமெரிக்காவின் முற்றுகையைத் தகர்த்து, அந்த நாட்டுக்கு எரிபொருள்களை விநியோகம் செய்பவர் மெக்சிக்கோவின் ஜனாதிபதியான கிளாடியா ஷின்பார்ம் எனும் பெண். ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கையைத் தீர்க்கமாக எதிர்ப்பவர் இத்தாலிய பிரதமரான ஜோர்ஜிவா மெலோனி எனும் பெண். ரஷ்ய இராணுவ நடவடிக்கைக்கு எதிராகவும், பொருளாதார மீட்சிக்காகவும் உக்ரைனின் கொள்கை வகுப்பாளராகச் செயற்படுபவர் கிறிஸ்ரியா ப்ரீலான்ட் எனும் பெண். இவர் கனடாவின் முன்னாள் துணைப்பிரதமரும் கூட. ஆனால் உலக அரசியலில் பெண்களின் இத்தகைய மகத்தான செயற்பாட்டுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் அரசியலில் தற்போது பெண்களின் வகிபாகம் கழுதைகெட்டு குட்டிச்சுவராக மாறிய கதைதான்.

இந்த நிலைமைக்கு யார் காரணம்? உண்மையில் இலங்கையில் பெண்களுக்கான வாய்ப்பு மறுக்கப்படுகின்றதா? என்ற கேள்விகளுக்குப் பதில் தேடவேண்டியது அவசியமானது - அவசரமானது. நாட்டில் பெண்களில் அரசியற் பங்கேற்பை உறுதி செய்வதற்காக விசேட சட்டங்கள் அமுலாக்கம் பெற்றுள்ளன. வேட்பாளர்களில் இத்தனை சதவீதம் பெண்கள் இருக்கவேண்டும், தேசியப் பட்டியலில் பெண்களை உள்ளீர்க்கவேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் வாய்மொழியாகவும் எழுத்துமூலமாகவும் அரசியற்கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனால், அரசியலில் ஈடுபடுவதற்கு ஆர்வமுள்ள பெண்களை வலைவீசித் தேடவேண்டிய நிலைதான் தற்போதுள்ளது என்பதே யதார்த்தம். கடந்த தேர்தல்களில் சில கட்சிகள், வேட்பாளர்களாகப் போட்டியிடுவதற்கு முன்வருமாறு பெண்களைக் கூவிக்கூவி அழைத்தமை இதன் உச்சபட்ச அபத்தம்.

அரசியலில் பெண்களின் பங்கேற்பு அவசியம். இன்றைய உலகில் அது தவிர்க்க முடியாததும்கூட. ஆனால், அதற்குரிய ஆத்மார்த்தமான விருப்பம் பெண்களிடம்தான் ஏற்படவேண்டும். அரசியலுக்கான ஆர்வம் பெண்களிடம் இல்லாத பட்சத்தில், அமைச்சர் சாவித்திரியால் மட்டுமல்ல ஜனாதிபதியால்கூட இந்த விடயத்தில் எதுவும் செய்யமுடியாது என்பதே உண்மை. அரசியல் என்பது ஓர் அழகான மொழி. அது பெண்களால் பேசப்படுவது இன்னும் சிறப்பு.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




### இவ்வருடத்தில்
# டெங்கு நோயால் 12 மரணங்கள் பதிவு

**கொழும்பு,மே 3**
**2026ஆம் ஆண்டின் இதுவரையான நான்கு மாத காலப்பகுதியில் மட்டும் 25,082 டெங்கு நோயாளர்கள் நாடு முழுவதும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**

12 மரணங்கள் பதிவாகியுள்ளன என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோயின் வீரியம் அதிகமாகக் காணப்படுகின்றது. பருவமழை காலங்களில் டெங்குப் பரவல் மேலும் அதிகரிக்கக்கூடும் என்பதால், பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும்.

இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால், தாமதிக்காமல் மருத்துவரை அணுகி இரத்தப் பரிசோதனை மூலம் டெங்கு நோயா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

வீட்டைச் சூழவுள்ள பகுதிகளில் நீர் தேங்காதவாறு தூய்மையாக வைத்திருப்பதுடன், நுளம்புக்கடியிலிருந்து பாதுகாப்பைப் பெற தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)



## நீரில் மூழ்கி சிறுவன் பலி

கொழும்பு,மே 3
செவனகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுப்பிலவாவி பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தனது நண்பர்களுடன் நீராடச் சென்ற சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இரத்தினபுரிப் பகுதியைச் சேர்ந்த 16 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவம் குறித்து செவனகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

## மோ.சைக்கிள் விபத்து ஒருவர் உயிரிழப்பு!

புத்தளம்,மே 3
புத்தளம் - திருகோணமலை பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று பிரதான வீதிக்கு நுழைந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் விபத்துக்குள்ளானது. உயிரிழந்தவர் கப்புகொல்லாவ பகுதியைச் சேர்ந்த 64 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை ஹொரவ்பொத்தானை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு,மே 3
குருநாகல் ஹூனுவில பகுதியில், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஹூனுவில பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சந்தேகநபர் மேலதிக விசாரணைக்காக பன்னல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-இ)



## சுற்றுலாவிகள் வருகை வீழ்ச்சி

குருநாகல்,மே 3
2026ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் காணப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகை மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கணிசமாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணைக்குழு வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2026ஆம் ஆண்டின் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மிகவும் சாதகமாக அமைந்திருந்தது. இந்த எண்ணிக்கையானது 2025 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை** திங்கட்கிழமை- சித்திரை 21
04.05.2026
சுபநேரம் : 11.56 – 01.26
ராகுகாலம் : 07.26 – 08.56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்
## பணியாளர்கள் பதவி வெற்றிடங்கள்

**கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. பெண் சிறுமிகள் மேற்பார்வையாளர்

தகைமைகள்:-
- வயது 30-55 வயதுக்குட்பட்டவர்கள்
- கல்வி - க.பொ.த.(சா-த)இல் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம் மற்றும் தமிழ்மொழி சித்தியுடன் 06 பாடங்களிற்கு குறையாமல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றுதல் கட்டாயமானது

2. பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்

தகைமைகள்:-
- வயது 30-55
- கல்வி – க.பொ.த சாதாரணதரம்
- தொழில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

3. பெண் முதியோர் பராமரிப்பாளர்

தகைமைகள்:-
- வயது 35-50 வயதுக்குட்பட்டவர்கள்
- கல்வி – க.பொ.த சாதாரணதரம்
- தொழில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றுதல் கட்டாயமானது

4. ஆண் முதியோர் பராமரிப்பாளர்

தகைமைகள்:-
- வயது 35 - 50 வயதுக்குட்பட்டவர்கள்
- கல்வி – க.பொ.த சாதாரணதரம்
- தொழில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றுதல் கட்டாயமானது

5. குறிப்பு – நேர்முகத்தேர்வில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்
   1. கிராமசேவகரின் நற்சான்றிதழ்
   2. தேசிய அடையாள அட்டை
   3. கல்வித்தகைமை
   4. அனுபவம் தொடர்பான சான்றிதழ்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 15.05.2026
- இப்பதவிகளுக்கான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- **EPF,ETF** வழங்கப்படும்
- தங்குமிடம், உணவு இலவசம்
- விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

**ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்,**
**வதிரி, கரவெட்டி.**

தொலைபேசி இல- 0212263136, 0212265069, 0775147045
திரு.வரதீஸ்வரன் (தலைவர்)

(CR/47476) J-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01 . 05 . 1953



மறைவு
15 . 04 . 2025

**திருமதி சாரதாதேவி இரங்கநாதன்**

ஓராண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள்
உம்மை
காலமெல்லாம் நினைத்திருப்போம்
ஆண்டவன் காலடியில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

(CS/61343)J-1

## மரண அறிவித்தல்

மலர்வு
08 . 10 . 1943



உதிர்வு
01 . 05 . 2026

## தம்பிநாதன் கமலாதேவி
(ஓய்வுநிலை ஆசிரியை)

சிவன்வீதி, ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிநாதன் கமலாதேவி அவர்கள் (01.05.2026) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் தம்பிநாதன் அவர்களின் அன்பு மனைவியும், ஆவரங்கால் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், அச்செழு காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சுப்புலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், சுதா (கனடா), ஜெயந்தி, ராஜராஜன் (ஜேர்மனி), சற்குணராஜன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கௌரீசன் (கனடா), இந்துவாசன், துசி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சங்கவி, ஹரிஷ்ணா, வருணி, தருன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், அகரனின் அன்பு அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம், பரஞ்சோதி, தனபாலசிங்கம் மற்றும் நவரட்ணராஜா, சறோஜினிதேவி, நடேசு, நவரட்னராணி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2026) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:**
**மகள் - ஜெயந்தி - 076 804 8226**
**மருமகன் - இந்துவாசன் - 077 807 2227**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS/61361) N-1

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
29 . 03 . 1950



இறப்பு
02 . 05 . 2026

## கணேசமூர்த்தி லங்காதேவி

ஞாலம் கசந்ததென்று
நல்லுலகு சென்றீரோ...
காலம் முடிந்ததென்று
காலன் உமை அழைத்தானோ .....

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனதே அப்பம்மா
எம் நெஞ்சில் மட்டும்
வாழவிட்டு
நீங்கள் போனது எங்கே
மண் விட்டு மறைந்தாலும்
எம் மனதோடு நெடுங்காலம் வாழ்வீர்கள்

**பிரிவால் துயருறும்**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

(CS/61346) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை வீணாக்கடவை காசி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுச் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் 10 தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக மஹோற்சவம் இடம்பெறும். (ச66)




# யாழில் நிலத்தடி நீர்வளம் வலி.வடக்கில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே.3

குடாநாட்டின் நிலத்தடி நீர் வளம் தொடர்பான கருத்தரங்கு, வலிகாமம் வடக்குப் பிரதேசசபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் எந்திரி எஸ்.சண்முகானந்தன் வளவாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். கருத்தரங்கில் வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் செயலாளர் சிவகுமாரன் சிவானந்தன், வலிகாமம் வடக்குப்பிரதேசசபையின் உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (சு-66)




சமோவா நாட்டில் இடம்பெற்ற சர்வதேச இளையோர் கொமன்வெல்த் பளுதூக்கல் போட்டியில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவன், பரமலிங்கம் தாரகன் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார். (சு-66)



# இலங்கைக்குக் கடத்தவிருந்த சட்டவிரோதப் பொருள்கள் மீட்பு

சென்னை, மே 3

தமிழகத்தின் புதுமடம் கடற்கரை ஊடாகப் படகு மூலம் இலங்கைக்குக் கடத்துவதற்காக வீடு ஒன்றில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த பூச்சிக்கொல்லி மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை இராமநாதபுரம் மாவட்ட எஸ்.பி. தனிப்பிரிவுப் பொலிஸார் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர். தற்போது இந்தப்பொருள்கள் இராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கடத்தல் பொருள்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வீட்டின் உரிமையாளர் தற்போது தலைமறைவாக உள்ள நிலையில், அவரைப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர். (ச-இ)



# விபத்தில் உயிரிழந்த சிப்பாய்க்கு அஞ்சலி

ரயில் விபத்தால் உயிரிழந்த, இராணுவத்தின் பொறியியல் சேவைப் படையணியின் லான்ஸ் கோப்ரல் ஏ.பீ. மரியஜூஜிசனுக்கு, இயக்கச்சி சாவத்தி பொது மயானத்தில் நேற்று முன்தினம் இராணுவ மரியாதை செலுத்தப்பட்டது. முறிகண்டியில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் சிப்பாய் படுகாயமடைந்திருந்தார். யாழ்.போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்தார். உயிரிழந்த சிப்பாய்க்கு இறுதி மரியாதை செலுத்துவதற்காக இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள், சிப்பாய்கள், பிரதேச மக்கள் மற்றும் உறவினர்கள் கலந்து கொண்டனர். (சு)



தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கணக்காளராக கடமையாற்றி யாழ்.போதனா மருத்துவமனைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் இ. ரமணனுக்கு பிரதேச செயலக அலுவலர்களால் பிரிவுபசார நிகழ்வு பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. பிரதேச செயலர் எவ்.சீ. சத்தியசோதி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (ச-9)

சந்நிதியான் ஆச்சிரமத்தில் மகாபாரத தொடர் சொற்பொழிவு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் சைவப்புலவர் இரா. செல்வவடிவேல் கலந்து கொண்டு மகாபாரதம் எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு ஆற்றினார். (ச-66)





'அமெரிக்காவின் கொலைவெறி ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடுவோம், மற்றும் டொலர் ஆதிக்கத்தை தோற்கடிப்போம்' எனும் தொனிப்பொருளில் இலங்கை சோசலிசக் கட்சியின் மேதினக்கூட்டம் வவுனியா இறம்பைக்குளத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்குகளுக்கு கட்டுப்பாடுகள்

கொழும்பு,மே 3

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக் குப் பயணம் செய்யும் பௌத்த பிக்குகளுக்கு புதிய கட்டாய நடைமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவ காரங்களுக்கான பிரதி அமைச்சர் கமகெதர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் பௌத்த பிக்குகள், தத்தமது மூத்த பிக்கு, பிராந்திய பௌத்த தலைவர் மற்றும் அந்தந்த பீடங்களின் மகா நாயக்க தேரர் ஆகியோரிடமிருந்து பரிந்துரைகளைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்தச் சட்டம் முன்னரே இயற்றப்பட்டிருந்தாலும், தற்போது இது கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ச-இ)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம்- சங்கானை
ஆண்டு 6 ல் இருந்து A/L கலைப்பிரிவு வரை
சிறு குழுக்களாக சிறந்த அனுபவம் மிக்க
ஆசிரியர்கள் தனித்தனி கவனம்
கொடுக்கப்படும்.
குபேரன் கட்டடம், பிரான்பற்று வீதி.
சங்கானை. 077 675 1649

(cs.47479) N-1

## Rooms நாள் வாடகைக்கு

கொழும்பு, வெள்ளவத்தை காலி வீதியில் அறைகள்
இணைந்த குளியலறையுடன் (Tiles பதித்தது)
நாள் வாடகைக்கு உண்டு.
(Commercial Bank opposite side)
076 965 9679, 071 262 5405

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு முன்பாக சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
வாகனத்தரிப்பிட வசதியும் உண்டு.
தொடர்பு:- 077 583 2962

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், ரம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## கொழும்பில் உடனடி தொழில் வாய்ப்பு

கொழும்பு பகுதியில் Dish Antenna பிற்றிங் மற்றும் Repair செய்ய கூடிய நன்கு அனுபவமும், சாரதி அனுமதிப் பத்திரமும் உள்ள கொமிசன் அடிப்படையில் வேலை செய்யக்கூடிய ஒருவர் உடன் தேவை.

- திறமைக்கும், முயற்சிக்கும் ஏற்ப மாதாந்தம் 200,000/- மேல் வருமானம் பெறலாம்.
- மோட்டார் சைக்கிள் மற்றும் உபகரணங்கள் தரப்படும்.
- தேவையாயின் உணவு, தங்குமிடம் ஏற்பாடு செய்து தரப்படும்.
- திறமையும், அனுபவமும் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
T.குமார் 077 771 0785

(CS/61338) J-1

## வீடு விற்பனைக்கு

வத்தளை - ஹுனுப்பிட்டிய
Station Road இல்
தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் 1 master bedroom with Attached bathroom 2 சிறிய bed rooms, 2 bathrooms, fully tiled, car parking, open kitchen. 6 பர்ச்சஸ் வீடு. Private lane, Hunupitiya IOC shed இற்கு அருகில் Super Market, OKI International School, Bank போன்றவை 2 நிமிட நடை தூரத்தில் உள்ளது.
விலை 19 மில்லியன்
076 36 33 443

## ஸ்ரீ அம்மன் பட்டு சென்டர்

### பழைய பட்டு புடைவை பணமாகிறது



தங்களிடம் உள்ள பழைய (கிழிந்த) காஞ்சிபுரம் பட்டு புடைவைகள், பட்டு வேஷ்டிகள், கூறை பட்டு புடைவகள், பட்டு பாவாடைகள், டிஷ்யு புடைவைகள், எந்நிலையில் இருந்தாலும், காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக் கொண்டு உடனே பணம் தரப்படும்.

இடம்: நல்லூர் மயிலூரான் அரங்கம் திருமண மண்டபம்
590, பருத்தித்துறை வீதி,
நல்லூர் கந்தசுவாமி
தெற்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

ஆரம்பம்:
03.05.2026 முதல் 09.05.2026 வரை

தொடர்பு: 075 7628 189

பழைய கால்கொலுசுகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்.
வாகன தரிப்பிட வசதியும் உண்டு.

## hatch. Hatch Innovation (Pvt) Ltd

### அமுல்படுத்தும் GRIT திட்டத்தில் முச்சக்கர வண்டி கொள்வனவு செய்வதற்கான கேள்வி கோரல்

Hatch Innovation (Pvt) Ltd னால் தகுதிவாய்ந்த விலைக்கேள்விதாரர்களிடமிருந்து முச்சக்கர வண்டி கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரப்படுகின்றது.

1. கேள்விக்கோரல் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக நடைபெறும்.
2. விலைக்கேள்விதாரர்கள் வலுவான வியாபார பதிவினை கொண்டிருப்பதுடன் கறுப்பு பட்டியலில் இடம்பெறாமல் இருத்தல் வேண்டும் .
3. தகுதிவாய்ந்த விலைக கேள்விதாரர்கள் விலைகேள்விப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள வியாபார பதிவினை உறுதிப்படுத்தி, அலுவலக நாட்களில் காலை 09.30 மணி முதல் மாலை 3.00 மணி வரை 469/3 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது உங்களுடைய வியாபார பதிவினை மின்னஞ்சல் மூலம் அனுப்பி நீங்கள் கேள்விப்பத்திரத்தை பெற முடியும். கோரிக்கையினை அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி pakeetharan@hatch.lk
4. கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் : 04.05.2026 - 15.05.2026 , 09.30 மணி முதல் 15.00 மணி வரை ஆகும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை தயாரித்து தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை குறிப்பிட்டு 469/3 Hatch Works(Pvt) Ltd காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் ஒப்படைக்கவும். அல்லது மேல் குறிப்பிட விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பவும்.
6. 20.05.2026 றகு பின்னர் சமர்ப்பிக்கப்படும் விலைகேள்விப்பத்திரங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
7. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக Hatch Innovation (Pvt) Ltd னால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.

தேவைப்படும் பொருள் தொடர்பான விபரம் பின்வருமாறு

| இல | தேவைப்படும் பொருள் | தேவைப்படும் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | முச்சக்கர வண்டி (பெற்றோல் மூலம் இயங்குபவை) | 1 |

முகாமையாளர்,
469/3 Hatch Innovation(Pvt) Ltd,
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் .

## 2025, க.பொ.த உயர்தர (A/L) பரீட்சையில் 3 'A' சித்திகளைப் பெற்றுள்ளீர்களா?



வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் 3 அல்லது 4 வருட இளமானிப் பட்டப்படிப்பை (Bachelor Degree) மேற்கொள்வதற்கு, முழுமையான நிதியுதவியுடன் கூடிய அரச புலமைப்பரிசில் (Government Scholarship) பெறுவதற்கு நீங்கள் தகுதி உடையவராவீர்.



மட்டுப்படுத்தப்பட்ட புலமைப்பரிசில்கள் மட்டுமே உள்ளதால் உங்கள் விண்ணப்பங்களை கால தாமதமின்றி சமர்ப்பியுங்கள்.

இந்த முயற்சியில் உங்களுக்கு பின்வரும் விடயங்களில் வழிகாட்ட நாம் தயாராக உள்ளோம்::

- முறையான தொழில் வழிகாட்டல் மூலம், நீங்கள் தொடர வேண்டிய சிறந்த பாடநெறியைத் தேர்ந்தெடுக்க உதவுதல் மற்றும் நேர்முகத் தேர்வில் சிறப்பாகச் செயல்படப் பயிற்சி அளித்தல்.
- ஆஸ்திரேலியா, கனடா, அயர்லாந்து மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் உள்ள உலகின் முதல் 100 தரவரிசைக்குள் உள்ள 12 பல்கலைக்கழகங்களுக்கு இலங்கையில் மாணவர்களை அனுமதிக்கும் ஒரே முகவர் Edlocate மாத்திரமே.
- பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான ஆங்கில மொழித் தகைமையை (IELTS) பெறுவதற்கான விரிவான பயிற்சியைச் சலுகைக் கட்டணத்துடன் வழங்குதல்.
- பல்கலைக்கழகப் பதிவு மற்றும் மாணவர் விசா (Student Visa) விண்ணப்பங்களைச் சரியான நேரத்தில் மேற்கொள்ளுதல்.பொருத்தமான தங்குமிட வசதிகள் மற்றும் அதனைத் தொடர்ந்த விசா நடைமுறைகளுக்கு உதவுதல்.
- அரச புலமைப்பரிசில் கிடைக்காத பட்சத்தில், பல்கலைக்கழகத்தின் கல்விக்கட்டண புலமைப்பரிசிலைப் பெறுவதற்கான (Tuition Scholarship) வாய்ப்பினை வழங்குவோம்.
- எமது அனைத்து சேவைகளும் முற்றிலும் இலவசமானவை.

மேலதிக விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்:

edlocate
077 222 3178 | 011 484 5772

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மோ.சைக்கிள் சாகசம்; 22 இளைஞர்கள் கைது

கொழும்பு,மே.3

மாலபே, சந்திரிகா குமாரதுங்க மாவத்தையில் மோட்டார் சைக்கிள் சாகசங்களில் ஈடுபட்ட 22 இளைஞர்கள், அந்தந்த மோட்டார் சைக்கிள்களுடன் கடுவலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீதியில் செல்லும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இளைஞர் குழுவொன்று மோட்டார் சைக்கிள் சாகசத்தில் ஈடுபடுவதாக கடுவலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் 'வட்ஸ்அப்' குழுவொன்றின் ஊடாக இணைந்து அந்த இடத்துக்கு வந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)

## தோட்டக்காணி விற்பனைக்கு

யாழ் / மிருசுவில் விடத்தற்பளை
ஈச்சங்காட்டுப் பகுதியில்
10 பரப்பு தோட்டக்காணி உடனடியாக
விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ள: 076 395 5373
Whatsapp / Viber : +6143 4649 429
: +6145 130 9635

(cr.47479) (N-1)

## அச்சகத்திற்கு வேலையாட்கள் தேவை

கொழும்பில் அமைந்துள்ள அச்சகத்திற்கு (Cutting பார்சல் மற்றும் ஏனைய அச்சுவேலைகள் செய்யக்கூடிய, Auto ஓட்டக்கூடிய நேர்மையானவர்கள் தேவை.
தங்குமிடம், உணவு, தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
ஆர்வமுடையவர்கள் CV யுடன் தொடர்பு கொள்ளவும்.
(ஞாயிற்றுக்கிழமை நேரடியாக யாழில் சந்திக்கலாம்.
ஏனைய நாட்களில் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 077 767 1555

CS/61344) J-1

## கண்ணீர் அஞ்சலி

வேலணை மத்திய கல்லூரியின் புகழ்பூத்த முன்னாள் ஆசிரியர்

**அமரர் உயர் திரு. த.ந.பஞ்சாட்சரம்**

அவர்களுக்கு வேலணை மத்திய கல்லூரியின் கொழும்புப் பழைய மாணவர் சங்கம் தனது கண்ணீர் அஞ்சலியை செலுத்தி நிற்கிறது.

**கொழும்புப் பழைய மாணவர் சங்கம்**
**வேலணை மத்திய கல்லூரி**

## வேலைவாய்ப்பு அறிவித்தல்

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள வல்வை முதியோர் இல்லத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பெண் முகாமையாளர்: ஆளுமை மிக்க முதியோர் பராமரிப்பில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. பெண் பராமரிப்பாளர்: முதியோர் பராமரிப்பில் சான்றிதழ் மற்றும் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தங்குமிடம் மற்றும் உணவு இலவசமாக வழங்கப்படும். அனுபவம் மற்றும் தகைமைக்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிர்வாகி - 077 810 6857, 075 974 2495,
021 226 5551
contact@valvaieldershome.com
வல்வை முதியோர் இல்லம், வல்வெட்டித்துறை.

(CS/61347) J-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 29 . 03 . 1950

இறப்பு 02 . 05 . 2026

# கணேசமூர்த்தி லங்காதேவி

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசமூர்த்தி லங்காதேவி அவர்கள் நேற்று (02.05.2026) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கணேசமூர்த்தி அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சசிதரன் மற்றும் சுபாசினி (சுவிஸ்), செந்தில்தரன் (லண்டன்), சுகந்தினி, சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், றமீனா, விஜயபாலா (சுவிஸ்), நளாயினி (லண்டன்), ஆனந்தராஜா (ஆசிரியர் - யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும், பிரியாந்தி (சுவிஸ்), பிரதுஷா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கச்சேரி), சாய்பிரகாஷ், பிரனீதா (சுவிஸ்), சஷ்டிபிரகாஷ் (சுவிஸ்), பிரின்ஸிகா (லண்டன்), நளின் (லண்டன்), சிந்துஜன் (லண்டன்), சௌமியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரதிதேவி, கெங்காதேவி, முருகமூர்த்தி, மேனகாதேவி, காலஞ்சென்றவர்களான மீறாதேவி, காஞ்சனாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுகித், பிரீத்தி, விகாஸ், பிரஜித், ஆரணி, ஹறினி, இஷாணி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


சீரணி கோயிலடி,
சண்டிலிப்பாய்

தகவல்:
குடும்பத்தினர்
077 302 4775
074 148 0996

(cs.61341) (N-1)

## நினைவஞ்சலி

1ஆம் ஆண்டு — 19ஆம் ஆண்டு





**கந்தையா மாணிக்கம்**
தோற்றம் 17.01.1945 — மறைவு 14.04.2025

**மாணிக்கம் புனிதவதி**
தோற்றம் 23.01.1949 — மறைவு 18.04.2007

திதி: தேய்பிறை துதியை
03.05.2026

எங்கள் அன்புத்
தெய்வங்கள் அப்பா ! அம்மா !
உங்களின் பிரிவில்
எங்கள் இதயங்கள்
கனக்கின்றது - உங்கள்
வழிகாட்டல்கள் எங்களை
வழிநடத்தும் என்றுமே...
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல 320/2, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/31722) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாலியல் வன்கொடுமையை போர்க்கருவியாக்கும் இஸ்ரேல்

ஐ.நா. குற்றச்சாட்டு

பலஸ்தீனிய சமூகத்தை அச்சுறுத்தவும், அவர்களைத் தங்களது நிலங்களிலிருந்து கட்டாயமாக வெளியேற்றவும் இஸ்ரேல் பாலியல் வன்முறையை ஒரு வியூகமாகப் பயன்படுத்தி வருவதாக ஐ.நா. நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. நிபுணர்கள் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சோதனைச் சாவடிகள், சிறைச்சாலைகள் மற்றும் வீடுகளில் நடத்தப்படும் சோதனைகளின் போது நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறைகள், பலஸ்தீனியர்களை அடிபணிய வைக்கவும் அவர்களைக் கூனிக்குறுகச் செய்யவும் பயன்படுத்தப்படுகின்றன.

இத்தகைய வன்முறைகள் மூலம் சமூகத்தில் ஒருவித அவமானத்தையும் களங்கத்தையும் ஏற்படுத்தி, அதன் மூலம் பலஸ்தீனியர்களின் சமூக ஒற்றுமையைச் சிதைக்க இஸ்ரேல் முயல்கிறது.

இந்த அச்சுறுத்தல்கள் காரணமாக மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறத் தூண்டப்படுகின்றனர். இது மறைமுகமாக ஒரு இன அழிப்பு நடவடிக்கையாகும்.

அத்துடன் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் சிறுமிகள் முறையான மருத்துவ வசதியின்றி பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இது பாலஸ்தீனியர்களின் எதிர்கால சந்ததியினரின் பிறப்பு விகிதம் மற்றும் இனப்பெருக்கத் திறனைப் பாதிக்கும் ஒரு நீண்டகாலத் திட்டமிட்ட நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

பலஸ்தீனியர்களுக்கு எதிரான அனைத்து வகையான பாலியல் வன்முறைகளையும் இஸ்ரேல் உடனடியாக நிறுத்த வேண்டும் . இத்தகையக் குற்றங்களில் ஈடுபடும் இராணுவத்தினர் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

# நேபாளத்தில் விபத்து 20 பக்தர்கள் பலி!

நேபாளத்தின் ரோல்பா மாகாணத்தில் உள்ள ஜல்ஜாலா மலைப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கோர விபத்தில், புத்த மடாலயத்தக்குச் சென்ற 20 பக்தர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

தலைநகர் காத்மாண்டுவிலிருந்து சுமார் 500 கி.மீ தொலைவில் உள்ள ஜல்ஜாலா மலைப்பகுதியின் 3,000 அடி உயரத்தில் ஒரு பழமையான புத்த மடாலயம் அமைந்துள்ளது. இன்று அங்கு நடைபெறவுள்ள புத்த பூர்ணிமா விழாவைக் கொண்டாடுவதற்காக, நேபாளத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் திரளாக வருகை தந்திருந்தனர்.

இந்த மடாலயத்தை நோக்கி மலைப்பாதை வழியாகச் சென்றுகொண்டிருந்த ஜீப் ரக வாகனம் ஒன்று, திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து பாதையிலிருந்து விலகி அருகில் இருந்த சுமார் 700 மீட்டர் ஆழமுள்ள செங்குத்தான பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ஜீப்பில் பயணித்த 20 பேரும் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர். (ச-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 • 05 • 1950



மறைவு
02 • 05 • 2026

### தவராசா சாரதாதேவி

யாழ்ப்பாணம், கொக்குவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தவராசா சாரதாதேவி அவர்கள் நேற்று (02.05.2026) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - மங்கையர்கரசி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தவராசாவின் (முன்னாள் பிரதியதிபர் யாழ். இந்துக்கல்லூரி) மனைவியும், கிருபாலினி, கிருபாகரன், பிரபாகரன் (முகாமைத்துவ உதவியாளர் - யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிமலன் (Do, வலி மேற்கு பிரதேச செயலகம்), வித்தியா, நிர்த்திகா ஆகியோரின அன்பு மாமியாரும், விஷ்ணுகா, விஷ்ணுஜன், தீபிகன், பிரதீஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காந்திமதி, சுத்தானந்தன், சந்திரமணிதேவி, நித்தியானந்தன், சரோசினிதேவி, காலஞ்சென்ற சதானந்தன் மற்றும் பாலமீரா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாக்கியலட்சுமி (கனடா), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் ஜெயலட்சுமி, காலஞ்சென்ற வரதராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் கொக்குவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, புதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
கொக்குவில், யாழ்ப்பாணம்.

(CS/61345) J-1

## மரண அறிவித்தல்

மண்ணில்
04 • 12 • 1966



விண்ணில்
02 • 05 • 2026

### திரு. சிவசுப்ரமணியம் மயூரதன்

வட்டுக் கிழக்கு சித்தங்கேணியை பிறப்பிடமாகவும் சிங்கப்பூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சிவசுப்ரமணியம் மயூரதன் அவர்கள் 02.05.2026(சனிக்கிழமை) சிங்கப்பூரில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா சிவசுப்ரமணியம்(Benz), குமுதினி சிவசுப்ரமணியம் ஆகியோரின் மூத்த புதல்வரும், அமரர் லக்ஷ்மிநாதன், நகுலேஸ்வரி லக்ஷ்மிநாதன் ஆகியோரின் மருமகனும், நந்தகீதாவின் அன்புக்கணவரும், சுபஹரி மீனாட்சியின் அன்புத்தந்தையும், சிவசங்கரன், குறமகள், சிவகாந்தன், வேல்விழி ஆகியோரின் அன்புச்சகோதரரும், பாலகௌரி, அமரர். சிவஞானசோதி (President's Secretary), ஜீவகௌரி, அருள்மாறன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோகுல், சிவராம், அருண்சிவா ஆகியோரின் அன்புப்பெரியப்பாவும், பிரணவன், பைரவி ஆகியோரின் அன்பு மாமாவும், விஜிதா ஜீவன், பிரேமலதா வசந்தமோகன், சுஜாதா ராகுலன் ஆகியோரின் அன்பு மைத்துனனும், கோசலா, லட்சுமணன், லட்சுமி, ஹரிஹரன், ரிஷிஹரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Mount Vernon Sanctuary Hall 1 89, Geylang, Bahru, #01-2730, Singapore 339697 இல் இன்று (03.05.2026) நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

தகவல்:
நந்தகீதா(மனைவி): +65 9832 5104
சிவசங்கரன்: +1 (647) 205 9611, குறமகள்: +94 77 9007623,
சிவகாந்தன்: +94 76 110 8112, வேல்விழி: +1(647) 609 6755,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில் வல்லுநர்கள் தேவை

யாழில் இயங்கும் பிரபல நிர்மாணத்துறை நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் தொழில் வல்லுநர்கள் தேவை.

அனுபவமும் தகுதியும் உள்ளோருக்கு முன்னுரிமை.

1. படவரைஞர் (Draughtsman)
2. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Technical officer)

தொடர்புகளுக்கு:
**077 078 1818**

## வேலையாட்கள் தேவை

தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.
சம்பளம் :- 70,000/-
Location :- S.A.W & Sons Hambantota
தொடர்பு: **077 480 3379**

## மலர் வளையம், மாலைகள்

மலர் வளையம், மாலைகள் யாழ் மாவட்டத்தில் எங்கு வேண்டும் என்றாலும் உங்களிடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
தொடர்பு: **070 705 4542**

## 36ஆம் ஆண்டு நினைவலைகள்



திருமதி
**பூரணம் இளையதம்பி**
(தேவி ஆச்சி, ஏழாலை தேவி கோயில் ஸ்தாபகர்)

தோற்றம் 05.07.1908 மறைவு 11.05.1990


திதி:துதியை(03.05.2026)

ஏழாலைக்கென்றோர் எழிலார் துர்க்காதேவிக்கு
வாழாலையஞ் சமைக்க வல்லாட்டியே
என்றும் உங்கள் நினைவுடன் பாதம் பணிந்து நிற்கும்

மகன்-பூலோகசிங்கம்
பேரப்பிள்ளைகள்:
பிரியங்கா (UK), பிரணவன்

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 . 09 . 1934
மறைவு 15 . 04 . 2025

**அமரர் செல்லையா தங்கராசா**

எம்மை விரல் பிடித்து வளர்த்த தெய்வமே!
நீங்கள் மறைந்து ஓராண்டு ஆனதா?
இல்லை... எம் சுவாசக் காற்றோடு
இன்றும் கலந்துதான் இருக்கிறீர்கள்!
நீங்கள் விதைத்த நற்பண்புகளும்
காட்டிய அன்புப் பாதையும்
எங்கள் வாழ்வின் கலங்கரை விளக்கம்....
பிரிவுத் துயருடன் உங்கள் நினைவில் வாடுகின்றோம்!

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

என்றும் உம் நினைவில்
குடும்பத்தினர்.
077 774 3055

## வேலையாட்கள் தேவை (ஆண்)

யாழ் நகரில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர், விற்பனைப் பிரதிநிதி தேவை. வயதெல்லை : 20-30
**071 400 1648**

## மணமகள் தேவை

1991ல் பிறந்த சூரியன் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.
**076 583 0277**

## அறை வாடகைக்கு கொடுக்கப்படும்

யாழ்ப்பாணம் நல்லூரை அண்டிய சூழலில் அரச/தனியார் உத்தியோகத்தர், மற்றும் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அறை வாடகைக்கு கொடுக்கப்படும். பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது.
தொடர்பு: **076 803 5097**
**075 881 0384**

## வாடகைக்கு உண்டு

இடம்: யாழ்ப்பாணம் வேம்படி சந்திக்கு அருகாமையில் (50m) மேல் கடை / வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: **077 67 83 790**

## மரண அறிவித்தல்

பிறப்பு 17.05.1947
இறப்பு 02.05.2026

**திருமதி சரஸ்வதி கிருஷ்ணபிள்ளை**

"கௌரிசங்கபதி", கரவெட்டி மத்தியைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி கிருஷ்ணபிள்ளை நேற்று (02.05.2026) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி பாலசிங்கம், வல்லிபுரம் கணபதிப்பிள்ளை, இரத்தினம் நவரட்ணம், வல்லிபுரம் திருச்செல்வம் மற்றும் வல்லிபுரம் சிவப்பிரகாசம் (அல்வாய்), பரமேஸ்வரி கணேஸ் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் யாழ்ப்பாணம் வைற் ஹவுஸ் (White House) மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மதியம் 1.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.வ.சிவப்பிரகாசம் (சகோதரன்)
076 9219 057

## மரண அறிவித்தல்

மண்ணில் 27 . 10 . 1935
விண்ணில் 30 . 04 . 2026



**திருமதி கிளடிஸ் செல்வராணி விக்னேஸ்வரன்**

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கிளடிஸ் செல்வராணி விக்னேஸ்வரன் அவர்கள் கடந்த 30.04.2026 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் விக்னேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி பிறைண்டர் ஐயாத்துரை ஞானம்மா அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி வைத்திலிங்கம் அவர்களின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சபாரட்ணம், அற்புதரட்ணம், ஜெபரட்ணம், ரூபி, கனகம்மா மற்றும் பேள் ரஞ்சிதமலர் (கனடா) ஆகியோரின் சகோதரியும், நகுலேசன் (நியூசிலாந்து), திலகேசன் (கொழும்பு), விமலேசன் (கனடா), ஜெகநேசன் (யாழ்ப்பாணம்), சுமித்திரா (நெதர்லாந்து), சர்மிளா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், டயானா, மஞ்சுளா, ஷாமினி, டீனா, பற்றிக், மனோ ஆகியோரின் மாமியாரும், ஜோனத்தன், விஷ்னுஜா, விஷ்னுஜன், வினோஷன், லக்ஷிதா, ஜெசிக்கா, ருக்ஷிக்கா, ஜெனிபா, றெபேக்கா, தாரணி, திவ்யா ஆகியோரின் பேர்த்தியும், வினிதா, நவீன், ஷேரா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் காலையிலிருந்து கந்தர்மடத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு, தொடர்ந்து நல்லடக்க ஆராதனை இன்று (03.05.2026) ஞாயிற்றுக் கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்று, நல்லடக்கத்திற்காக தேவாலய வீதியில் உள்ள சங்கானை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.
ஜெகன் (மகன்) 077 7917 935
ரீனா (மருமகள்) 077 6272 109

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அரபிக்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரபிக் கடற்பரப்பில் தாழமுக்கம் உருவாகுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. பொதுவாக அரபிக் கடற்பரப்பில் உருவாகும் தாழமுக்கங்கள் மற்றும் சூறாவளிகளால் இலங்கை பாதிக்கப்படும் சாத்தியங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. ஆனாலும், இத்தகைய தாழமுக்கங்களால் தெற்கு, மேற்கு, வடமேற்கு மாகாணங்கள் குறிப்பிடத்தக்க மழையைப் பெறும். இலங்கையின் தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும். எனினும் தாழமுக்கம் தொடர்பாக இன்னும் சில நாள்களுக்குப் பின்னரே தெளிவான முடிவைப் பெறமுடியும் - என்றார். (அ-ம-66)

## வடக்கு...

கும் விரிவடையும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடப் பீடாதிபதியும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.
இது தொடர்பில் நேற்று அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
வடக்கு - கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை அடுத்த சில நாள்களுக்குத் தொடரும். அதேநேரம், நாளை திங்கட்கிழமையில் இருந்து பல இடங்களுக்கும் மழைப்பொழிவு விரிவாக்கமடையும்.
இதன்படி, வடக்கு மாகாணத்தில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களிலும், திருகோணமலை, அனுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களிலும் நாளை கனமழைக்குச் சாத்தியம் உள்ளது.
நாளைமறுதினம் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மேல் மாகாணம், தென் மாகாணம், சப்ரகமுவ மாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்களின் பல பகுதிகளுக்கும், பிற்பகல் 2 மணியளவில் மத்திய மாகாணம், வடக்கு மாகாணம், ஊவா மாகாணங்களின் பல பகுதிகளிலும், மாலை 3 மணியளவில் திருகோணமலை மாவட்டத்திலும் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளன.
6ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வடக்கு மாகாணத்துக்கு, குறிப்பாக யாழ்.மாவட்டத்தின் சில பகுதிகளுக்கு மிதமானது முதல் சற்றுக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புகள் காணப்படுகின்றன. 7ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேல் மாகாணத்தின் பகுதிகளிலும், மாலை 4 மணியிலிருந்து வடக்கு மற்றும் வடமத்திய மாகாணத்தின் சில பகுதிகளுக்கும் பரவலாக மிதமானது முதல் சற்றுக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புகள் காணப்படுகின்றன.
8ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் வடக்கு மாகாணம், வடமத்திய மாகாணம், மேல் மாகாணம், தென் மாகாணம், மத்திய மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் சற்றுக் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புகள் காணப்படுகின்றன.
எதிர்வரும் நாள்களில் கிடைக்கவுள்ள மழை அதிக இடி மின்னலுடன் கூடிய மழை வீழ்ச்சியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக எதிர்வரும் 5ஆம், 7ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் அதிகளவிலான இடி மின்னல் நிகழ்வுகளுக்கு வாய்ப்பு இருப்பதால் மக்கள் மிகவும் அவதானமாக இருப்பது அவசியமாகும் - என்றுள்ளது. (அ-ம-66)

## மரத்தாலான...

வர்களின் உறவினர்கள் சார்பில் அகழ்வுப் பணிகளைக் கண்காணிக்கும் சட்டத்தரணி நிறஞ்சன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
செம்மணிப் புதைகுழிக்குள் மரத்தாலான பெட்டிபோன்ற உருவமொன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும், அது இன்னமும் அகழ்ந்து எடுக்கப்படவில்லை. அடுத்தகட்ட நடவடிக்கைகளின் பின்னரே அந்தச் சான்றுப்பொருள் தொடர்பான உறுதியான தகவல்களைக் கூறமுடியும்.
இதேவேளை புதைகுழிக்குள் காணப்பட்ட சந்தேகத்துக்கு இடமான கறுப்பு நிற மண் அரித்து எடுக்கப்பட்ட நிலையில், அது தற்போது உலரவிடப்பட்டுள்ளது. அதன் மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன - என்றார். (அ-ம-26)

## செம்மணி...

செம்மணி மனிதப்புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் ஆறாம்நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே, நேற்றையதினம் இரண்டு என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
இதேவேளை, ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மூன்று என்புத் தொகுதிகள் நேற்று மீட்கப்பட்டன. இதன்படி, செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 246 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றில் 243 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.
பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். நீதவான் எஸ்.லெனின்குமார் மற்றும் நீதிபதி உசைன் ஆகியோர் அகழ்வுப் பணிகளைக் கண்காணித்து வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி நிறஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் உள்ளிட்டோர் அகழ்வுப்பணி வினர் ஆகியோர் அகழ்வுப் பணி களின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## வயோதிபப்...

தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.
தேவாலயத்தில் வழங்கப்பட்ட உணவைப் பெறுவதற்காக அந்த மூதாட்டி சென்றிருந்த நிலையில், அவரைத் தள்ளியபடி நின்ற பிறிதொருநபரே சங்கிலியை அபகரித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார். இந்த விடயம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-23)

## அம்புலன்ஸ்...

மேற்கொண்டு வருகின்றனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
கிளிநொச்சி - செல்வபுரம் பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை அம்புலன்ஸ் சேவைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து நோயாளியை ஏற்றுவதற்காகச் சென்றபோதே, நோயாளியின் வீட்டில் இருந்தவர்களும் ஏனையவர்களும் இணைந்து இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.
இதுதொடர்பில் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

## சிறுமி...

அராலி தெற்குப் பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமி, தாய்வழி உறவினரான இளைஞர் ஒருவரால் சில தினங்களுக்கு முன்னர் தவறான நடத்தைக்கு உட்படுத்தப்பட்டார் என்று கூறப்படுகின்றது. இது தொடர்பில் சிறுமியின் தாய் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியிருந்தார். இதையடுத்து, சந்தேகநபரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை, அவரை 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-ம-27)

## முல்லை...

மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
முல்லைத்தீவு நந்திக்கடல் களப்புப் பகுதியில் மீனவர்கள் சிலர் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகளிடம் பலமுறை சுட்டிக்காட்டியும் பயனளிக்காத நிலையில், முல்லைத்தீவு மீனவர்கள் சிலர் இணைந்து நேற்று முன்தினம் அவர்களிடம் நீதிகேட்கச் சென்றுள்ளனர். இதன்போதே, சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட நபர்கள் முல்லைத்தீவு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் காயமடைந்த இரண்டு மீனவர்கள் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், சந்தேகநபர்களாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-19)

## பொதுவீதியை...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளில் அண்மையில் அளவீட்டுப் பணி இடம்பெறவிருந்தது. காணிகளின் உரிமையாளர்கள் அந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்காத போதிலும், விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பவானி வீதியை தவிசாளர் சுகிர்தன் அடையாளம் காட்டியிருந்தார். இதையடுத்து, அந்த வீதியை இடைமறித்து அமைக்கப்பட்டுள்ள எல்லையை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்பாக அகற்றுமாறும், இல்லையேல் பிரதேசசபை அந்த எல்லையை அகற்றும் என்றும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனால் தையிட்டி திஸ்ஸ விகாராதிபதி ஜிந்தோட்ட நந்தராம தேரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.
ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளுக்குக் குறுக்காகவே பவானி வீதி அமைந்துள்ளது. எனவே, அந்த வீதியை விடுவித்தால் கணிசமான காணிகள் தானாக விடுவிக்கப்படும் நிலை உள்ளது. இதனால், பிரதேசசபையின் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துமாறு திஸ்ஸ விகாராதிபதி பலாலி பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியுள்ளார். இதையடுத்தே, வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனை அழைத்து, பவானி வீதியை விடுவித்தால், இன நல்லிணக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படும் என்றும், ஆதலால் இந்த நடவடிக்கையைக் கைவிடுமாறும் மிரட்டும் தொனியில் பலாலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
எனினும், பவானி வீதியை விடுவிக்கும் நடவடிக்கைகளைக் கைவிடுவதற்கு தவிசாளர் சுகிர்தன் திட்டவட்டமாக மறுத்துள்ளார். வீதியை இடைமறித்து அமைக்கப்பட்டுள்ள எல்லைகள் அகற்றப்பட்டு திட்டமிட்ட திகதியில் வீதி விடுவிக்கப்படும் என்று அவர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இந்த விடயம் தொடர்பில் நீதிமன்ற விசாரணைகளையும் எதிர்கொள்வதற்குத் தயார் என்றும் தவிசாளர் சுகிர்தன் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.
பலாலி வீதியை தற்துணிவாக விடுவிக்கும் அதிகாரம் பிரதேசசபைக்கு உள்ளது. அத்துடன், இந்த விடயத்துக்காக பொலிஸார் இருதரப்பையும் நீதிமன்றத்துக்கு அனுப்பினால், திஸ்ஸ விகாராதிபதி காணி உறுதி உள்ளிட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதி தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள வியாபார நிலையம் ஒன்றுக்கு பொருட்கள் விநியோகிப்பதற்கு AD சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள சாவகச்சேரியில வசிக்கும் சாரதி தேவை.

தொடர்பு: 077 398 0145

## சமையல் உதவியாளர் தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு சமையல் முன் அனுபவம் உள்ள சமையல் உதவியாளர் தேவை.

உணவு, மற்றும் தங்குமிடவசதி உண்டு. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகொள்ள: 071 068 0538

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A9 றோட்டில் இருந்து 100m தூரம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது
- நன்னீர் ஊற்று, நல்ல சூழல்
- சகல ஆவணங்களுடன் நீண்ட கால தோம்புடன் நிலப்பரப்பு.
- பார்வையிடும் நேரம் : காலை 8.30 தொடக்கம் மாலை 6.30 மணிவரை

தொடர்பு:- 077 6234 204

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 27 . 01 . 2007

மறைவு 04 . 04 . 2026

### செல்வன் லவன் அக்ஷயன்

(2025 A/L Physical Science - 3A, District Rank - 24)

**(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன்)**

நெடுந்தூர வாழ்க்கைப் பயணம்
பாதி வழியில் விலகியது ............
காலங்கள் கனவாகிப் போனதால்
எம் கண்ணீர்த் துளிகளின் ஈரம்.
இன்னும் காயவில்லை நாட்கள்
31 நாள் ஆகிய போதிலும், வாழும் காலம்
வரை உம் நினைவுகளோடு ............

அன்னார் உடல்நலக்குறைவு காரணமாக வைத்தியசாலையில் இருந்தபோது அவர்களுக்கு சிகிச்சை அளித்த வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள், பாடசாலை சமூகத்தினர், அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் அன்னாரின் மரணச்சடங்கில் நேரில்வந்து எங்கள் துயரில் பங்குபற்றியவர்களும், கண்ணீர் அஞ்சலி, பதாகைகள் வெளியிட்டவர்களுக்கும், தொலைபேசி ஊடாக இரங்கல்கள் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

(Cs.) (N.1)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மலர்வு 17 . 03 . 1947

உதிர்வு 02 . 05 . 2026



### ஜெகதீஸ்வரி கணேசபிள்ளை

டச்சுவீதி கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்வரி கணேசபிள்ளை அவர்கள் நேற்று (02.05.2026) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணேசபிள்ளையின் ஆருயிர் மனைவியும், தேவகி (கனடா), பகீரதி (கனடா), யமுனா (எழுதுநர், இ.போ.ச. யாழ்ப்பாணம்), முகுந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரந்தாமன் (கனடா), மதியழகன் (கனடா), காண்டீபன் (கணக்காளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம் - யாழ்ப்பாணம்), யசோதரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சிவபாக்கியம், பரமேஸ்வரி, பத்மாவதி, சண்முகம், கனகரத்தினம், இராமநாதன் மற்றும் இந்திராணி, பாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், லக்ஸ்மன், லக்ஷானி, பகீரதன், பவித்திரா, குகன், பிரணவன், வைஷ்ணவி, பவிசான், குருசன், யனோசான், சிவாஸ்கர், ஆதித்தியன், அஸ்விகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**ப. காண்டீபன் (மருமகன்)**
**077 704 1165**
**க. முகுந்தன் (மகன்)**
**+ 1437 3455107**

3ம், கட்டை,
பருத்தித்துறை வீதி,
கட்டப்பிராய்.

## மரண அறிவித்தல்

விண்ணகம் 31 . 01 . 1949

மண்ணகம் 01 . 05 . 2026



### அல்பிறட் ஜோசப் றெஜினா ஜெயதேவி

(ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியை -
யா/ வதிரி திரு இருதயக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை, பன்வில மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி)

கரவெட்டி வடக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிறட் ஜோசப் றெஜினா ஜெயதேவி அவர்கள் 01.05.2026 இறைவனின் வான்வீட்டில் நித்திய இளைப்பாற்றியை அடைந்து விட்டார்.

அன்னார் அல்பிறட் ஜோசப் (ஓய்வுநிலை உதவிப்பணிப்பாளர் - கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் - முல்லைத்தீவு, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை இராசையா - ஜெயமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சாமிநாதன் இரட்ணம் - மரியமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஜெயரட்ணம் (கனடா) மற்றும் ஜெயராணி (கனடா), ஜெயசீலி (லண்டன்), ஜெயசோதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லில்லிமலர், அலேசியஸ் ஜெயம், காலஞ்சென்ற மன்மதன் மற்றும் ஜெயானந்தம், யசிந்தா, ஜெயராசா, ஆகியோரின் மைத்துனியும், சுனித்தா, டீன், கவின், சாந்தப்போலா ஆகியோரின் அன்ரியும், காலஞ்சென்ற திலக்ஷன் மற்றும் தர்சியா, நிலோஷன், நிலுக்ஷா, நிலானி ஆகியோரின் மாமியாரும், அன்ரனி தியாகராஜா (ராசன்), எலிசபேத் உமையாள், அன்ரனி றிவிசன், மேரி, பிரான்சிஸ் ஆகியோரின் வளர்ப்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (04.05.2026) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கரவைச் சேமக்காலையில் நல் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cc47477) (N-1)

தகவல்:
**கணவர் - அல்பிறட் ஜோசப்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள்களின் விலைகள் நேற்றுச் சடுதியாக அதிகரிப்பு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், நேற்று நள்ளிரவிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள்களின் விலைகளை அதிகரித்துள்ளது. இதன்படி, ஒக்ரேன் 92 ரக பெற்றோல் 12 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலையாக 410 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள் ளது. ஒக்ரேன் 95 ரக பெற்றோல் 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலையாக 470 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒட்டோ டீசல் 10 ரூபா வால் அதிகரிக்கப்பட்டு ஒரு லீற்றரின் புதிய விலையாக 392 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், சுப்பர் டீசல் 15 ரூபாவால் அதிக ரிக்கப்பட்டு ஒரு லீற்றரின் புதிய விலையாக 458 ரூபா நிர்ணயிக் கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் 10 ரூபாவால் அதிக ரித்து புதிய விலை யாக 265 ரூபா நிர்ண யிக்கப்பட்டுள்ளது. (ம)


## காணி விற்பனைக்குண்டு

வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தில்
(மாநகர சபை எல்லைக்குட்பட்டது)
1 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 846 0804

(CS 61351) N-1

## வேலையாட்கள் தேவை

யாழ் நகர மையத்தில் இயங்கிவரும் உயர்தர தனியார் கல்வி நிலையத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. (பெண்கள்)
ஆர்வம் உள்ளவர்கள் தங்களின் சுயவிபரக்கோவையை கீழ் காணும் What's App இலக்கத்திற்கு அனுப்பி வைத்த பின் தொடர்பு கொள்ளவும்.
கல்வித் தகமை O/L, A/L

தொடர்புகளுக்கு:- 077 814 6938

(CS/31713) J-1

## வெல்டிங் வேலையாள் தேவை

சம்பளம் ஒரு நாளுக்கு 5000/- வழங்கப்படும்.
மதிய உணவு வழங்கப்படும்.
இடம்: யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:-
077 937 0000, 075 988 1000

## வீட்டுப் பணிப்பெண்

யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியில் வயோதிப பெண் ஒருவருடன் வீட்டில் தங்கி, சமையல் மற்றும் அன்றாட வீட்டு உதவிகளை செய்யக்கூடிய உதவியாளர் தேவை.
ஒரு பிள்ளையுடன் உள்ள பெண் வசிக்க விரும்பினாலும் பரிசீலிக்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் கீழ்க்காணும் எண்ணிற்கு WhatsApp மூலம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 077 123 8030

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், உரும்பிராய் – பலாலி வீதியில் அமைந்துள்ள வீட்டில் 2 அறைகள் கொண்ட பகுதி நீண்டகால வாடகைக்கு கிடைக்கும்.
ஆர்வமுள்ளவர்கள் கீழ் காணும் எண்ணிற்கு WhatsApp மூலம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 077 123 8030

## ஆண் வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் கடைக்கு ஆண் வேலையாள் தேவை.
சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு.
சம்பளம் 60,000/- - 70,000/- வழங்கப்படும்.
077 937 0000, 075 988 1000

## DRAUGHTSPERSON / CAD TECHNICIAN PERMANENT

யாழ்ப்பாணம் / Hybrid (Flexible home and office work)
We are seeking a skilled Draughtsperson / CAD Technician to produce high-quality AutoCAD drawings for residential and commercial projects.
Apply: உங்கள் சுயவிவரம் (CV) மற்றும் படைப்புத் தொகுப்பை (portfolio) tharmalingam2026@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

## வேலையாள் தேவை

வடமராட்சிப் பகுதியில் வயோதிப் பெண்ணொருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிக்க நேர்மையான பெண் வேலையாள் தேவை. அனுபவம் வாய்ந்தவர்களும், 35 வயதிற்கு மேற்பட்டவர்களும் விரும்பத்தக்கது.
நீண்ட நாட்களுக்கு நின்று வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 077 181 4988

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி சந்தியில் பிரதான வீதியில் 18 நிலபரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான காப்பற் வீதி முகப்புடன் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் ஒரு பரப்பு 1,200,000/= (பன்னிரெண்டு) இலட்சம்
- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், ஒன்றரை பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- நடுப்பகுதி ஒரு பரப்பு எட்டு இலட்சம் ரூபாய், பின் பின் பகுதி ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சம் ரூபாய்.
- யாழ் நகரிலிருந்து 4 km தூரம்
- வீடுகள் அமைப்பதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் சிறந்த இடம்.

தொடர்பு:- 076 99 03 039
076 98 78 617

## வடபகுதியில் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் மிக நவீன Endoscopy / Colonoscopy System

VENUS

## வீனஸ் விசேட வைத்தியசாலை

AI தொழிநுட்பத்துடன் கூடிய Japan OLYMPUS நிறுவனத்தின் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட எண்டோஸ்கோப் / கொலொனோஸ்கோப் நேற்றய தினம் 02.05.2026 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இந் நிகழ்வில் மங்கள விளக்கினை தொழிலதிபர் திரு.T.ஜெகசீலன்(Valampuri,Sangiliyan, Green Grass விடுதிகளின் பணிப்பாளர்) , மகப்பேற்று வைத்திய நிபுணர் DR.G.பவானி அவர்களும் ஏற்றிவைத்தார்கள்.



இரப்பை குடல் சத்திர சிகிச்சை நிபுணர் DR V. துஷ்யந்தன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



JAPAN
OLYMPUS
EVIS X1 SERIES
4K (Ultra High Definition ) LED Auified Platform with 5 - Led Spectrum Technology

- அறிமுகப்படுத்தப்படும் நவீன சாதனமானது எந்த ஒரு வெட்டுக்காயமும் இன்றி கமரா மூலமான சிகிச்சை.
- வயிற்றுப்பகுதி, குடல் பகுதி, மலவாசல் பகுதி போன்ற உள் உறுப்புகள் மிக துல்லியமாகவும் உயிர்த்த படங்களாகவும் தர கூடியது
- தற்போதுள்ள HD/4K System ஐ விட பல மடங்கு உணர்திறன் கூடிய நோய்களை கண்டறியும் வல்லமை உள்ளது.

### இந் நவீன எண்டோஸ்கோப் / கொலொனோஸ்கோப் சிறப்பியல்புகளாவன

- AI-Based Detection - கண்ணுக்கு தெரியாத கட்டிகள் , நோய் அறிகுறிகள், அல்லது புற்றுநோய் அறிகுறிகளை. AI மென்பொருள் தானாக அடையாளம் காட்டி மருத்துவர்களை எச்சரிக்கை செய்யும்.
- 4k - Ultra HD & NBI - மிக துல்லியமான படங்களை காட்டுவதுடன் NBI ஒளிமூலம் இரத்த நாள மாறுபாடுகளை கொண்டு ஆரம்ப கால புற்றுநோயை உடனடியாக கண்டறிய உதவுகின்றது.

### யார் இந்த பரிசோதனையை செய்ய வேண்டும்?

- உணவு, நீர் விழுங்குவதில் மாறுதல் உணர்பவர்கள்
- காரணமற்ற உடல் நிறை குறைவு
- வயிற்று வலி , காரணமற்ற நெஞ்சு நோவு
- அடிக்கடி காரணமற்ற வாந்தி, அல்லது தொடர் வாந்தி
- வாய் அல்லது மலைவாசல் மூலமான இரத்த போக்கு
- வயிறு எரிவு , சமிபாட்டு கோளாறு அடிக்கடி வருதல்
- மேல் வயிறு அடிவயிற்றுவலி
- வயிற்று போக்கு காரணமற்ற முறையில் அடிக்கடி மலசிக்கல் பிரச்சனை ஏற்படல்
- காரணமற்ற நிறை குறைவு
- களைப்புத்தன்மை
- மலம் கருமையான நிறத்தில் வெளியேறுதல்

தற்போதைய நவீன மருத்துவ உலகில் புற்றுநோய் , வேறு எந்த நோய்களையும் ஆரம்பநிலையில் கண்டுபிடிப்பதால்
**100% குணப்படுத்தமுடியும்**
இந்த மாறுதல்கள் உங்கள் உடலில் அவதானிப்பவர்கள் வீனஸ் வைத்தியசாலைக்கு ஒருமுறை விஜயம் செய்து இது சம்பந்தமான வைத்திய நிபுணர்களை நாடி உங்கள் ஆயுளை பலப்படுத்தி கொள்ளுங்கள்.

எம்மிடம்
- அனுபவம் மிக்க மருத்துவ நிபுணர்கள்
- நவீன மருத்துவ உபகரணங்கள்
- துல்லியமான அறிக்கை வழங்கல்
- பாதுகாப்பான நடைமுறை

உங்கள் உடல் ஆரோக்கியத்திற்கு நாம் எப்போதும் உறுதுணையாக உள்ளோம்

இல.136 பலாலி வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 4172 | 021 222 8475
070 613 6136 | 070 513 6136
venushos136@gmail.com
venushospitaljaffna.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி இல. 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

ஆடை அணிகலன்கள் அத்தனை பெறுமதியில்
சூடியே ஆலயம் சென்றாலும் – தேடரிய
இறைதுதியின் போதினிலும் இணைமாதர் மேனியினை
மறைமுகமாய் ஆராய்வர் தாம்

ஆனையூர்க்கவிராயர்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 சித்திரை 20 ஞாயிற்றுக்கிழமை (03.05.2026) சிகரம் :190



# சமாதானத்துக்காக நடந்து வந்த நாடும் நடந்து வராத நாடும்?

○ நிலாந்தன்

அமெரிக்காவிலிருந்து 13 பிக்குகளைக் கொண்ட ஓர் அணி இலங்கைக்கு வந்தது.'சமாதானத் துக்கான நடை' என்ற பெயரில். அவர்கள் இலங்கையில் அநுராதபுரத்தில் இருந்து கொழும்பு வரையிலும் சுமார் 200 கிலோ மீற்றர் நடந்தி ருக்கிறார்கள். ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியில் இருந்து மே மாதம் முதலாம் திகதி வரையிலுமான அவர்களுடைய இந்த நடைபயணத்தின் போது அவர்கள் தமிழ்ப் பகுதி களுக்கு வரவில்லை. தென்னிலங்கையில் பௌத்தர்க ளாக உள்ள சிங்கள மக்கள் அவர்களை காலில் விழுந்து வரவேற்கிறார்கள். அவர்கள் செல்லும் வழியெல்லாம் மலர்களை தூவி அவர்களுக்காக காத்திருந்து ஆசீர்வா தங்களை பெறுகிறார்கள். உடல் வளங்காதவர்களையும் நோயில் இருப்பவர்களையும் சக்கர நாற்காலிகளில் இருத்தி அந்த பிக்குகள் நடந்து வரும் வழியில் கொண்டு வந்து நிறுத்தி ஆசீர்வாதங்களைப் பெறுகிறார்கள். நடந்து வரும் பிக்குகளை சிங்கள பௌத்த மக்கள் வர வேற்கும் விதம் ஒரு வழிபாடுதான். அதேசமயம் அரசாங் கம் அதை ஒரு கவர்ச்சியான பக்தி அரசியல் நாடகமாக ஒழுங்கமைத்தது என்ற விமர்சனங்களும் உண்டு.

அந்த பிக்குகளுக்கு தலைமை தாங்குபவர் பண்ணகார தேரோ. வியட்நாமில் பிறந்து பின் அமெரிக்காவில் குடி யேறியவர். மோட்டோரோலா நிறுவனத்தில் மென்பொருள் பொறியியலாளராக இருந்தவர். பின்னர் சன்னியாசம் பூண்டு பிக்குவானவர். இலங்கையில் ஒரு பெண் அவரி டம் கேட்கிறார் "புத்த பகவானின் போதனைகளின் சாராம் சம் என்ன?"வென்று. அவர் மிகத்தெளிவாகச் சொல்கி றார், "பௌத்தம் ஒரு மதம் அல்ல. அது ஒரு வாழ்க்கை முறை" என்று.

உண்மை. அது அமெரிக்காவிலிருந்து நடைபயணத்தை முன்னெடுத்த அந்த பிக்குகளுக்குப் பொருந்தலாம். இலங்கைத் தீவின் எல்லாச் சிங்கள பௌத்தர்களுக்கும் பொருந்துமா?

உலகில் தேரவாத பௌத்தத்தின் ஒரே சேமிப்பிடமாகக் கொண் டாடப்படும் இலங்கைத் தீவில் பல நூற்றாண்டுகளாக பௌத்தம் ஒரு வாழ்க்கை முறையாக இருக்கிறதா? அல்லது அரச மதமாக இருக்கிறதா?

புத்த பகவான் இளம் வயதிலேயே அரச போகங்களையும் இல் லறச் சுகங்களையும் துறந்து சன்னியாசி ஆகியவர். அவ்வாறு அரச போகங்களைத் துறந்த அகிம்சா மூர்த்தியின் வாழ்க்கை யைப் பின்பற்றுகிறவர்கள் எப்படி பௌத்தத்தை அரச மதமாகப் பயில முடியும்?

இலங்கைத் தீவின் பௌத்த மகா பீடங்களைச் சேர்ந்த முக் கியமான பொறுப்புகளில் இருக்கும் பிக்குகள் எத்தனை பேர் இப்படி சமாதான நடை நடந்திருக்கிறார்கள்? அவர்கள் பயன்ப டுத்தும் சொகுசு வாகனம்; அவர்கள் அமர்ந்திருக்கும் சிம்மாசனம்; அவர்களுடைய வாழ்க்கை முறை; அவர்களுடைய அரசியல்.. என்பவற்றைத் தொகுத்துப் பார்த்தால் அதில் எங்கே சன்னியாசம் இருக்கிறது?

இலங்கைத் தீவின் சிங்கள பௌத்தர்கள் புத்தரின் போதனை களை ஒரு வாழ்க்கைமுறையாகப் பின்பற்றி இருந்திருந்தால் இலங்கைத் தீவில் இனப்பிரச்சினை தோன்றியிருக்காது. தமி ழின அழிப்பு நடந்திருக்காது. முஸ்லிம்களுக்கு எதிராக வன் முறைகள் முன்னெடுக்கப்பட்டிருந்திருக்காது. இலங்கைத் தீவில் மிகப் பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்ட விடயங்களில் ஒன்று பௌத்தம்.

இவ்வாறு அரச மதமாக அரச போகங்களை அனுபவிக்கும் ஒரு மதப் பிரிவாக, அரசியலமைப்பில் ஏனைய மதங்களை விடவும் விசேஷமான முன்னுரிமைகளை அனுபவிக்கும் ஒரு மதமா கக் காணப்படும் இலங்கைத் தீவின் தேரவாத பௌத்தமானது, ஒரு வாழ்க்கை முறையாக இல்லை என்பதற்கு இதுவரையி லும் தீர்க்கப்படாத இனப்பிரச்சினையே ஓர் உதாரணமாகும். சமாதானத்துக்கான நடை பயிலும் அந்தப் பிக்குகளை சாதா ரண சிங்கள மக்கள் வழிபடுகிறார்கள். உயர்வாகப் போற்றுகி றார்கள். கொண்டாடுகிறார்கள். அந்த பிக்குகளின் கால்களை பிடித்துக் கொண்டு அழுகிறார்கள். உண்மையான சன்னியா சிகள் சாந்த சொரூபிகளாக நடை பயிலும் போது அவர்களை சிங்கள பௌத்தர்கள் மதிப்பார்கள் என்பதை அது காட்டுகி றதா? உண்மையான சன்னியாசிகள் உபதேசித்தால், உண் மையான சிங்கள பௌத்தர்களின் மனதில் மாற்றங்களை விதைக்கலாம் என்பதை அது காட்டுகிறதா? 13 பிக்குகளோடு ஒரு நாயும் சேர்ந்து வருகிறது. அது இந்தியாவில் ஒரு தெரு நாயாக இருந்தது. இந்த பிக்குகளோடு அதுவும் சேர்ந்து நடக்கத் தொடங்கியது. அது ஒரு வாகன விபத்தில் காயமடைந்து சிகிச் சைபெற்ற பின்னரும் தொடர்ந்து நடந்து வருகிறது. அதற்கு 'அலோக்கா 'என்று பெயர். அலோக்கா என்றால் ஒளி என்று பொருள்.

சமாதானத்துக்காக ஏன் நடக்க வேண்டி வருகிறது? ஏனென் றால் சமாதானம் இல்லாத போது, அல்லது மோதல்கள் முரண் பாடுகள் உள்ளபோது, அல்லது மோதல்களுக்கான காரணங் கள் தொடர்ந்தும் பேணப்படும் போது, அங்கே சமாதானத்துக் காக நடக்க வேண்டி வருகிறது. பிக்குகள் சமாதானத்துக்காக நடப்பது என்பது பௌத்த பண்பாட்டில் புதியது அல்ல. அது அவர்களுடைய தவத்தின் ஒரு பகுதி; தியானத்தின் ஒரு பகுதி. கம்பூச்சியாவில் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்திலேயே யுத்த பிரதேசத்துக்குள்ளேயே புத்த பிக்குகள் உயிரைத் துச்ச மாக மதித்து நடந்து சென்றிருக்கிறார்கள். அதுபோலவே இலங் கைத் தீவிலும் முதலாம்கட்ட ஈழப்போர் காலத்தில் யாழ்ப்பாணத் தின் தெருக்களில் சில ஜப்பானியப் பிக்குகள் நடந்து திரிந் தார்கள். யாரோடும் உரையாடாமல், கைகளில் வைத்திருந்த ரபானை மெல்லத் தட்டியபடி யாழ்ப்பாணத்தின் குச்சொழுங்கை கள் தோறும் நடந்து திரிந்தார்கள். அவர்களில் ஒருவர் 1984, மார்ச் மாதம் யாழ்ப்பாணம், மத்தியூஸ் வீதிச் சந்தியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். கடந்த ஆண்டு மார்ச்மாதம் அவருடைய அமைப்பைச் சேர்ந்தவர்களும் உறவினர்களும் அவர் கொல் லப்பட்ட இடத்தில் 41 ஆண்டுகளின் பின் அவரை நினைவு கூர்ந்தார்கள்.

1980 களின் முற்பகுதியில் சமாதானத்துக்காக ஜப்பானிய பிக் குகள் நடக்கத் தொடங்கியதில் இருந்து 2006 இலும் அதாவது கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களின் பின்னரும் அவ்வாறு நடக்க வேண்டியிருக்கிறது. தேரவாத பௌத்தத்தின் ஒரே சேமிப்பிடம் என்று வர்ணிக்கப்படும் ஒரு தீவில் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக பௌத்த பிக்குகள் நடந்து கொண்டிருக் கிறார்கள். ஆனால் சமாதானம் அவர்கள் நடந்து சென்றடையும் தூரத்தில் இல்லை என்பதைத்தான் தையிட்டி விகாரை விவகாரம் உணர்த்துகின்றதா? இந்த சமாதானத்துக்கான நடை வடக்கு - கிழக்குக்கு வரவில்லை. பெருமளவுக்கு தென்னிலங்கையில் உள்ள பௌத்த ஆலயங்களை நோக்கித்தான் அந்த நடை நடந்திருக்கிறது. ஏன் அவர்கள் வடக்குக் கிழக் குக்கு வரவில்லை?

**இலங்கைத் தீவின் சிங்கள பௌத்தர்கள் புத்தரின் போதனைகளை ஒரு வாழ்க்கைமுறையாகப் பின்பற்றி இருந்திருந்தால் இலங்கைத் தீவில் இனப்பிரச்சினை தோன்றியிருக்காது. தமிழின அழிப்பு நடந்திருக்காது. முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் முன்னெடுக்கப்பட்டிருந்திருக்காது. இலங்கைத் தீவில் மிகப் பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்ட விடயங்களில் ஒன்று பௌத்தம்.**

இலங்கைத் தீவில் சமாதானத்துக்காக நடக்க ஒரு நாடு. நடக்காமல் விட ஒரு நாடு என்று இரண்டு நாடுகள் உண்டா? அல்லது அதற்கு வேறு காரணங்கள் உண்டா? சமா தானத்துக்கான கூட்டு உளவியலைத் தயார்படுத்தும் வேலை களை தெற்கிலிருந்துதான் தொடங்க வேண்டும் என்று பிக்குகள் சரியாகவே கணித்திருக்கிறார்களா?

2014ஆம் ஆண்டு நான் நோர்வேக்குச் சென்றிருந்த போது, அங்கே ஒரு குறிப்பிட்ட புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவப் பிரிவின் முக்கியஸ்தரைச் சந்தித்தேன். அவருடைய ஆலயம் தமிழ் தஞ்சம் கோரிகளில் ஒரு பகுதியினருக்கு புகலிடமாக இருந்தது என்று கூறப்பட்டது. அவருடனான உரையாடலின் போக்கில் ஒரு கட்டத்தில் அவர் என்னிடம் கேட்டார்,'ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியோடு இலங்கையில் சமாதானத்தை ஸ்தாபிப்பதற்கான முன்னெடுப்புகளை எந்த மதப்பிரிவின் ஆல யங்களில் இருந்து ஆரம்பிக்கலாம்?' என்று. அவருக்கு நான் சொன்னேன் 'அதை பௌத்த ஆலயங்களில் இருந்து தொடங் குவது பயன்பொருத்தமாக, நடைமுறைச்"சாத்தியமானதாக இருக்கும்' என்று. ஏனென்றால், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை யும் பௌத்த ஆலயங்களில் பிரசங்கம் செய்யும் பிக்கு கள் நினைத்தால் சமாதானத்துக்கான கூட்டு உளவியலை தயார் படுத்தி இருந்திருக்கலாம். மாறாக ஒரு இனத்தினுடையதும் ஒரு மதத்தினுடையதும் மேலாண்மையை ஆதரிக்கும் பிரசங் கங்கள்தான் அங்கே அதிகமாக நடக்கின்றன என்று கூறப்படு கிறது.

எனவே எங்கிருந்து இன, மத, மொழிப் பல்வகைமைக்கு எதிரான கருத்துக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவோ, அங்கிருந்து தான் சமாதானத்துக்கான பெரு விருப்பையும் திடசங்கற்பத்தை யும் உற்பத்திசெய்ய வேண்டும். எனவே தெற்கில் சமாதான நடை நடந்ததில் ஒரு பொருத்தம் உண்டு. அதேசமயம் அவர்கள் தெற் கிலிருந்து வடக்கிற்கு குறிப்பாக தையிட்டிக்கு ஒரு நடை நடந்து வந்திருந்திருந்தால் இலங்கைத்தீவில் ஏன் சமாதானம் ஏற்பட வில்லை என்பதற்கான ஆகப்பிந்திய காரணத்தை கண்கூடா கக் கண்டிருப்பார்கள்.

ஒருபுறம் தெற்கில் சமாதானத்துக்கான நடை. அங்கே அன்பும் கருணையும் பக்தியும் பெருகியோடுவதாக சிங்கள ஊடகங்க ளில் சித்திரிக்கப்படுகிறது. இன்னொரு புறம், கட்டுநாயக்கா விமான நிலையத்தில், ஒரு தொகுதி பிக்குகள் போதைப் பொருட்களோடு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதேநேரம் வடக்கில், உயர் பாதுகாப்பு வலையத்தின் பாதுகாப்பு நிழலில் கட்டப்பட்டிருக்கும் ஒரு விகாரை அமைந்திருக்கும் காணிக ளின் சொந்தக்காரர்கள் நீதி கிடைக்காமல் தொடந்தும் போரா டிக் கொண்டிருக்கிறார்கள். சமாதானம் நடந்து வந்த நாடும், நடந்து வராத நாடும்? ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
03 மே 2026

# அமெரிக்க – இந்திய கூட்டுப் பிடிக்குள் அநுர அரசாங்கம்!

## அநுரவின் மீள் பரிசீலனையால், தமிழர் பிரதேசங்களில் மீண்டும் சீனா நுழைவதை தடுக்க டில்லி வகுத்த வியூகம்

○ அ.நிக்ஸன்



யாழ்.குடா நாட்டின் தீவுகள் அனைத்தும், தமிழகக் கடற்கரையிலிருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தூரத்தில் இருப்பதால், இதனால் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் சீன அபிவிருத்தித் திட்டங்களுக்கு எந்த ஒரு இடமும் வழங்கக் கூடாது என்பதில் இந்தியா கடும் அழுத்தங்களை இலங்கைக்கு கொடுத்துள்ளது.

குறிப்பாக 2026 ஆம் ஆண்டு, கடும் அழுத்தங்களை அநுர அரசாங்கம் எதிர்கொண்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு கோத்தாபாய ஜனாதிபதியாக இருந்த போது, யாழ்ப்பாணம் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு ஆகிய மூன்று பிரதான தீவுகளில் காற்றாலை மற்றும் சூரிய சக்தியை உள்ளடக்கிய 'ஹைப்ரிட்' (Hybrid) எரிசக்தி திட்டங்களை அமைக்கும் உரிமையை சீன நிறுவனம் (Sino Soar Hybrid Technology) சர்வதேச விலை மனுக்கோரல் ஊடாக வென்றிருந்தது.

இந்தியா அப்போது இதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்த நிலையில், தற்போது அநுர அரசாங்கம், 2025 / 26 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பழைய திட்டங்களை மறுபரிசீலனை செய்யத் தொடங்கியுள்ளது. இதனால், சீன நிறுவனங்கள் மீண்டும் அந்தப் பகுதிகளில் பசுமை எரிசக்தி திட்டங்களுக்கான விலை மனுக் கோரல்களில் பங்கேற்க ஆர்வம் காட்டி வருகின்றன.

எரிசக்தி திட்டங்கள் என்ற போர்வையில் அல்லது கடல்சார் ஆய்வுகள் (Maritime Research) என்ற பெயரில் சீனக் கப்பல்கள், தமிழர் பகுதிகளான வடக்கு - கிழக்கு கடல் எல்லைகளில் நுழைய இலங்கை அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக அனுமதி கோரி வருகின்றன. இது இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் உளவுத் திறனை அதிகரிக்க உதவும் என இந்தியா அஞ்சுகிறது. ஏற்கனவே, இந்தியாவின் கடும் எதிர்ப்பினால், யாழ். தீவுப் பகுதிகளில் சீனா மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்களை மாலைதீவில் மேற்கொள்வதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளது.

தற்போது, அநுர அரசாங்கத்தின் புதிய விலை மனுக் கோரலினால், இந்த ஆண்டு சீனா மீண்டும் யாழ்ப்பாணத் தீவுப் பகுதிகளில் கால் பதிக்கக் கூடிய ஆபத்துகள் காரணமாக இந்தியா இலங்கைக்குக் கடும் அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளது. ஈழத்தமிழர்களின் 'சுயநிர்ணய உரிமை'என்ற விடயத்தை மறுதலித்து, 'இலங்கை ஒற்றையாட்சி அரசு' என்பதை உறுதியாக கட்டமைக்க, இந்தியாவின் ஒத்துழைப்பு அநுர அரசாங்கத்துக்கு தேவைப்படுகிறது. அதாவது, முன்னைய அரசாங்கங்கள் கையாண்ட அதே உத்தி. இதன் காரணமாக, இலங்கையில், சீனா இலகுவாக கால் பதித்து விட முடியாது என்ற நம்பிக்கை இந்தியாவுக்கும் உண்டு. இருந்தாலும், மரபுவழியான சீன - இலங்கை உறவும், இந்திய எதிர்ப்பு உணர்வு, ஜே.வி.பி.யிடம் இன்னமும் இருப்பதாலும், சில சமயங்களில், தமிழர் பிரதேசங்களில் சீனாவை கால்பதிக்க அநுர அரசாங்கம் அனுமதித்து விடும் என்ற ஒரு அச்சம், ஈரான் போர் சூழலில் இந்தியாவுக்கு எழுந்துள்ளது. 2026 இல் இலங்கை அரசாங்கம் சீனாவிற்கு அம்பாந்தோட்டை போன்ற தெற்குப் பகுதிகளில் அதிக முன்னுரிமை அளித்துள்ளது. ஆனால் வடக்கை இந்தியாவிற்கு ஒதுக்கும்'புவியியல் சமநிலையை' பின்பற்றுகிறது. ஆனாலும் புதுடில்லிக்கு திடீர் அச்சம் எழுந்துள்ளது. இதனால், மன்னார், முள்ளிக்குளம் பகுதியில் 50 மெகாவாட் காற்றாலை திட்டங்கள் ஜனவரி 2026 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது மார்ச் 2027 இல் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா - இலங்கை இடையிலான மின்சார விநியோகக் கட்டமைப்பு 2026 இல் செயல்பாட்டுக்கு வரவுள்ளன. முள்ளிக்குளம் திட்டம் ஆரம்பிக்கப்பட்டாலும், அதானி குழுமத்தின் மன்னார் - பூநகரி காற்றாலை மின் திட்டங்களின் முழுமையான செயற்பாடுகள் பற்றி அநுர அரசாங்கம் தற்போது பேச்சு நடத்தி சட்டச் சிக்கல்கள் காரணமாகப் பெரும் மாற்றங்களைச் செய்து வருகிறது. 2025 இன் ஆரம்பத்தில், அதானி குழுமம் இந்தத் திட்டத்திலிருந்து 'விலகுவதாக'செய்திகள் வெளியாகின. இருப்பினும், அநுர அரசாங்கம், இந்தத் திட்டத்தை முற்றாக இரத்து செய்யாமல், அதன் மின்சார விலையை குறைப்பது குறித்து அதானி குழுமத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தியது என்பதே உண்மை.

இத்திட்டம் இந்த ஆண்டு சர்வதேச விலை மனுக் கோரல் முறைக்கு மாற்றப்பட்டுள்ளது. ஆனாலும், அதானி குழுமம் அதே விலையில் இத்திட்டத்தை முன்னெடுக்க முடியாது என்பதால், புதிய நிபந்தனைகளின் கீழ் இந்தத்திட்டம் தாமதமாகியுள்ளது.

அதேவேளை, திருகோணமலை சம்பூர் சூரிய மின் திட்டமானது இந்தியாவின் அரசுக்குச் சொந்தமான NTPC (National Thermal Power Corporation ) நிறுவனம் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகிய இரண்டும் இணைந்து உருவாக்கும் ஒரு கூட்டு முயற்சியாகும். இதற்காக திருகோணமலை மின்சார கம்பெனி லிமிடெட் என்ற பெயரில் இந்திய - இலங்கை கூட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தம் 2022 இல் கையெழுத்தானது. இப்போது அநுர அரசாங்கம் இதனைத் தொடர்கிறது. இந்தியா இத் திட்டத்தை தனது மூலோபாய வெற்றியாக நோக்குகிறது.

சம்பூரில் அனல் மின் நிலையம் அமைக்க இந்தியா 2009 இல் திட்டமிட்டிருந்தது. ஆனால், சில காரணங்களால் அது கைவிடப்பட்ட நிலையில், சம்பூரில், சீனா நுழைந்துவிடக் கூடாது என்பதால், அநுர அரசாங்கத்துடன் இந்தியா பேச்சு நடத்தி மீண்டும் இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு ஆரம்பிக்கவுள்ளது. ஏனெனில், திருகோணமலைத் துறைமுகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் இந்தியாவின் பாதுகாப்பிற்கு மிக முக்கியமானவை. எனவே, அங்கே ஒரு சீனத்திட்டம் வருவதை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது.

வடக்கு மற்றும் கிழக்கில் இந்தியாவின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்த சம்பூர் திட்டம் ஒரு முக்கியமான அத்திபாரமாக இந்தியா கருதுகிறது. இலங்கையில் பல திட்டங்களுக்கு சீனா கடும் போட்டி போடுவதால், சம்பூர் திட்டத்தையும் சீனா கைப்பற்றி விடும் என்ற அச்சத்தில் இந்த ஆண்டு இந்தியா இலங்கைக்கு கடும் அழுத்தம் கொடுத்து இந்தத் திட்டப் பணிகளை, இந்த ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பித்துள்ளது. அதேநேரம், இந்தியா - இலங்கை இடையிலான 'எரிசக்தி சேது' திட்டம் என்பது 2026 இல் இரு நாடுகளுக்கும் இடையிலான மூலோபாய உறவில் ஒரு மிக முக்கியமான மைல்கல்லாகும்.

இலங்கையில், சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கிற்கு மத்தியில், திருகோணமலையை மையமாகக் கொண்ட இந்த எண்ணெய்க் குழாய்த் திட்டம் குறித்து, சென்ற ஏப்ரல் 19 ஆம் திகதி, இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆகிய இருவரும் உயர் மட்ட பேச்சில் ஈடுபட்டனர். சந்திப்பின் போது இந்த எண்ணெய்க் குழாய்த் திட்டம், திருகோணமலை எரிசக்தி மையம் குறித்து விரிவாக பேசப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இந்தியாவோடு ஐக்கிய அரபு அமீரகமும் இணைந்துள்ளது. சென்ற ஏப்ரல் மாதம் கையெழுத்தான மும்முனை ஒப்பந்தம் அதாவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், திருகோணமலையை ஒரு பிராந்திய எரிசக்தி மையமாக மாற்றும் பணிகள் தற்போது வேகமாக ஆரம்பிக்கப்படவுள்ளன. ஈரான் உள்ளிட்ட மேற்கு ஆசியாவில் நிலவும் போர்ச் சூழல் மற்றும் உலகளாவிய எரிசக்தி நெருக்கடி காரணமாக, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில்'இனி இழப்பதற்கு நேரமில்லை' என்று இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி சென்ற புதன்கிழமை அறிவித்தார். இதேவேளை, பன்முக எண்ணெய்க் குழாய் என்பது தமிழ் நாட்டின், நாகப்பட்டினம் போன்ற பிரதேசங்க ளில் உள்ள கடலுக்கடியில் அல்லது தரைவழியாகத் திருகோணமலை ஊடாக முழு இலங்கைக்கு எரிபொருளைக் கொண்டு செல்லும் திட்டமாகும். திருகோணமலையில் உள்ள 99 எண்ணெய் குதங்களை மீண்டும் சீரமைக்கும் பணிகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாப னம், லங்கா ஐஓசி கூட்டு நிறுவனம் ஆகியவற்றின் மூலம் நடைபெற்று வருகின்றன. இலங்கையின் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தற்போது திருகோணமலை துறைமுகத்திலி ருந்து 'சீனா பே' (China Bay) பிரதேசத்தில் உள்ள சேமிப்பு முனையத்திற்கு 3 கி.மீ. நீளமுள்ள புதிய குழாயை சென்ற மார்ச் மாதம் அமைக்க ஆரம்பித்துள்ளது. சீனா, இலங்கையின் எரிசக்தி சந்தையில் குறிப்பாக சினோபெக் மூலம் நுழைவதைத் தடுக்க இந்தியா இந்த 'எரிசக்தி சேது' திட்டத்தை ஒரு வலுவான ஆயுதமாகப் பயன்படுத்துகிறது. கப்பல்கள் மூலம் எரிபொருள் கொண்டு வருவதை விட, குழாய் மூலம் கொண்டு வருவது செலவு குறைவானது மற்றும் பாதுகாப்பானது. இது இலங்கையை, இந்தியாவின் எரிசக்தி வளையத்திற்குள் கொண்டு வரும் என புதுடில்லி நம்புகிறது. இலங்கை சீனாவிடமிருந்து பாரியளவில் கடன் பெற்றுத் திட்டங்களைச் செய்வதை விட, இந்தியா மற்றும் அமீரக முதலீடுகள் மூலம் இலாபம் ஈட்டும் திட்டமாக இது இலங்கைக்கு முன்வைக்கப்படுகிறது, இதனை அநுர அரசாங்கம் ஏற்றுள்ளது. இருப்பினும், இத்திட்டத்திற்கான முழுமையான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆய்வுகள் இன்னும் முழுமையடையவில்லை என்றும், இதற்கான தெளிவான காலக்கெடு இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும், உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வடக்கு-கிழக்கில் நவீன உட்கட்டமைப்பு மற்றும் மின்சார வசதியை ஏற்படுத்தி பொருளாதார மீட்சிக்கு இந்தியா வித்திடுவதாக மகாநாயக்கத் தேரர்களுக்குச் சொல்லப்பட்டுள்ளது.

முன்னர் இந்திய எதிர்ப்பை கடுமையாக வைத்திருந்த அநுர தலைமையிலான ஜே.வி.பி. விரும்பியோ விரும்பாமலோ வடக்கு- கிழக்கில் இந்தியத் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளது. இந்தத் திட்டங்கள் தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்றதா? தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வலுப்படுத்துகின்றதா? அல்லது 13 ஐ மாத்திரம் அரசியல் தீர்வாக கொண்டு வரவுள்ளதா என்ற கேள்விகள் நியாயமானவை. ஆனால், 1987 ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம், இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பை பாதுகாத்துக் கொண்டு தான், இந்தியா தனது புவிசார் அரசியல் நலன்களில் கவனம் செலுத்தியது என்ற உண்மையை, ஜே.வி.பி. 2026 இல் தான் முழுமையாகப் புரிந்துள்ளது போலும்.

அதாவது, அந்த ஒப்பந்தத்தை அன்று கடுமையாக எதிர்த்த ஜே.வி.பி., இன்று தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் அரசாங்கத்தை அமைத்துக் கொண்டு, தமிழர் பிரதேசங்களில் இந்தியாவுக்கு முழு ஆதிக்கத்தையும் வழங்கியுள்ளதன் பின்னணி என்பது, ஈழத்தமிழர் அரசியல் உரிமை என்ற விடயத்தை இலங்கை ஒற்றையாட்சிக்குள் சமப்படுத்துவதை பிரதான நோக்கக் கொண்டது எனலாம். அநுரகுமார திஸாநாயக்கவின் இந்த அசைவின் பின்னணி, சீனாவுக்கு புரியாதது அல்ல. ஏற்கனவே மஹிந்த, கோத்தாபய, மைத்திரி, ரணில் ஆகியோருடன் பட்ட அனுபவம் சீனாவுக்கு உண்டு. இருந்தாலும் இந்தியாவின் 'அயல் நாட்டுக்கு முன்னுரிமை' கொள்கை மற்றும் சீனாவின்' பட்டுப்பாதைத் திட்டம்' 'ஆகியவற்றுக்கு இடையிலான போட்டி, 2026 இல் வலுவடைந்துள்ளது எனலாம். இந்தியாவின் இத் திட்டங்களுககு அமெரிக்கா முழு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. குறிப்பாக, கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய அதானி குழுமத்திற்கு அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் 53 மில்லியன் டொலர் கடனுதவி வழங்கியுள்ளது.




இது அமெரிக்கா வழங்கும் நேரடி ஆதரவு பாதுகாப்பு ஒத்துழைப்பு . 'சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசுபிக்' (Free and Open Indo=Pacific) கொள்கையின் கீழ், இலங்கையில் சீனாவின் இராணுவ மற்றும் உட்கட்டமைப்பு ஆதிக்கத்தைத் தடுக்க, இந்தியாவை ஒரு பிராந்தியப் பங்காளியாக அமெரிக்கா முன்னிலைப்படுத்தியுள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டச் சுகாதாரப் பணிப்பாளருக்கு....,

அவசரமா ஒரு கடுதாசி



வணக்கம்.

சுகாதாரப் பணிப்பாளர் சுகமாக இருக்கவேணும். அதுதான் என்னுடைய பிரார்த்தனை. இலக்கிய இரசனை கொண்ட நீங்கள் சமூகச் சீர்கேடுகளைப் பொறுக்காத குணாம்சங்களையும் கொண்டிருப்பீர்கள் என்றது என்னுடைய கணிப்பு. அதுவும் ஒரு நல்ல கவிஞன் என்றும் கேள்விப்பட்டனான். வாழ்த்துகள். கடந்த 2009க்குப் பிறகு அதாவது யுத்த மௌனிப்புக்குப் பின்னாலை பல சேதாரங்கள் எங்கடை சமூகத்துக்குள்ளை நடந்திருக்கு. உயிர்ச் சேதங்கள் பொருட்சேதங்கள் என்று பல விடயங்கள் நடந்திருக்கு. அதிலை இருந்து மீண்டெழாத ஆட்கள் இன்னும் எங்களுக்கு இடையிலை சீவிச்சுக் கொண்டிருக்கினம். ஒரு மருத்துவராக உங்களுக்கு இது தெரியும்.

இதிலை நான் விசேடமாக உங்களுக்குச் சொல்லவாற விடயம் என்னவென்றால் இப்ப பலர் எங்களைச் சுற்றி மனச்சேதத்தோடை சீவிச்சுக் கொண்டிருக்கினம். அது ஒரு பெரிய சமூகக் குறைபாடாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. போதைவஸ்துப் பாவனை. தன்னுயிர் மாய்ப்பு. அதுவும் கர்ப்ப காலத்திலை தன்னுயிர் மாய்ப்பு. தாய் தேப்பன் என்றும் பாராமல் கைவைக்கிறது. அண்மையிலை தன்னுடைய காதலனோடை சேர்ந்து தாயைக் கொலை செய்த மகள். தான் சமைச்ச றோல்ஸ்ஸைத் தன்னுடைய கணவன் சாப்பிடேல்லை என்று கோபம் கொண்ட மனைவி உயிர்மாய்ப்பு. இது மாதிரி எங்களைச் சுற்றிக் கனக்க நடந்து கொண்டிருக்கு.

ஒரு ஆரோக்கியமில்லாத சமூகம்தான் ஒரு நாட்டின்ரை சாபக்கேடு என்று சாதாரணமாகச் சொல்லுறவை. அதிலையும் மன ஆரோக்கியம் இல்லை என்ற விடயம் வலு ஆபத்தானது என்றும் சொல்லுவினம். ஒரு சமூக நலன் என்ற அடிப்படையிலை ஒன்றை உங்களுக்கு வலு தெளிவாக விளங்கப்படுத்த விரும்புறன்.

உதாரணமாக ஓட்டிசம் உள்ள ஒரு பிள்ளையைப் பெற்ற தாயின்ரை மனோநிலையைப் பார்த்தன். அந்தப் பிள்ளையின்ரை தகப்பன் சகோதரங்கள் அவையைச் சேர்ந்தவையள் என்று எல்லாரும் பாதிக்கபட்ட ஆக்கள் மாதிரித்தான் இருக்கினம். ஒரு குடும்பத்திலை ஒரு பிள்ளைக்கு ஏற்பட்ட பாதிப்பு ஒட்டுமொத்தக் குடும்பத்தையே பாதிக்கிற மாதிரி எத்தனை குடும்பங்கள் எங்கடை கண்ணுக்குத் தெரியாமல் இருப்பினம்?

உதாரணமாக ஏதோ ஒன்றாலை பாதிக்கப்பட்ட ஒராள் எப்பிடிப் போய் போதை என்ற ஒன்றுக்குள்ள அகப்பட்டுக் கொள்ளுகிறானோ, அப்பிடித்தான் மன உளைச்சலாலையும் மனக் காயங்களாலையும் பாதிக்கபட்டவையள்தான் குடு என்று சொல்லப்படுகிற போதைவஸ்துவுக்கும் அடிமையாகினம் என்றதுதான் என்ரை கணிப்பு.

முன்னம் மன வருத்தத்தோடை இருந்த சனத்தின்ரை அளவிலும் பார்க்க இப்ப கூடி இருக்கிறதாச் சொல்லினம். எங்களைச் சுற்றி மனவருத்தத்தோடை கன பேர் இருக்கினம். ஆனால் அது வெளியிலை தெரியிறதில்லை. அவையளைச் சேர்ந்த ஆக்களுக்கு அது தெரிஞ்சாலும் வெட்கப்பட்டு அதை வெளியாலை சொல்லுறேல்லை. வருத்தம் முற்றினப் பிறகு அல்லது தாங்கள் அதாலை பாதிக்கப்படேக்கைதான் கொண்டு ஓடத்துவங்கிவினம்.

அதாலை உங்களுக்கிருக்கிற மருத்துவ வலைஅமைப்பைக் கொண்டு அதுக்காக ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கிற அதேவேளை அரச சார்பற்ற நிறுவனங்களையும் அந்த விடயத்தை நோக்கி அதிக கவனம் செலுத்த ஊக்குவிக்க வேணும் என்று கேட்டுக் கொள்ளுகிறன்.

மன நோய் மற்ற நோயளைப்போல இல்லை. அதாலை பாதிக்கப்பட்ட ஆக்களும் அவை சார்ந்தவையளும் படுகிற பாட்டைப் பார்த்தால் வயிறு எரியும். அந்த வருத்தம் வெட்கம் அறியாது. அவைக்கே தாங்கள் செய்யிறதிலை உள்ள நன்மை தீமை தெரியாது. பொது வெளியிலை எப்பிடி நடந்து கொள்ளுறது? என்று தெரியாது. அதைப் பாக்கிறவைக்குத் தான் மிகவும் மனக் கஷ்டமாக இருக்கும்.


இது சுகாதார சேவைக்குட்பட்டதாக இருந்தாலும் இதை ஒரு சமூகமயப்படுத்தப்பட்ட ஒரு சேவையாக நாங்கள் மாற்ற வேணும். அதுக்குரிய ஆலோசனை மையங்களைப் பரவலாக உருவாக்க வேணும். சமுர்த்தி போன்ற மக்கள் மயப்படுத்தப்பட் அரச சார்பு நிர்வாகங்களுக்கூடாக அதைப் பற்றின விழிப்புணர்வைக் கொண்டுபோய் சேர்க்க வேணும். பகல் நேர மன நலக் காப்பகங்களை உருவாக்க வேணும். அதற்குரிய உள வள ஆலோசகர்களைப் படிப்பிக்க வேணும். அவையையும் பயன்படுத்த வேணும்.

இந்த நோய் பாராபட்சமில்லாமல் எல்லா மட்டங்களையும் பாதிச்சிருக்கிறபடியாலையும் பாதிக்கபட்ட ஆக்களின்ரை அளவு கூடிக்கொண்டு போறதாலையும் நாங்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேணும் என்றது என்னுடைய கருத்து.

எங்களைச் சுற்றி எல்லாம் இருந்தும் அதைச் சரிவர அனுபவிக்கிற மனோநிலை எங்களிட்டை இல்லாமல் இருக்குமென்றால் சேர்த்த செல்வங்களாலை ஒரு பயனும் இல்லை என்றது என்னுடைய கருத்து. தயவுசெய்து ஆவன செய்யவும்.

நன்றி

இப்படிக்கு
அப்பாவி அன்னமுத்து




பதறவைக்கும் பரபர தொடர்

# நிழல் உலகச் சிலந்தி

○ வேவுக்காரன்

எப்ஸ்டீனின் வீழ்ச்சிக்கான முதல் புள்ளி புளோரிடாவின் பாம் பீச்சில் தொடங்கியது. ஒரு தந்தை தனது 14 வயது மகள் எப்ஸ்டீனின் மாளிகைக்குச் சென்று பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானதாகப் புகார் அளித்தார். அங்கிருந்த உள்ளூர் பொலிஸ் அதிகாரி ஜோசப் ரெசிகோஃபர் இந்த வழக்கை மிகத் தீவிரமாக விசாரித்தார்.

அப்போதுதான் எப்ஸ்டீன் ஒரு 'வேட்டைக்காரன்' போல இளம் பெண்களைத் தனது மாளிகைக்கு வரவழைப்பது வெளிச்சத்திற்கு வந்தது. ஆனால், எப்ஸ்டீனிடம் இருந்த அரசியல் செல்வாக்கு அவரை அப்போது காப்பாற்றியது. 2008 இல் ஒரு 'இரகசிய உடன்படிக்கை' மூலம், அவர் மிகக் குறைந்த தண்டனையுடன் தப்பினார்.

எப்ஸ்டீன் தப்பித்துவிட்டாலும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் பலரிடம் இருந்தது. 2018ஆம் ஆண்டு, 'மியாமி ஹெறால்ட்' இதழின் செய்தியாளர் ஜூலி பிரவுன் இந்த வழக்கை மீண்டும் கையில் எடுத்தார்.

10


அவர் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பெண்களைத் தேடிப் பிடித்து, அவர்களிடம் நேர்காணல் நடத்தி "Perversion of Justice" என்ற பெயரில் ஒரு தொடர் கட்டுரையை வெளியிட்டார். இந்தத் தொடர் அமெரிக்கா முழுவதும் காட்டுத்தீ போலப் பரவி, எப்ஸ்டீனுக்கு எதிராகப் பொதுமக்களின் கோபத்தை உண்டாக்கியது.

மக்களின் அழுத்தம் மற்றும் புதிய ஆதாரங்களின் அடிப்படையில், நியூயோர்க் பெடரல் வழக்கறிஞர்கள் எப்ஸ்டீனை மீண்டும் கைது செய்யத் திட்டமிட்டனர்.

எப்ஸ்டீன் தனது தனிப்பட்ட விமானத்தில் பரிஸிலிருந்து அமெரிக்கா திரும்பிக் கொண்டிருந்தார். அவர் நியூ ஜெர்சியின் டெட்டர்போரோ ( விமான நிலையத்தில் தரை இறங்கிய அதே விநாடி, எப்.பி.ஐ. அதிகாரிகள் அவரைச் சூழ்ந்துகொண்டனர். இம்முறை அவரிடம் இருந்த பணமோ அல்லது அதிகாரமோ அவரைக் காப்பாற்றவில்லை. அவர் மீது 'பாலியல் கடத்தல்' மற்றும் 'சதித் திட்டம்' ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட பிறகு, எப்ஸ்டீனின் மென்ஹாட்டன் மாளிகையில் நடத்தப்பட்ட சோதனையில்தான் அதிர்ச்சியூட்டும் பல தகவல்கள் கிடைத்தன.


(ரகசியங்கள் தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# துப்பாக்கியும் திரீறோஸ சிகரட்டு

சிவபெருமான்



ஜே.வி.பி. புரட்சிக்காரர்களை சிறைப்பிடித்து தடுத்து வைத்திருந்த பாடசாலைக் கட்டடமான அக்கராயன் காம்ப் (Army camp) வாசலில் ஆனந்தன் நின்று கொண்டிருந்தான். காம்ப்புக்கு எதிர்ப்புறத்தில் நெருக்கமாக மரங்களுள்ள காடு தெரிகிறது. காட்டுக்கு முன்னுள்ள வெளியில் தரித்து நின்ற இராணுவ உலங்கு வானூர்தி ஒன்று சத்தமிட்டபடி மேலெழுந்து பறந்து சென்றது. அங்கு தட்டிவானில் வந்திறங்கி, சோதனைச்சாவடியில் நின்ற சில பொதுசனங்கள் வாயைப்பிளந்து, வானத்தில் வானூர்தியைப் பார்க்க, ஆனந்தன் அந்தத் திசை நோக்கியே தலை திருப்பிப் பார்க்கவேயில்லை. அங்கு காவலுக்கு நின்ற இராணுவச் சிப்பாய்களின் கண்கள் எல்லாமே ஆனந்தனை நோக்கி குவிந்து இருந்தன. முகச்சவரம் செய்யப்பட்ட, சப்பாத்து அணிந்த, படித்துப் பண்பட்ட ஒரு அரசாங்க உத்தியோகத்தரின் தோற்றம் வெளித்தெரிந்தது. எனினும் அவனது சேர்ட்டின் பொக்கற்றில் ஒரு 'திறீறோஸஸ்' சிகரெட் பெட்டி இருப்பது சற்று துருத்திக்கொண்டு தெரிந்தது. புகைப்பிடிக்கும் பழக்கத்தாலும் பாதுகாப்புக்காகவும் அதை வைத்திருந்தான். தேவையில்லாமல் மாட்டிக்கொள்ளக் கூடாது என்பதில் கவனமாக இருந்தான். அங்கு அவன் தனி ஆளாக நிற்பது அவர்களுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. அதேநேரம் தன்னைப்பார்த்து அவர்கள் சந்தேகப்படுகிறார்கள் என்பதையும் கடைக்கண்களால் கண்டுணர்கிறான். வழமையாக பார்க்க வருகிற ஆட்கள்போல் அவனில்லை.

உடனடியாக ஒரு சிப்பாய், கையில் ' 303' வகைத் துப்பாக்கி சகிதம் ஆனந்தனிடம் வந்து, சிங்களத்தில் ' ஏன் வந்திருக்கிறாய்?' என்று கேட்டான். அதற்கு தனது நண்பர்கள் இருவர் இந்தச் சிறைச்சாலையில் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அதை அறிந்து கொள்ள வந்துள்ளதாகச் சிங்களத்தில் புன்முறுவல்பூத்த முகத்துடன் ஆனந்தன் பதில் சொன்னான். அவனது சிங்கள உச்சரிப்பில் அவன் ஒரு தமிழன் என்பதைச் சிப்பாய் நன்கு புரிந்து கொண்டான். வழமையாக, தடுத்து வைக்கப்பட்டோரின் தென்னிலங்கைச் சிங்கள உறவுகள் மட்டுமே பார்ப்பதற்கு அங்கு வருவார்கள். இந்த எதிர்மாறு சிப்பாய்க்கு மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. ஆனந்தனை அவ்விடத்தில் நிற்கச் சொல்லிவிட்டு அந்தச் சிப்பாய் மிகுந்த பரபரப்போடு சோதனைச் சாவடியை திறந்து விடும் இடத்திற்குச் சென்று அங்கு நிற்கும் சிப்பாயோடு ஏதோ பேசினான்.

இது இவ்விடத்தில் நிற்க.

ஜே.வி.பி. உறுப்பினர்களான அன்ரன் (ரணசிங்க) மற்றும் பொன்சேகா (ஆரியரத்னா) போன்றவர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் சமத்துவச் சிந்தனைகளை பரப்புவதற்காகவும் ஆயுதப்போராட்டத்தை விரிவாக்கும் பிரசாரத்துக்காகவும் கிளிநொச்சிக்கு வந்திருந்தனர். அவர்கள் மக்களுடன் தொடர்பு கொள்வதற்கு மொழி ஒரு பிரச்சினையாக இருந்தமையால் அவ்வூரில் ஆனந்தன் என்ற இளைஞன் சிங்களத்தை சரளமாகப் பேசுவான் என்பதை அறிந்து, அவனைத் தங்களுக்கு மொழிபெயர்ப்பு உதவிக்காக அணுகினர். ஆனந்தன் படித்துவிட்டு தொழிலேதுமின்றி இருந்தான். சுமாரான தோற்றம் கொண்டவன். நல்லெண்ணெய்க் கறுப்பு நிறமும், நல்ல மொத்தமான மீசையும், அடர்த்தியான புருவ முடிகளும் கொண்டவன். 1958 ஆம் ஆண்டு இனக்கலவரம் வரை தனது தாய் தந்தையருடன் கொழும்பில் வாழ்ந்ததால் நன்கு சிங்களம் பேசக் கற்றிருந்தான். ஊதியம் கிடைக்கும் என்பதற்காக மொழிபெயர்ப்புத்தொழிலை ஏற்றுக்கொண்டான். ஜே.வி.பி.க்காரரின் இயக்கப் பெயர்களின் அடிப்படையில் அன்ரன் மீசை இல்லாத, முகச் சவரம் செய்திருந்த சுமாரான தோற்றம், மற்றவன் பொன்சேகா உயரமானவன், அளவான தாடி மீசை விட்டிருந்தான். அன்ரன் தன் கைப்பையில் ஒரு சிறியரக கைத்துப்பாக்கியும் வைத்திருந்தான். அந்த துப்பாக்கியை ஆனந்தன் ஒருதடவை கண்டதும் தான் ஒரு சிக்கலுக்குரிய இடத்தில் மாட்டிவிட்டோமோ என்ற பயமும் மனதில் குடிகொண்டிருந்தது. அந்த இருவரும் மிகக்காத்திரமான ஆட்களாக இருப்பது அவர்களது உடலிலல்ல, பார்வையில் தெரிந்தது. அதில் உயரமானவன் பொன்சேகா காத்திரமான பார்வைக்கேற்ற சிரிப்போடும், பார்ப்பதற்கு மிக அழகாகவும் இருந்தான். அன்ரனின் முகத்தில் எப்போதும் எவற்றையும் சந்தேகத்தோடு பார்ப்பது பார்வையில் தெரிந்தது. அவனும் சிரிப்பான் ஆனால் பற்கள் தெரியாது.

பருத்தித்துறை, தொண்டைமானாறு, சுன்னாகம், அனலைதீவு, நெடுந்தீவு, கிளிநொச்சி போன்ற இடங்களில் பிரசாரம் செய்வதற்காகப்போவது வழக்கமானது. ஆனந்தன் அவர்கள் செல்லுமிடமெங்கும் மொழிபெயர்ப்பாளராக இழுபட்டுச் சென்றிருந்தான். அவர்களது செயற்பாடெல்லாம் ஆபத்தில் போய் முடியும் என்பது அவனுக்கு அப்போது தெரியாது. அவனுக்கு அவர்கள்மேல் ஒரு நம்பிக்கை பிறந்தது. ஆனந்தன் நன்றாக திறீ றோஸஸ் சிகரெட் மட்டுந்தான் புகைப்பான். அவர்கள் இருவரும் புகைப்பிடிப்பதில்லை. ஆனால் போதிய அளவு அவனுக்கு சிகரெட் வாங்கிக் கொடுப்பார்கள். அக்காலத்தில் தங்கப்பதக்கம் விருது வென்ற வெளிநாட்டு நிறுவன தயாரிப்பான பிரிஸ்ரல் சிகரெட் சற்றுக்காரசாரமான சுவையோடு இருந்தாலும் பெட்டியிலுள்ள மூன்று ரோஜாப்பூக்களுக்காக திறீரோஸஸ் சிகரெட்டை விரும்பினான். ஆனந்தன் எப்பொழுதும் பகிடியாகத்தான் கதைப்பான. சந்தோசத்துக்கும் புகைப்பான். கவலைக்கும் புகைப்பான். அதனால் எந்தநேரமும் புகைத்துக்கொண்டே இருப்பான். அவர்கள் இருவரும் ஆனந்தனின் பகிடிக்கு சிரிக்கமாட்டார்கள.; ஆனால் ஆமோதித்துத் தலையாட்டுவார்கள். ஆனந்தன் தானே பகிடியையும் சொல்லி, தானே தனது பகிடிக்கு விழுந்து விழுந்து கெக்கட்டம்விட்டு சிரிக்கும் பண்பு கொண்டவனாக இருந்தான்.

ஆனந்தன் கொம்யூனிசம் பற்றி முன்னரே அறிந்திருந்தாலும் நீண்ட நாள் இவர்களோடு அலைந்து திரிந்து அவர்கள் கூறும் கருத்துக்களைக் கேட்டு கால் மார்க்ஸ், லெனின், மாவோ சேதுங், ஏங்கல்ஸ் போன்றோரின் கோட்பாடுகளையும் நன்கு விளங்கி வைத்திருந்தான். ஆனந்தனுக்கு மனதில் ஒரு ஆச்சரியம் இருந்தது. இவர்கள் சொல்வது போல் இந்த நாடு சமத்துவ நாடாக வந்தால் எப்படி இருக்கும் என்று அடிக்கடி கற்பனை பண்ணுவான். வர்க்கப்பிரச்சினையைத் தீர்த்தால் எல்லாப்பிரச்சினையும் தீர்ந்துவிடும் என்ற ஒரு நம்பிக்கையும் அவனுக்கு பிறந்திருந்தது.

தமிழ்ப் பிரதேசங்களில் பலர் இவர்களோடு நட்புக்கொண்டு உறவாடினர். குறிப்பாக சுன்னாகம் பகுதிகளில் அதிகமானோர் இவர்களுடன் நட்பு வைத்திருந்தனர். என்னவோ தெரியாது ஆனந்தனுக்கும் மற்ற இருவருக்கும் இடையில் நட்பும் நல்லுறவும் வளர்ந்தது. தங்கள் குடும்ப விடயங்களைப் பற்றிக் கூட பேசிக் கொண்டனர. அன்ரனும், பொன்சேகாவும் ஆனந்தனை பெரிதும் நம்பினார். அதனால் இந்த இருவரும் சொந்தப் பெயர்களைக் கூட ஆனந்தனுக்குச் சொல்லி இருந்தனர். அதில் அன்ரனது உண்மையான பெயர் ரணசிங்க. என்றும் பொன்சேகாவின் பெயர் ஆரியரத்ன என்றும் அறிந்திருந்தான்.

இவ்வாறு போய்க்கொண்டிருந்த காலத்தில் ஆனந்தன் முன்னர் எழுதிய எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தி எய்திய பெறுபேற்றுக் கடிதம் கையில் கிடைத்தது. சிறிது காலத்துக்குள் எழுதுவினைஞராக பதவியேற்க வேண்டும் என்பதை அவர்களுக்கு தெரிவித்திருந்தான். அவர்கள் இருவரும் தமது திறமையாலும் புதிய கருத்தாலும் பலரையும் தமது இயக்கத்தில் இணைத்தனர் : சேர்க்க முயற்சித்தனர். ஆனால் ஆனந்தனை ஒரு முறையாவது தங்களுடன் இணைந்து கொள்ளுமாறு கேட்கவில்லை. ஏதாவது காரணம் இருந்திக்கக்கூடும். ஆனந்தனும் இவர்களது கருத்துக்களைக் காட்டிலும் ஏனோ தெரியவில்லை அவர்களுடனான நட்பில் அதிகளவு இணைந்திருந்தான். அந்த நட்பு மிக ஆழமாக இருந்தது. பல தடவைகள் இருவரையும் அவன் தனது வீட்டுக்குக் கூட்டிச் சென்று சாப்பாடு கொடுத்து, தங்கிச் செல்லும் அளவுக்கு அந்த நட்பு இருந்தது. ஆனந்தனின் மொழிபெயர்ப்பில் பல நகைச்சுவைச் சம்பவங்களும் நடந்திருக்கிறது. தமிழர்கள் சொல்லும் இடக்கு முடக்கான விடயங்களை நேரடியாக மொழிபெயர்க்காமல் முரண்பாடு வராத வகையில் சுய தணிக்கை செய்து மாற்றிக்கூறுவது அவனது வழக்கமாக இருந்தது. ஆனால் சிறிது காலம் செல்லச்செல்ல அந்த இருவரும் தமிழ் பேசாது விட்டாலும் தமிழர்கள் சொல்வதை விளங்கிக் கொள்கிற மொழி ஆற்றல் பெற்றிருந்தனர். அதன் பின்னர் ஆனந்தனின் மனப்பக்குவத்தையும் தமிழ் ஆட்கள் சிலரது மாற்றுக் கருத்துகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டதோடு எல்லாவற்றையும் வர்க்கப்போராட்டமே தீர்த்து வைக்கும் என்றும் நம்பினர்.

சிறிது காலத்துக்குப் பின்னர், ஆனந்தனுக்கு எழுதுவினைஞர் பதவிக்கான அனுமதிக் கடிதம் கிடைத்தது. தனது குடும்ப நிலை காரணமாக கட்டாயம் வேலைக்குப் போக வேண்டி இருந்தது. அதேபோல அன்ரனுக்கும் பொன்சேகாவுக்கும் மேலிடத்தில் இருந்து உடனடியாக வருமாறு அவசர கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இருவரும் அவசரமாக அழைப்பிடம் நோக்கிச் சென்றனர்.

ஆனந்தன் எழுதுவினைஞராக கடமையேற்றான்.

ஆனந்தனுக்கும் இந்த இரண்டு நண்பர்களுக்கும் இடையிலான தொடர்பும் நட்புறவும் கிட்டத்தட்ட 1970 களை அண்டியதாகவோ அல்லது அதற்கு முன்னதாகவோ ஆரம்பித்திருக்கலாம்.


1964 ஆம் ஆண்டளவில் அக்கராயன் குளம் மற்றும் அதனோடு இணைந்த ஸ்கந்தபுரத்தின் குடியிருப்புக்களுக்காக காடுகள் அழிக்கப்பட்டு, குளம் கட்டப்பட்டு விவசாயக் குடியிருப்புக் கிராமங்களாகின. அங்கு 1969 ம் ஆண்டளவில் அக்கிராமங்களுக்கென பொதுவாக கட்டப்பட்ட பாடசாலைகளில் ஒன்று இன்றுள்ள அக்காராயன் மகா வித்தியாலயமாக இருந்தது.

1971, ஜே.வி.பி. ஏப்ரல் புரட்சி அடக்கப்பட்டு சிறைக்கைதிகளில் ஒரு பகுதியினர் அக்கராயன் பாடசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். அப்போது அந்தப் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த குறைந்தளவு மாணவர்கள் ஸ்கந்தபுரத்தில் இருந்த முதலாம் பாடசாலைக்கு மாற்றப்பட்டனர்.

அக்கராயன் பாடசாலை கைதிகளை அடைத்து வைக்கும் சிறைக்கூடமாக மாற்றப்பட்டு அந்தப் பாடசாலை அக்கராயன் காம்ப் அல்லது 'காம்ப் பள்ளிக்கூடம்' என அழைக்கப்பட்டது.

அந்தப் பாடசாலையைச்சுற்றி பலத்த பாதுகாப்பு செய்யப்பட்டிருந்தது. சுற்றிவர உயரமான மரக்குற்றிகள் நட்டு, முள்வேலி அமைக்கப்பட்டிருந்தது. அதைச் சுற்றி உயரமான காவலரண்களும் அமைக்கப்பட்டு அங்கு இயந்திரத்தின் மூலம் இரவில் ஒளியமைப்பும் செய்யப்பட்டு இருந்தன. அந்த வேலிகளைச் சுற்றி, வெளிப்புறமாக ஒரு கிரவல் பாதை அமைக்கப்பட்டு இருந்தது. குறித்த நேரத்துக்கு ஒரு தடவை இராணுவ வாகனங்கள் அந்த இடத்தைச் சுற்றி அந்தப்பாதையில் கண்காணிப்பில் ஈடுபட்டன. பாடசாலையின் உள்ளே சிறைக் கைதிகள் குளிப்பதற்கும் தோட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




ஸ்

நம்

செய்வதற்குமான தண்ணீர், பாடசாலையின் பின்புறத்தே சற்றுத்தள்ளி அக்கராயன் குளத்திலிருந்து வயல்களுக்கான நீர்ப்பாசன வாய்க்காலிலிருந்து தண்ணீர் இறைக்கும் இயந்திரத் தின் உதவியுடன், பெரிய குழாய் வழியாகப் பெறப்பட்டது. சில இராணுவத்தினர் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்துக்கு காவலுக்கு நின்றனர். அதேபோல பாடசாலைக்கு அருகேயிருந்த நன்னீர்க் கிணற்றடிக்கும் பாதுகாப்பாக உயரமான காவலரணொன் றையும் அமைத்திருந்தனர். ஒவ்வொரு கைதிக்கும் பத்து சதுரஅடி நிலமும் அதில் தோட்டம் செய்வதற்கான தளபா டங்கள், கருவிகள் போன்றனவும் வழங்கப்பட்டிருந்தன. எல்லோரும் அந்த நிலத்துக்குகந்த பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். எனினும் அப்பகுதி மேட்டு நிலமாகவும் அடியில் கிரவல் மண்கொண்டதுமாகவே இருந்தது. அதனால் எல்லா இடமும் தோட்டப்பயிர்கள் சிறப்பாக வளரவில்லை. ஆனால் சில இடங்களில் செழித்து உயரமாக வளர்ந்திருந்தன.

சிறைக்கைதிகள் எவரும் தப்பி விடக்கூடாது என்பதால் அங்குள்ள இராணுவத்தினர் மிக விழிப்பாகவும் கவனமாக இருந்தனர். போக்குவரத்து வாகனங்கள் காம்ப் பாடசா லைக்கு முன்னுள்ள பிரதான வீதியில் இரு மருங்கிலும் வீதித்தடை போடப்பட்டு, வாகனங்கள் நிறுத்தப்பட்டு, பிரயாணிகள் கடுமையாக சோதிக்கப்பட்டே அனுப்பப்பட் டனர். குறிப்பாக சிறைக்கைதிகளின் உறவினர்கள் பார்வையிட வரும்போது ஏ -9 பாதையின் முறிகண்டிச்சந்தியில் இருந்து அக்கராயன் நோக்கி வரும்போது, அக்கராயனில் அமைந்துள்ள பிள்ளையார் கோயிலடியில் இராணுவ வீதித்தடை போடப்பட்ட சோத னைச் சாவடி ஒன்று இருந்தது. அதற்கு சற்று முன்னே காரைநகர்க்காரர் ஒருவரது கடை இருந்தது. அந்தக் காலங்களில் கடைகள் மிகக் குறைவாகவே இருந்தமை யால் தென்பகுதியில் இருந்து கைதிகளைப்பார்க்க வரும் உறவினர்களின் வாகனங்கள் அந்தக்கடையடியில் நிறுத்தப்பட்டு, பய ணிகள் ஒவ்வொருவராக சோதனைச் சாவடிக்கு அழைக்கப்பட்டு முழுமையாக விசாரணைசெய்யப்பட்டு, சோதனையிடப்பட்ட பின்னரே அக்கராயன் காம்ப் நோக்கி செல்ல அனுமதிக்கப்பட்டனர். எனினும் அவர்கள் வீடு திரும்பிச்செல்லும்போது புளியடிச்சந்தியில் ஆஸ்பத்திரிக் கன்ரீனும் நடத்தி, பாண் பேக்கரியும் வைத்திருந்த ரட்ணசிறி என்ற சிங்களவரின் கடையில் ஏதாவது உணவருந்திவிட்டுச் செல்வது வழக்கம். அப்பகுதி மக்கள் ரட்ணசிறியின் பேக்கரியில்தான் பாண் வாங்குவார்கள். அப்பகுதி மக்களும் அவனுடன் நட்புறவுட னேயே பழகினர்.

என்னவோ தெரியாது தென்பகுதியில் இருந்து வருபவர் கள்,எல்லோரும் வெள்ளை உடுப்புக்களையே அணிந்து வந்தனர். அவ்வாறு அணிந்து வந்தது இராணுவத்தினர் அவர்களை புறம்பாக இனம் காணவா அல்லது சமயம் மற்றும் பண்பாடு சார்ந்ததா என்று சரியாகத் தெரிய வில்லை. அந்தச் சிறையில் இருந்து தப்ப முடியாது. அப்படித் தப்ப முயன்றவர்கள் சுடப்பட்டதாகவும் ஊர் மக்கள் சொல்லும் கதைகளும் உள்ளன. அதேபோல வாக்குவாதத்தில் ஈடுபட்ட ஒரு விவசாய உத்தியோகத்த ரும் கொல்லப்பட்டதாக அவ்வூரார் பேசிக்கொள்வார் கள். முகாமைச் சுற்றியுள்ள குடியிருப்பாளர்கள் சொல்லும் கதைகள் வேறுவிதமாக இருந்தன. இராணுவத்தினர் தமக்குத் தேவையான பொருள்களை மக்களிடம் கொள்வனவு செய்ததாகவும் முகாமுக்குள் உழவு செய்வதற்காக உள்ளூர் உழவு இயந்தரத் தையே பிடித்தனர் என்றும் விடுமுறைக்குச் செல்லும் இராணுவத்தினர் புளுக்கொடியல் வாங்கிச்செல்வார் கள். விடுமுறையைக் கழித்துவிட்டு முகாம்; திரும்பும்போது கித்துள் பாணி, றம்புட்டான் பழம், அன்னாசிப்பழம் போன்றவற்றைக் கொண்டுவந்து ஊரவர்களுக்கு கொடுப்பார்களாம்.

மீண்டும் அக்கராயன் காம்ப் சோதனைச் சாவடியில் ஆனந்தன்.

சோதனைச் சாவடி வாசலில் இருந்து ஒரு சிப்பாய் பாடசாலைக் காம்ப்புக்கு உள்நோக்கிப் போகிறான். முதலில் பேசிய சிப்பாய் ஆனந்தனிடம் சற்று பொறுக் குமாறு கூறுகிறான். வீதியின் தூரத்தே உள்ள ஒரு சோதனைச் சாவடியில் ஒரு தனியார் பேருந்திலிருந்து நிறைய தென்னிலங்கையிலிருந்து வந்த உறவினர் கள் இறங்கி வாசலில் உள்ள இராணுவச் சிப்பாயின் அனுமதிக்காக காத்து நின்றனர். கிளிநொச்சியிலிருந்து வந்த 803 இலக்க 'சி.ரி.பி' பேருந்து புளியடிச்சந்தியில் (அக்கராயன் சந்தி) சோதனையிடப்பட்ட பின்னர் பாலையடிச்சந்திக்கு (ஸ்கந்தபுரம் சந்தி)) போகமுன்னர் அக்கராயன் காம்படியில் சோதனைக்காக பிரயாணிகள் இறக்கிவிடப்பட்டனர். ஆனந்தன் யோசித்தபடி ஓரமாக நின்றான். ரணசிங்கவும் ஆரியரத் னாவும் 1971 இல் கிளர்ச்சியில் இறந்தனரா அல்லது உயிரோடு இருக்கின்றனரா? அதுவும் அவர்கள் இங்குதான் இருப்பார்களா? அல்லது வேறு முகாம்களிலா? என்ற சந்தேகத்தோடு நின்றான்.

ஏனோ தெரியவில்லை அவர்கள் இருவரோடிருந்த அன்பும், நட்பும் அவர்களைத் தேடிப் பார்க்கலாம் என்ற எண்ணத்தை அவனுக்கு கொண்டு வந்தது. தற்போது எழுதுவினைஞராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் அவன் இன்று ஒரு தரம் தனது நட்புக்காக வேலையிலி ருந்து ஒருநாள் விடுப்பில் இங்கு வந்து நிற்கிறான். உள்ளே சென்ற இராணுவச் சிப்பாய் திரும்பி வந்தான். ஆனந்தன் ஆர்வமாக இருந்தான். ஆனந்தனுக்கு அருகில் சென்று அவனது சொந்த இடம் எதுவென்று சிங்களத்தில் கேட்டான்.; அவன் உருத்திரபுரம் என்று பதிலளித்தான்.

“அப்போ நீ யாழ்ப்பாணத்தில் இருந்து வரவில்லையா?”

“இல்லை.”

“ஏன் கேட்கிறீர்கள்?”

“இல்லை. எனது மேலதிகாரி நீ சுன்னாகத்திலிருந்து வந்திருந்தால் உன்னை உடனடியாகக் கைது செய்யுமாறு எனக்கு கூறினார்”

ஆனந்தனுக்குத் தெளிவாகப் புரிந்தது ஜே.வி.பி. கால பிரசாரங்களின் போது ஜே.வி.பி.க்கு சுன்னாகப் பகுதியில் பல ஆதரவாளர்கள் இருந்தனர் என்பது ஆனந்தனுக்கு நன்கு தெரியும். அந்த இராணுவச் சிப்பாய் ஆனந்தனிடம் அவன் தேடும் ஆட்களின் பெயர்களைக் கூறுமாறு கேட்டான். ஆனந்தன் இருவரது பெயர்களையும் கூறி னான். அந்த இராணுவச் சிப்பாய் மீண்டும் உள்ளே செல்கிறான். வாசலில் நின்ற மற்ற சிப்பாய் அங்கு காத்திருக்கும் தென்னிலங்கைச் சனங்களை வருமாறு அறிவுறுத்துகிறான். அவர்கள் ஒழுங்கு முறைப்படி வரிசையில் வருகின்றனர்.

சிறுவர்கள், வயோதிபர்கள், கைக்குழந்தைகளுடன் இளம்தாய்மார், இளம் பெண்கள், தாய்மார் எனப்பலரும் வந்து கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் கொண்டுவந்த பொதிகளைச் சோதனையிட்டு உள்ளே அனுப்புகின்றனர்.

உள்ளே சென்ற இராணுவச் சிப்பாய் மீண்டும் வருகிறான்.

ஆனந்தனுக்கு அருகில் வந்து “உனக்கு அவர்களை எப்படித் தெரியும்? ஏன் சந்திக்க வந்தாய் ?” என்று கேட்டான். 'நான் அவர்கள் இருவரோடும் பேராதனைப்பல் கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்தேன்'என்று கதையளந் தான். உள்ளே இருந்த கொமாண்டர் வெளியே வந்தான்.

ஆனந்தனருகில் நின்ற சிப்பாய் விலகிச் சென்றான்.


அந்தக் கொமாண்டர் ஆனந்தனிடம் சொன்னான் “இந்தப் பிரதேசங்களில் இருந்து நீ தேடி வருவது ஒரு சந்தேகமான ஒன்றாக இருக்கிறது. அவர்கள் இங்கே இருக்கிறார்கள் என்பது உனக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டான். கொமாண்டரின் கண்கள் அவனை ஊடுருவிப் பார்த்தன. ஆனந்தன் சொன்னான் “எனக்கு அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா [illegible] தெரியாது . அதை அறியத்தான் தான் இங்கு வந்தேன். அவர்கள் உயிரோடு இருக்கிறார்கள் என்று நீங்கள் சொன் னாலே, அது எனக்குப் போதுமானது . அவர்களை நேரில் பார்க்கா விட்டாலும் பரவாயில்லை” என்றும் பதில் கூறுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆனந்தனின் கூற்றுகளால் கொமாண்டரின் கண்களில் சந்தேகம் அகலாவிட்டாலும் மனதில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. அதனால் ஆனந்தனை உள்ளே சென்று, அந்த இருவரையும் சந்திப்பதற்கு அனுமதி அளித்தான். எனினும் அந்த இடம் பரபரப்பாக இந்தது. ஏனென்றால் தென்னிலங்கைப் பயணிகள் சோதிக்கப்பட்டு வரிசையாக உள்ளே சென்று கொண்டிருக்கின்றனர். ஆனந்தனைக் கொமாண்டர் உள்ளே அழைத்துச் சென்றான். காம்பின் வாசலைக்கடந்ததும் இடப்பக்கமாக புத்தரின் அழகிய சிலையொன்று கொட்டகைபோட்டு வழிபாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளது தெரிகிறது.

ஒரு பெரிய மண்டபத்திற்;குள் கைதிகளை உறவினர் களோடு பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. ஒரு மண்டபத்திற்குள் வெவ்வேறு இடங்களில் கூட்டம் கூட்டமாக இருந்து கைதிகளும் உறவினர்களும் பேசிக்கொண்டு இருந்தனர். சுவர்களில் சிவப்பு மற்றும் கறுப்பு எழுத்துகளால் புரட்சிகர வசனங்கள் எழுதப்பட்டு இருந்ததோடு, அவர்களது தலைவனை யும் ஓவியமாக சுவரில் வரைந்திருந்தனர். அந்த மண்டபத்திற்குள் வெற்றிடமாக உள்ள ஒரு பகுதியில் ஆனந்தனைக் காத்திருக்கும்படி கூறிவிட்டு கொமாண்டர் உள்ளே சென்று, அந்த இரண்டு கைதிகளையும் ஆனந்தனைப் போய் சந்திக்கும்படி கூறிவிட்டு, கொமாண்டர் சந்தேகத்தோடு தூரத்தே ஒரு மறைவிடத்தில் நின்று கொண்டு அவர்களை அவதானித்துக் கொண்டிருந்தான். ரணசிங்கவும் ஆரியரத்னாவும் ஆனந்தனைக் கண்டு பெரிய ஆரவாரம் காட்டாது கைலாகு கொடுக்கின்றனர். ரணசிங்கவின் கண்களில் கண்ணீர் துளிகள் பனித்தன. ஆனந்தனுக்கு மனம் கலங்கியது. அந்த மண்டபம் உரையாடற் சத்தங்களால் நிரம்பி வழிந் தது.

அவர்களுக்கும் உரத்துப்பேசவேண்டி இருந்தது. எனினும் ஆரியரத்னா ஆனந்தனைக் கண்டு ஆனந்தப்பட்டாலும் அவனது முகத்தின் கோடுகள் கண்ணசைவுத் திசைகள், அதில் தெரிகிற யோசனை கள் எல்லாமே ஏதோ ஒன்றைச் சொல்லிக் கொண்டி ருந்தன. ஆரியரத்னாவும் ஆனந்தனின் வீட்டு விலாசத்தைக் கேட்டு மனனம் செய்தான். மண்டபத் திற்குள் உரையாடுபவர்களுக்கு நடுவே இராணுவச் சிப்பாய்கள் சிலர் நடமாடித்திரிந்தனர். தூரத்தே மறைவிடத்தில் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண் டிருந்த கொமாண்டர் அவர்களது அசைவுகளையும் செயல்களையும் பார்த்துவிட்டு அதில் எந்த சந்தேக மும் இருப்பதாக தெரியாதபடியால் அவ்விடத்தை விட்டு நகர்ந்தான். *(மறுபக்கம் பார்க்க)*





# ஐந்தறிவின் நன்றி அறிவிப்பு

கலா,
பொன்னாலை

அன்று பத்து மணி இருக்கும், எங்கள் பக்கத்து வளவில் பசுக்கன்றை மேய்ச்சலுக்கு விடப்போன உதவியாள் தேவன் கன்றைக் கட்டி விட்டு ஒரு வித பதைப்புடன் வந்து கூப்பிட்டான் 'அம்மா.. அம்மா.. உங்கள் பக்கத்து வீட்டுப் பிள்ளையின் படலை பூட்டியிருக்கு. அவவின் வீட்டிலிருக்கும் வளர்ப்பு நாய், நான் கன்று கட்டப் போனதை வேலியால் பார்த்து தள்ளாடித் தள்ளாடி வந்து என்னிடம் உள்ளே வருவதற்கு பாதை இல்லாததால் அந்தப் பக்கம் நின்று கொண்டு அழுவது போல் முனங்கி முனங்கி என்னிடம் ஏதோ கேட்கிறது, பசி போல் இருக்கிறதும்மா .எங்கள் வீட்டில் காலைச் சாப்பாடு முடிந்து விட்டது. மதியத்திற்கு இனித்தான் மனுசி சமைக்கப் போறாள் 'என்று சொன்னான்.

'சரி தேவன் இங்கும் இன்று மதியச் சாப்பாடு வைக்கவில்லை .எல்லோரும் எங்கோ சாப்பிடப் போகிறார்களாம். எனக்கும் கொண்டு வருவார்களாம். நான் இங்கு இருக்கும் காலைச் சாப்பாட்டில் கொண்டு போய் வைக்கிறேன்' என்றேன். அவன் போய் விட்டான். நான் சாப்பாடு இருக்கிறதா என்று சமையற் கூடத்தில் பார்த்தேன். பிட்டு சிறிது இருந்தது. போதாது . குளிர்சாதனப் பெட்டியில் பார்த்தேன். ஒரு சாப்பாட்டுப் பார்சல் (பொதி) சோறு அவிழ்த்து கறியுடன் இருந்தது எனக்குச் சந்தோசம். அந்த ஐந்தறிவு ஜீவனுக்கும் மகிழ்வாயிருக்கும் என்று எடுத்துச் சென்று எங்கள் வளவு வேலிப்பக்கம் நின்றேன்.

'பப்பி. பப்பி ' என்று கூப்பிட்டேன். ஓடி வரவே அதனால் முடியவில்லை. மெல்ல மெல்ல என்னையே பார்த்த படி முனங்கிக் கொண்டு உள் வருவதற்கு முயற்சித்தது. நானும் அது வரக்கூடியதான வேலிப் பிரிவைத் தேடி அந்தப் பக்கம் நின்றேன். வாலை ஆட்டியபடி அதற்குள்ளால் புகுந்து வந்தது. சாப்பாட்டுப் பொட்டலத்தைப் பிரித்து வைத்தேன். மிக ஆவலுடன் சாப்பிடத் தொடங்கியது.

தொண்டை வரட்சியினால் போலும் கஷ்டப்படடு அவதிப்பட்டு சாப்பிடத் தொடங்கியது. நான் வீட்டுக்குச் சென்று ஒரு கிண்ணத்தில் நீர் எடுத்து வந்து வைத்தேன். அதுவும் வாலை ஆட்டியபடி வந்து நீரை நக்கிக் குடிப்பதும் சாப்பிடுவதுமாகச் சாப்பிட்டு முடித்தது. அதற்குள் எமது வளர்ப்பு ஜீவன் என் பின்னால் வந்து "அது எனக்கு ஏதோ தீங்கு செய்கிறது" என்றெண்ணி அதனுடன் சண்டையிட வந்தது. நான் "ஒன்றுமில்லை நீ வீட்டுக்குப் போ " என்று அதனை விரட்டி விட்டு நின்றேன்.

அதற்குள் களை நீங்கிய பக்கத்துவீட்டு ஐந்தறிவு ஜீவனின் செயலை எப்படி விபரிப்பது என்றே புரியவில்லை. அந்த ஜீவன் எனக்குக் கிட்ட ஓடி வந்து முன்னங்கால் இரண்டையும் முன் நீட்டி பின்னங்கால் இரண்டையும் பின் நீட்டி மடித்து வணங்குவது போல் கிடந்தது. பின் எழும்பி ஏதோ சொல்வது போல் முனங்கி என்னைச் சுற்றி வந்து அவ்வாறே செய்தது.

நானும் 'சரி சரி போதும் பசி தீர்ந்தது தானே .போய் வீட்டில் இரு' என்று சொல்லி வீடு நோக்கிச் செல்ல , அந்த ஜீவனும் விடாமல் என் பின்னே வந்தது. எங்கள் வாயில்லா ஜீவனும் அதனைத் தேடிச் சென்றது. 'வா.. வா.. அது போகட்டும் பசியில் வந்தது' என்று சொல்லி அழைத்துச் சென்றேன். அப்போது தான் ஐந்தறிவு ஜீவன் தன் நன்றியை எப்பிடி அறிவித்தது என்று ஆச்சரியப்பட்டேன். வீட்டுக்கு வந்த எல்லோரிடமும் இந்த அதிசயச் செய்தியை சொல்லி மகிழ்ந்தேன்.

அன்று மாலை அந்த வீட்டுக்காரப்பிள்ளை வந்தபோது விடயத்தை சொல்லிக் கேட்க தான் நாலு நாள்கள் எங்கோ போனதையும், இன்னொருவரிடம் நாய்க்கு தண்ணீர் சாப்பாடு வைத்து விடும் படி சொன்னதாகவும், அவர் இரவில் வந்து வைப்பார் என்றும் சொன்னார். ' நாம் வளர்க்கும் ஒரு உயிருள்ள ஜீவன் பிள்ளைக்குச் சமமானதல்லவா ?'என்று அந்தப் பிள்ளையிடம் சொன்னேன். அந்த ஜீவனின் அன்றைய நிலையை செயலை என்னால் மறக்கவே முடியவில்லை. நன்றியுள்ள ஜீவன் என்பதை செயலினால் வெளிப்படுத்தியமை நான் பெற்ற ஓர் மறக்கவியலா அனுபவமே.

# துப்பாக்கியும்...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது மண்டபத்துக்குள் பரபரப்பாக கேட்டுக் கொண்டிருந்த சத்தங்கள் சற்றுக் குறைவடைந்து விடுகின்றன. ஏனென்றால் முதலில் கண்டதும் ஏற்பட்ட மகிழ்ச்சி இப்போது கைதிகளுக்கும் உறவினர்களுக்கும் இடையிலான அந்த வெற்றிடத்தை உணரத் தொடங்கியதால் ஒரு கவலையான மனோநிலை பரவி இருந்தது.

அந்த மண்டபத்திற்குள் நின்ற அந்த மூவருக்குள்ளும் ஆரியரத்னாவின் கண்கள் பிரகாசித்தன. அவன் ஏதோ ஒன்றை ஆனந்தனுக்கு இரகசியமாகச் சொல்வதற்கு முனைகிறான் என்பது தெரிந்தது. ஆனால் அருகில் நின்ற சனக் கூட்டத்தாலும், சிப்பாய்களது நடமாட்டத்தாலும் அது சாத்தியமற்றுப் போனது.

அவர்களுக்குரிய உரையாடல்களுக்கான நேரம் முடிவடைந்து. உறவினர் எல்லோரையும் வெளியேறுமாறு உரத்த குரலில் அறிவிக்கப்பட்டது.

எனினும் ஆரியரத்னா மிக விரைவாக ஆனந்தனிடம் ' அடுத்த தரம் வரும்போது தங்களுக்கு சாப்பிட ஏதாவது கொண்டு வாங்க. காலை வேளையில் வந்தால் சனநெரிசல் இல்லை என்பதால் நாங்கள் ஆறுதலாக பேசிக்கொள்ளலாம் ' என்றும் கூறினான்.

எல்லோரும் வெளியேறிச் சென்றுவிட்டனர்.

ஆனந்தனும் விடைபெற்றுப் போய்விட்டான்.

ஒரு மாதத்தின் பின் ஆனந்தன் அவர்களுக்குரிய சாப்பாடு, சிற்றுண்டிகளுடன் சோதனைச்சாவடிக்கு காலை எட்டு மணியளவில் வந்து விட்டான். ஏற்கனவே அவன் சிறைச்சாலைக்கு வந்து திரும்பி போகும் பொழுது ஒப்பமிட்டுச் சென்ற வேளை நின்ற அதே சிப்பாய் இன்றும் நின்றதால் அவன் உடனேயே ஒரு மாதத்திற்கு முன் வந்த பதிவைப்பார்த்து அனுமதித்து விட்டான். ஆனந்தன் கொண்டுவந்த பை சோதனையிடப்பட்டது. பின்னர் ஒரு சிப்பாய் அவனை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான். அதே வேளை அங்குள்ள கொமாண்டருக்கும் அவனது வருகை பற்றி அறிவிக்கப்பட்டது.

பொது மண்டபத்திற்குள் மூவரும் சந்திப்பதற்கு விடப்பட்டனர். ஒரு சிப்பாய் அவர்களுக்கு மிக அருகில் கண்காணித்துக்கொண்டு நின்றான். ஆனந்தன் தான் கொண்டு வந்த உணவை அவர்களிடம் கொடுத்தான். இருவரும் பொதியைப் பிரித்து சாப்பிட ஆரம்பித்தனர். அவ்வேளை ஆரியரத்னாவுக்கு ஒரு எண்ணம் மனதில் தோன்றியது. அவர்களை கண்காணிக்க நின்ற சிப்பாயிடம் ஆரியரத்னா தங்களுக்கு வந்த உணவில் ஒரு பகுதியான பயற்றம் உருண்டையை எடுத்துக்காட்டிச் சாப்பிடும் படி கேட்டான். அவன் சிரித்து வேண்டாம் என்று சொல்லி, நன்றியும் சொல்லிவிட்டு அவர்கள் சாப்பிடுவதைப் பார்க்காதவாறு சற்றுத் தள்ளிப் போய் நின்றான். அந்தத் தருணம் பார்த்து ஆரியரத்னாவும் ரணசிங்கவும் சந்தேகம் வராதபடி ஆனந்தனிடம் சிரித்துச்சிரித்து வேகமாகப் பேசினர். தாங்கள் இந்தச்சிறையில் இருந்து தப்ப நினைப்பதாகவும் அதற்குரிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கியதாகவும் குறிப்பிட்டார்கள். தாங்கள் கேட்கும் உதவியை செய்து தரும்படி ஆனந்தனிடம் கேட்டனர் .ஆனந்தனுக்கு மனதில் பயம் ஏற்பட்டாலும் அவர்கள் மேல் இருந்த உண்மையான நட்பு காரணமாக உதவி செய்வதற்கு சம்மதித்தான்.

தங்களுக்குத் தோட்டம் செய்வதற்காக வழங்கப்பட்ட 10 சதுர அடி நிலத்தில் காணப்படுகின்ற நெருக்கமாக செழித்து வளர்ந்து காய்த்துக்குலுங்கி நிற்கும் கத்தரிச் செடிகளின் மறைவிற்குள் நிலத்துக்கு கீழால் சுரங்கம் தோண்டி இராணுவ வாகனங்கள் சுற்றிக்கண்காணிக்கும் கிரவல் பாதையைக்கடந்து ஒரு பற்றைப்பகுதியில் மிதந்து காட்டுப்பகுதிக்கூடாக தப்பிச்செல்லும் திட்டத்தை கூறுகிறார்கள். ஆனந்தன் எந்தளவிற்கு தான் என்ன மாதிரி உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கும்போது அந்த இராணுவச் சிப்பாய் இவர்களை நோக்கி வந்தான். அவர்கள் பேசிக் கொண்டிருந்த கதையை மாற்றி ஆரியரத்னாவின் காதலி வேறு ஒருவனைத் திருமணம் செய்துவிட்டாள் என்ற தலைப்பின் கீழ் கதைக்கின்றனர். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரமும் முடிந்து விட்டது. தென்னிலங்கையில் இருந்து சிறைக்கைதிகளைப் பார்க்க வரும் உறவினர்களும் உள்ளே வர ஆரம்பித்து விட்டனர். ஆனந்தன் விடைபெற்றுச்சென்று விட்டான்.

ஆனந்தன் பல தடவைகள் அங்கு வந்து சென்றமையால் பல ராணுவத்தினர் அவனுக்குப் பழக்கமாகி விட்டனர். உள்ளே சென்று வருவது இலகுவாக இருந்தது. இந்தப்பழக்கமான ஒரு தொகுதி இராணுவத்தினர் இடம் மாற்றம்பெற, புதிய இராணுவத்தொகுதி அங்கு வந்தது. அந்த இரண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மாரி மழை தொடங்குவதற்கு முன்னர் தோட்டம்; செய்ய ஒதுக்கப்பட்ட அவர்களின் திட்டத்தின் படி ரணசிங்கவும் ஆரியரத்னாவும் ஒரு ஆள் தவழ்ந்து, எலி போலச்செல்லும் சுரங்க வழியாகச் சென்று பற்றைக்காட்டுக்குள் மிதந்து, அங்கு காத்திருந்த ஆனந்தன் கொண்டு வந்திருந்த புது ஆடைகளை அணிந்து கொண்டு அக்கராயன் காட்டு வழியாகச் சென்று முறிகண்டியில் புகையிரத வண்டியேறி மாயமாய் மறைந்து விட்டனர்.

இராணுவத்தினர் ஆனந்தனை சல்லடை போட்டுத்தேடுகின்றனர்!

பதிவுப்புத்தகத்தில் அவனது கையொப்பப் பகுதியில் காணப்பட்ட வீட்டு முகவரியைத்தேடி அலைகின்றனர். அந்த முகவரியில் அப்படியொரு வீடுமில்லை. ஆளுமில்லை.

ஏனென்றால் ஆனந்தன் செட்டிக்குளத்திலேயே வசித்து வந்தான்.

புளியடிச்சந்தி ஆஸ்பத்திரி பேக்கரி கன்ரீன் நடத்திய ரட்ணசிறியையும் இராணுவம் துருவித்துருவி விசாரணை செய்தது. எனினும் யார் அந்த இனம்தெரியாத எழுதுவினைஞர் ஆனந்தன் என்று தேடும் படலமும் ஆரம்பித்திருந்த அதேநேரம் அக்கராயன் காம்பும் மூடப்பட்டுவிட்டது.

அடுத்ததாக தமிழ்ப் பகுதியில் ஒரு இடத்தில் இறைவரித் திணைக்களத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 16 இரட்டைக்குழல் துப்பாக்கிகளை காவலுக்கு நின்ற பாதுகாப்பு உத்தியோகத்தரை கட்டி வைத்துவிட்டு சிலர் எடுத்துச்சென்றனர் என்று பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருந்தது. தமிழ்ப் போராட்டக்காரர்களே இதைச் செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவிப்பதாகவும் அதில் இருந்தது.

அத்தோடு ஆனந்தன் திரீறோஸஸ் சிகரெட் பிடிப்பதையே நிறுத்திவிட்டான்!

*(பின் குறிப்பு - 1977 இன் இனக்கலவரத்தில் சிங்களப் பகுதிகளில் தமிழர்கள் தாக்கப்பட்டு தமிழ் பிரதேசங்களிற்கு வர, ஆஸ்பத்திரிக் கன்ரீனும் பேக்கரியும் நடத்திய ரட்ணசிறி தாக்கப்பட்டு சிங்களப் பகுதிக்குச் சென்றுவிட்டார்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஊர்ப்புதினம்

பாகம் 4

○ இராகவன்

மைக்கல் கொலின் அண்ணை பேராசிரியர் சி. மௌனகுருவுக்கு மகுடத்தால் சிறப்பிதழ் வெளியிடப் போவதாக என்னிட்ட ஒருக்கால் மொபைல்ல கதைக்கேக்குள்ளை சொன்னார். எனக்குப் பழம் நழுவிப் பாலுக்கை விழுந்த மாதிரியிருந்தது. அப்ப நான் இந்தப் பேட்டி விஷயத்தைச் சொன்னன்.

அது அவர் மூலமாத்தானே நடந்தது. நான் இதைச் சொன்னாப்போல ‘ நல்ல ஐடியா. அதையும் சிறப்பிதழில போடுவம்’ எண்டார். அவ்வளவுதான். அந்தப் பேட்டி சிறப்பிதழில வந்திட்டுது. இதுதான் அந்தப் பேட்டியின் முன் கதைச் சுருக்கம்.

அந்தச் சிறப்பிதழ் வெளிவந்து ஒரு சில மாதங்களில மு. பொ.வின்ர கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா வொண்டு முத்திரைச் சந்தியிலையிருக்கிற யூரோவில் நிறுவனத்தில் நடந்ததைப் பற்றிக் கிட்டடியிலும் ஊர்ப்பு தினத்தில் குறிப்பிட்டிருந்தனான்.

அந்த நிகழ்வில அரசியல் ஆய்வாளர் கே.ரி. கணேசலிங்கம், பேராசிரியர் காசிநாதன், பேராசிரியர் சி. மௌனகுரு இவையளோட நானுமொரு பேச்சாளன். எங்கட மூத்த எழுத்தாளர் சட்டநாதன் தான் முழு ஏற்பாடும் செய்தவர். அவர் தான் அதில் என்னையுமொரு பேச்சாளனாப் போட்டிருந்தார். அண்டைக்குப் பேராசிரியர் சி. மௌனகுருவுக்கு யாழ். பல்கலைக்கழகத்திலயும் ஒரு புறோக்கிராம் இருந்ததால மு. பொ.வின்ர புத்தக வெளியீட்டுக்குக் கொஞ்சம் பிந்தித் தான் வந்தவர்.

அவர் வரேக்குள்ளை நான் பேசி முடிச்சிட்டேன். அவர் வந்து கடைசியாத் தான் பேசினவர். நிகழ்ச்சி முடிஞ்சாப்போல நான் அவருக்கு முன்னால போய் நிண்டு ‘வணக்கம் ஸேர்!’ எண்டன். அவரோட அதுவரைக்கும் மொபைல்ல தான் கதைச்சிருந்ததால முதன்முதலாய் நேரில சந்திக்கேக்குள்ளை அவரால என்னை மட்டுப்பிடிக்க முடியேல்ல. ‘நீங்கள்…?’ எண்டவர் இழுக்க, மு. பொ தான் ‘இவன்தான்ராப்பா ராகவன்’ எண்டு சிரிச்சுக்கொண்டே சொல்ல ‘எட அது நீதானோ? உன்னைச் சந்திக்கவேணுமெண்டுதான் முக்கியமா நானிங்கை வந்தனான். சந்தோசம்!’ எண்டு சொல்லிக் கையைக் குலுக்கிக் கட்டிப்பிடிச்சார். பிறகு ‘தம்பி! பொன்மணியில நான் நடிச்சதைப் பற்றி நீ கேட்டிருந்த கேள்வியள ஒவ்வொண்டா வாசிச்சு வாசிச்சு விடையெழுதேக்குள்ளை நான் என்னையறியாமலேயே அந்தக் காலத்துக்குப் போய் வந்தனராப்பா! அது ஒரு வித்தியாசமான அனுபவமாயிருந்தது.

17


அதுக்காக உனக்கு என்ர மனமார்ந்த நன்றி!’ எண்டு சொல்லி வலு சந்தோசப்பட்டார். உண்மையில என்னை அறியாமலேயே பொன்மணிப் படத்தைப் பற்றி நான் செய்திருக்கிற ஒரு முக்கியமான பதிவு எண்டதில எனக்கொரு பெருமிதமிருக்கு.

இதை பேராசிரியர் சி. மௌனகுரு சிறப்பிதழில சேர்க்கிறதுக்கு முழுமனதோட சம்மதிச்ச மைக்கல் கொலின் அண்ணைக்கு இந்த இடத்தில் நன்றி சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன். நான் எதை எழுதினாலும் அவர் மகுடத்தில போடுறதுக்கு எப்பவும் ரெடியா இருப்பார்.

மகுடம் ஒவ்வொரு இதழும் ரெடியாகேக்குள்ளை எனக்குக் கோல் எடுத்து 'மகுடத்துக்கு ஏதாவது அனுப்புங்கோ!' எண்டு கேப்பார். நானும் அனுப்புவன். நாங்களும் சஞ்சிகை நடத்திறம் எண்ட பெயரில சிலர் தங்கட பாட்டுக்கு நாகரிகமில்லாமல் வெட்டிக் கொத்தி வெளியிடுகிற வேலையெல்லாம் அவர் பாக்கமாட்டார்.

(தொடரும்)

# வட்ஸ் அப் வாத்தியும் பேஸ்புக் பேத்தியும்



**பேத்தி :** குட் மோர்னிங். இண்டைக்கு பேஸ்புக்கிலை இப்ப ஈரான் அமெரிக்கச் சண்டை பெரிசா இல்லை. அடிபட்டுச் சாகட்டும் எண்டு சனம் விட்டிட்டுது. உள்ளூர்ப் பிரச்சினைதான் கூட.

**தாத்தா :** சாம்பிளுக்கு ஒண்டை அவிட்டு விடு பாப்பம்.

**பேத்தி :** தையிட்டி விகாரைக் காணியள் பற்றின கிளைமாக்ஸ். இந்தா விடப்போறம் எண்டு போன அத்தனையளும் பெருந் தில்லுமுல்லுக் கொம்பனி போலை இருக்கு. ஏனெண்டால் அந்த பேஸ்புக்கிலை போட்டவர் இப்பிடிப் போட்டிருக்கிறார்.

'வடக்கு-கிழக்கு முழுக்கவும் காணிகளை அபகரிக்கேக்கையும் சட்டவிரோதக் கட்டடங்களைக் கட்டேக்கையும் காணி உரிமையாளர்களின்ரை எந்த அனுமதியும் தேவை இல்லை. ஆனால் அதை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கேக்கை ஏன் அவர்களின்ரை அனுமதி தேவை? அரச சார் அதிகாரிகளின்ரை இதயம் சுத்தியுடன் இருந்தால் காணிகளை காணி உரிமையாளர்களுக்குக் குடுத்துவிட்டுப் போகலாமே? குழப்பமான வார்த்தைகளை போட்டுத் தேவையற்ற நிறுவனங்களையும் கூப்பிட்டு வைச்சுக் கொண்டு மக்களை ஏன் குழப்புகினம்?'

**தாத்தா :** உதிலை முந்தின அரசாங்கம் சரியான தில்லுமுல்லுச் செய்திருக்கெண்டு வடிவா விளங்குது. இப்ப எங்கடை ஆக்கள் துவங்கின போராட்டத்தை விகாரை கட்டத் துவங்கேக்கை செய்திருக்க வேண்டியது. கட்டிக் கும்பாபிஷேகம் செய்தாப் பிறகு எதிர்க்கிறது வீண் வேலை. இப்ப இடிக்கிறதுக்கு எந்தப் பௌத்தனும் உடன்படான்.

வாற 2030 வரைக்கும் இலங்கை அரசாங்கம் தங்கடை தான் எண்டுதான் நினைச்சுக் கொண்டிருந்தவைதான் ராஜபக்ச கொம்பனி. அதாலைதான் தையிட்டித் திஸ்ஸா விகாரைக்கோ வேறை எந்த அத்து மீறிக் கட்டின விகாரைகளுக்கோ நடவடிக்கை எடுக்காமல் இருந்தவை. தாங்கள் இப்பிடி அநுரவிட்டை அரசாங்கத்தைப் பாரம் குடுத்திட்டுப் போக வேண்டி வரும் எண்டு கடைசிவரைக்கும் நினைக்கேல்லை. அதாலைதான் சட்டரீதியா எதையும் செய்யாமல் அரைகுறையா விட்டிட்டினம். அது இப்ப அநுர அரசுக்கு ஒரு சிக்கலா இருக்கு. அவை ஏற்படுத்தின சிக்கலைச் சிக்கெடுக்கிறதே அவைக்குப் பெரும் சிக்கலா இருக்கு. அதுவும் பௌத்த சமயம் சம்பந்தமான விசயம் இன்னும் சிக்கலைக் கொண்டு வரும் எண்டது தான் என்ரை கருத்து.

**பேத்தி :** ஆனால் அரசாங்கத் தரப்பிலைபோன அதிகாரியள் போராட்டக்காரரர் கேட்படி தங்கடைபக்க நியாயத்தை லெட்டர் ஹெட்டிலை குடுக்கலாம்தானே. ஒரு போட்டோ கொப்பிப் பேப்பரிலை அந்தப் பிரச்சினை தொடர்பா இருந்து பேசின ஆறு பேரும் கையெழுத்துப் போட்டிட்டு' இதைப் பிடியுங்கோ… பிடியுங்கோ' எண்டு வற்புறுத்திறது சரியோ? அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட எம்.பி. டாக்குத்தர், தெல்லிப்பழை டீஎஸ், வலி. வடக்குத் தவிசாளர் எண்டு எல்லாரும் அந்த வெள்ளைப் பேப்பரிலை குடுக்கிறதைச் சரி எண்டு சொல்லுறதுதான் ஆச்சரியம்.

**தாத்தா :** தையிட்டி, வெடுக்குநாறி எண்டு எல்லாம் எங்களுக்கு எப்பவும் தலையிடியாத்தான் இருக்கப்போகுது. மூக்கிருக்கும் வரை சளி இருக்கும் எண்டது உண்மைதான். அடிப்படை வரலாற்றிலை தெளிவில்லாமலும், சரித்திரம் தெரியாமலும் பௌத்தத்தைச் சரிவர விளங்கிக் கொள்ளாத ஒரு வர்க்கம் இப்ப வளர்ந்து வருகிது. அவையளை வழி நடத்த வேண்டிய வயது போன அனுபவமுள்ள துறவிகளிலை கொஞ்சப்பேர் ஒதுங்கி இருக்கினம். மிச்ச ஆக்கள் இனத்துவேசிகளின்ரை எடுபிடியளா மாறிவிட்டினம். அதிலையும் இந்த நாட்டிலை சமயத்துக்குக் கிடைக்கிற முதல் மரியாதையைப் பாவிச்சு போதைப் பொருள் கடத்துற கடத்தல்காரர்களின்ரை கைக்கூலியாள மாறிவிட்டினம். எப்ப மதம் எண்டதுக்கு முன்னாலை மனிதம் நிக்குதோ அண்டைக்குத்தான் எங்களுக்கு விடிவு.

**பேத்தி :** அதிலையும் ஒரு பகிடி தாத்தா. அந்த வியட்நாம் துறவி நாயைப் பிடிச்சுக் கொண்டு அமைதிக்காக நடக்கிறன் எண்டு ஒரு பக்கம். அடுத்த பக்கம் போதைப் பொருள் கடத்தின அவையளைப் புத்த பிக்கு எண்டு சொல்லாதையுங்கோ. காவி உடை போர்த்த கடத்தல்காரர்கள் எண்டு சொல்லுங்கோ எண்டு ஒரு பௌத்த பிக்குச் சத்தம் போடுறார். வேணுமெண்டு கடத்தல்காரர்களைப் புத்த பிக்குகள் எண்டு ஊடகங்கள் சொல்லிப் பௌத்த சமயத்துக்கு இழுக்கைச் சேர்க்கினமாம் எண்டும் அவர் கத்திறார். எப்பிடித் தாத்தா கதை?

**தாத்தா :** சொல்லுறவன் உப்பிடி எல்லாத்தையும் சொல்லுவன். கேக்கிறவைக்கெல்லோ மதி வேணும். பொதுவாப் பார் அறமான பிக்குகள் கனக்கக் கதைக்க மாட்டினம். கழிசடைகள்தான் கத்துவினம்.

**பேத்தி :** உதுக்கு பாஷை தெரிய வேணும் விளக்கம் குடுக்க. அப்பிடி ஒராக்களும் எங்கடை பக்கம் இல்லையோ?


**தாத்தா :** அப்பிடி ஒன்றிரண்டு பேர் இருக்கினம். நல்லவை எண்டு நாங்கள் நினைக்கிறவைக்குப் பாஷை தெரியாது. பாஷை தெரிஞ்சவையளிலை ஒண்டுக்கு விசர். மற்ற இரண்டிலையும் ஒண்டு ஏற்கனவே அங்கை இருந்து வந்ததுதான். அது நக்குண்டார் நாவிழந்தார் எண்டு வாய் திறந்தால் கிரந்தம் கதைக்கும். மற்றது ஒரு எய்யப்பட்ட அம்பு. அது ஒருக்கா வன்வலு எண்டு சொல்லும். பிறகு மென் வலு எண்டு சொல்லும். அதெல்லாம் ஒரு வகைச் சூத்துமாத்துத்தான் எண்டது கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

**பேத்தி :** சட்டவிரோத கட்டுமானத்திற்கு எதிராக வழக்கு போடுவம்'இது ஒரு சட்டவிரோதக் கட்டடம்' என்று விகாரை முன்பாக அறிவித்தல் பலகை நடுவம். தையிட்டியில் தற்போதுள்ளது விகாரை ஒரு சட்டவிரோதமாகக் கட்டுப்பட்ட விகாரை எனச் சிங்களப் பேப்பர்களிலையம் ஊடகங்களிலையும் விளம்பரங்களைப் பிரசுரிப்பம். விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் உள்ள பிரதேச சபைக்கு சொந்தமான 'பவானி'வீதியை' 11ஆம் திகதிக்கு முன்னர் திறக்க வேண்டும். இல்லையேல் வேலியை அகற்றுவோம். அகற்றும் செலவை தாங்கள் தான் தர வேண்டும் என்றும் , சட்ட நடவடிக்கைக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என்றும் விகாரதிபதிக்கு பிரதேசசபை எச்சரிக்கைக் கடிதம் அனுப்பினது பற்றி என்ன நினைக்கிறியள் தாத்தா?

**தாத்தா :** வன்னி ஊடகச் சந்திப்பிலை தலைவர் சொன்னமாதிரி 'நடக்கிறதைக் கதையுங்கோ'எண்டு சொல்லவாறன். அதாலை குத்தி முறியாமை போய் பாக்கிறதைப் பார்க்கச் சொல்லு மேனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பூர்ணிமா



## போரின் கவிதை

## 62

ஆனந்தி

நெருப்புத் துளிகளாக
வானம் பொழிந்த குண்டுகள்...
மலிவாகிப் போன மரணங்களை
மொத்தமாய் வாங்கிக் கொண்டன.
நாலாபுறமும் நெருக்கிக் கொண்டு
நர்த்தனமாடும்... கோர மேகங்கள்.
வெடிச்சத்தங்களின் இடையில்
கருமை படர்ந்த வானிலிருந்து
சிந்திய இரத்தத் துளிகள்.
மழையெனப் பெய்து
மண்ணை நனைத்தது.

விளையாடித் தீர்க்காத
வீதிகளின் ஓரங்களில்
சிறிய பாதங்கள் சிதறிக்கிடந்தன...
வலியின் ஓலம் வார்த்தைகளை விழுங்க...
அங்கங்களை இழந்த அரும்புகள்
மண்ணின் மடியில்
மயங்கிச் சரிந்தன.

ஒதுங்கி நின்றோரையும்
ஒளிந்திருந்தோரையும்
நிழல் போலத் துரத்தி...
துவம்சம் செய்தது அசுரப் போர்.
இங்கே சாவைத் தவிர
வேறெதுவும் மிச்சமில்லை.
நச்சுக்குப்பிகள் கைகளில்...
திணிக்கப்பட்டன...
மரணத்தின் வாசலில்
வரிசையாக நிற்கப்
பணித்தாயிற்று.

காப்பாற்றுவார்கள் என நம்பி
நடந்த பாதைகளில்...
மிஞ்சியது ஏமாற்றம் மட்டுமே.
வழிகாட்டியவர்களின் முதுகில்
துரோகத்தின் நிழல்...
பின் தொடர்ந்த மக்களின் விழிகளில்
முடிவில்லா அழுகை.
அழுது அழுது வற்றிப்போன கண்களில்
பெருகிய கண்ணீர் இறக்க..
மூளையை இறுக்கியது
உறைந்து போன துயரம்...
வேலை என்னும் அடிப்படைக்காக...
கணவனின் பணிக்காய்
ஆயுதங்கள் முளைத்த
போர்ப் பூமியில்
காலடி வைத்தோம்.

முத்தான மூன்று புதல்வர்கள்...
செல்லமாக வளர்ந்த ஒற்றை மகள்.
நால்வர் சிரிப்பில் நாங்கள் கண்ட
சொர்க்கம் நாலாபுறமும்
வெடித்த நெருப்பில் கருகியது.
கல்வியின் ஒளி பரப்ப
பொறுப்பதிகாரியாக நின்றவர்...
அதிகாரத்தின் கோரப்பிடியில்
கைதியாகிப்போன கதை.
கடமை செய்யச் சென்றவன்
காலச் சிறையில்...
தனித்துவிடப்பட்ட மேகங்களாய்
நாங்கள் மட்டும் வெற்று வெளியில்.

மருத்துவம் கற்றவள்
மரணக் காயங்களுக்கு
மருந்தாகிக் கொண்டிருந்தாள்...
இறப்பின் பிடியில் விழுந்த மனிதர்களுக்கு
மறுவாழ்வு தரும்
தேவதையாக அவள் கரங்கள் நீண்டன.
வெறிபிடித்த போர்
வேட்டையாடத் தொடங்கியபோது...
ஒதுங்க இடம் தேடி
இருண்ட பதுங்குகுழி நோக்கி
விரைந்தன கால்கள்.
போரின் அகோரப் பசிக்கு
இரையானது அவள் மருத்துவப் பையும்
மாசற்ற கனவுகளும்.
பாதுகாப்புத் தேடிய
பதுங்குகுழி வாசலில்...
சிதறிப் போனது ...
எங்கள் விளக்கு!
மருத்துவம் செய்தவள்
இன்று மண்ணோடு மண்ணாக.

மூன்றும் ஒன்றும் கூடாது
முணுமுணுப்பாள் என் தாய்
அடுப்பும் நெருப்பும் ஒன்று கூடின்
அழிவென்று அவள் அஞ்சினாள்.
நெருப்பை இழந்தபோது...
அடுப்பைக் காக்க நான் அழுது கதறினேன்...
ஆனால், காலத்தின் அடுப்பில்
நெருப்பாகப் பொழிந்த குண்டுகள்
அடுப்புகளையும் அழிக்க நினைத்தன..
அதில் சமைக்க இருந்த ஆயிரம்
கனவுகளையும் பொசுக்கின.

மருத்துவ உலகம் வியந்து
நோக்கியிருக்க வேண்டிய
என் செல்வமே...என் மகளே!
சிந்தனையும் செயலும்
சிறப்பாக அமைந்த உன் மேதைமை...
உருக்குலைந்து உரு அழிந்து
மண்ணோடு போனதே.
நீ பிழைத்திருந்தால்
மரணத்தின் பிடியிலிருந்து
மக்களை மீட்டிருப்பாய்...
இன்று உன்னை மீட்க வழியின்றி
உன் நினைவுகளை மட்டும்
ஆவணமாக்கி அழுகிறேன்.

நெருப்பைத் தொலைத்தவள்
அடுப்பைக் காக்க
அன்புக் கணவரிடம் அழுது நின்றேன்.
துப்பாக்கி முனையில் துடித்து நின்ற
என் ஆண்மக்களை மீட்டெடுக்க...
திசைகள் அதிரக் கத்தினேன்.
பிணைக்கைதியாக நின்ற
என் சரிபாதியை... அசுர பலம் கொண்டு
அடக்கி இழுத்தேன்.
இவர்கள் தப்பினால் போதும்...
என் மக்களை எப்படியாவது
காப்பாற்றித்தாருங்கள் என
வேண்டிக் கதறினேன்.

மரணத்தின் நிழலில் நின்றபடி
என் குடும்பத்திற்காக
நான் ஆடிய தாண்டவம்...
வரலாறு சொல்லாத....
ஒரு பெண்ணின் பெரும் போர்.

கால்களில் தடுக்கும்...
பெயரறியாப் பிணங்கள்...
அவற்றைக் கடந்து
வெறிச்சோடிய வீதிகளில்
தப்பித்துவிடத் துடித்தது உள்ளம்.
பொன்னாகப் பெற்ற பிள்ளைகளை
மண்ணுக்குப் பலியிட மனமில்லை...
ஒரு துளி மூச்சையும்
பறிகொடுக்கத் தயாரில்லை

இறுகுகிறது கழுத்தைச் சுற்றி
மரணப் பாசம்...
தப்ப முடியாத இடர்
வளைத்துக் கொண்டது
நான்கு திசைகளையும்.
இதுதான் முடிவென்று
உறைந்து போன பொழுதுகளில்...
பிள்ளைகளுக்காக இன்னொரு
உயிரைத் தேடித் துடித்தது
என் ஆன்மா.
திசையெங்கும் நெருப்பு மழை பொழிய...
மரணத்தின் இடைவெளியில்
தரகர்களின் கைகள்
சுறுசுறுப்பாக நீள்கின்றன.
வாழ்வா? சாவா?
எனும் சூதாட்டத்தின் நடுவே...
பணக்கறப்புகளின் பசி
அடங்கவில்லை...

பணம் கொண்டவன்
பாதுகாப்பான பாதையை
விலைக்கு வாங்கித் தப்பிக்க...
உறவுகளைப் பறிகொடுத்து
உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு
ஏழைகள் மட்டும்
உருத்தெரியாமல்
போருக்கு இரையாகி
மறைந்து போகிறார்கள்!
நீதி தேவதைகைகளை நீட்டுகிறாள்...

பின் போரின் மேகங்களுக்குள்
ஒளீந்து கொண்டு....
கண்களை மூடிக்கொண்டாள்.
இருந்த அனைத்தையும் கொடுத்து
பெற்றபிள்ளைகளை கைகளில் பிடித்தபடி
காப்பாற்றிவிட்டு வந்துவிடுகிறேன்
என உறுதி தந்து சென்றவர்
போன திசை மறந்தது.

காத்திருந்த கண்களில்
கண்ணீர் வற்றிப்போக,
அவர் போனவர் போனவர்தான்...
மீண்டும் வரவேயில்லை.
தப்பிப் பிழைத்தோரை
வேற்றுவன் கொல்லவில்லை...
எம்மைக் காப்பதற்காக
போர் செய்வதாக சொன்னவர்கள்
கொன்றார்கள் என்பதுதான்...
கசப்பான உண்மை.

துரோகத்தின் வாள்முனையில்
அறுபட்டுப் போனது எங்கள் வாழ்வும்
நாங்கள் சுமந்த நம்பிக்கைகளும்.
நான்கும் ஒன்றுமாக
ஐந்து உயிர்களை அள்ளிச் சென்றுவிட்டு...
என்னை மட்டும்
இந்த வெறுமை வெளியில்
ஏன் விட்டு வைத்தது இப்போர்?

நான்கு முறை கரு சுமந்து...
வயிற்று வலி பொறுத்து
வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி
கல்வி கொடுத்து வளர்த்தேனே...
அவர்களைப் போருக்காகவா?
பெற்று வளர்த்தேன்?
தப்பி ஓடியவர்களை பயமுறுத்தவா...
என் மகன்களைக் கொன்று
வெற்றுச் சடலங்களாக
வீதிகளில் வீசினீர்கள்?
பிணந்தின்னிக் கழுகுகளே!
உமக்காக நின்ற மனிதனின்
குடும்பத்தை அறுத்துக் கொல்ல
எப்படியொரு நிலைவந்தது.

எம் இரத்தத்தைத் தின்றவர்களே...
நீங்கள் தின்ற போது
சாவுகள் சுவைத்ததா?
இந்தத் துரோகத்தின் வலி
காலம் கடந்தும் உங்கள்
சந்ததிகளைச் சுடும்!
[illegible]
[illegible]
அரசுக்குத் துரோகம் இழைத்த
என் கணவர்,
பாவம் என் மகன்கள்...
உம்மைச் சிகரமாகத்
தாங்கியவரின் குடும்பம் இன்று...
வேரோடு சரிந்து சீரழிந்து போனது.

எங்காவது ஒரு மூலையில்
உயிரோடு இருப்பார்கள்...
ஏதோ ஒரு நாளில்
திரும்பி வருவார்கள் என்ற
நம்பிக்கையோடு பார்த்திருந்தேன்.
பார்த்தவர்கள் சொன்ன செய்தி
கொதிக்கும் நெருப்பை
என் மூளைக்குள் கொட்டியது.
நீங்கள் தப்பிச் செல்ல
என் பிள்ளைகளும் கணவனும்
உயிர் கொடுத்திருந்தால்
அதை 'வீரம்' என்று
பெருமிதம் கொண்டிருப்பேன்.
ஆனால்... காப்பாற்றியவர்களைக்
கொன்று தின்றுவிட்டு...
துரோகத்தைச் சாதரணமாகச் செய்தீரே.
இது எந்த அறத்தில் சேரும்?

காலம் முழுதாக மாறிவிட்டது...
இந்த உலகம் வேண்டாம்
என் பிள்ளைகளிடம்
நான் போய்விடுகிறேன்...
கொச்சைப்படுத்தப்படும் போருக்காக
உயிர் கொடுத்த உறவுகளை
நினைத்து தினமும்
மூளைச்சாவடைந்து... நோகிறேன்...
இரக்கம் கொள்ளுங்கள் என்மீது...

இந்த பூமியை என்னால்
சகித்துக்கொள்ள முடியவில்லை.
என்னைக் கருணைக் கொலை
செய்யுங்கள்
யாரேனும் இதற்கு மனுக்கொடுங்கள்..
என்னைச் சாந்தி பெறச் செய்யுங்கள்.
எனக்கு மரணம் தாருங்கள்..
என்னை அமைதிப்படுத்துங்கள்.
மூளைக்குள் ஓடும் மூட்டைப்பூச்சிகள்
மூக்குகளால் வந்து...காதுகளால்
திரிகின்றன....
இந்த வலி யாருக்கும் புரியாது..
என்னை கருணைக் கொலை
செய்யுங்கள்..
கையெடுத்துக் கெஞ்சுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media